**ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள்**

**வாழ்ந்து காட்டிய வால்மீகி ராமாயணம்**



தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தைக் கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

# ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள்

நம்மிடையே நூறு வருடங்கள் உண்மையான துறவியாக வாழ்ந்து, நமக்கு வழிகாட்டிய காஞ்சி மஹாஸ்வாமிகளை நாம் தெய்வமாகப் போற்றி வணங்குகிறோம். அவர் காட்டிய வழியில், நம் தெய்வமத புராணங்களை கற்று, தெளிந்து, கற்பித்து, அந்த ராமாயண பாகவத தர்மங்களையே தம் வாழ்க்கையாக வாழ்ந்து காட்டிய ஒரு மஹான், ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் ஆவார்.

பூர்வாச்ரமத்தில், ஆங்கரை கல்யாணராம பாகவதர் என்ற பெயரால் அறியப்பட்ட அவர், கல்வியிலும், ஆசாரத்திலும் சிறந்த ப்ராஹ்மண குடும்பத்தில், ஸ்ரீவேங்கடராம சாஸ்த்ரிகள், ஸ்ரீமதி பாலாம்பாள் என்ற தம்பதிகளுக்கு குமாரராய், 1930 ஆம் ஆண்டு அவதரித்தார். போலகம் ராமா சாஸ்த்ரிகள் போன்ற பெரியோர்களிடத்தில் நமது வேத சாஸ்த்ர புராணங்களின் உண்மைப் பொருளை கேட்டுத் தெளிந்த அவர், சென்னை வந்து சிறிது காலம் தபால் துறையில் வேலை செய்தார். முப்பதாறு வயதில் காஞ்சி பெரியவரிடம் உத்தரவு பெற்று, வேலையை விடுத்து, பின்னர் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும், பகல் முழுவதும் ராமாயண பாகவத மூல பாராயணம் செய்து வந்தார். மாலையில் அந்த புராணக் கதைகளை, அவற்றில் ஒன்றி, உலகையும் தன்னையும் மறந்து, பக்தியோடு தேனனைய வாக்கால் ப்ரவசனம் செய்து வந்தார்.

தெய்வக் கதைகளை படிப்பதும், கேட்கச் செய்வதும், தம் கடமையாக, பெரும் பேறாக எண்ணிய அவர், அதற்கு எந்த கட்டணமும் குறிப்பிட மாட்டார். மேடையில் வெறும் மனிதர்களை புகழ்ந்து பேச மாட்டார். ‘பார்த்தஸாரதி பெருமாளின் திருவடிவாரத்திலேயே இருக்க விரும்புகிறேன்’ என்று சொல்லி திருவல்லிக்கேணியிலேயே ஏழைகளுக்கு எளியவராய் வாழ்ந்து, அவர்கள் அன்போடு அளித்ததை ஏற்று, குடும்பம் நடத்தி வந்தார்.

ஒரு முறை ஹிந்து உயர்நிலைப் பள்ளியில் ஸ்வாமிகள் உபந்நியாஸம் முடியும் நேரத்தில், ஒரு அன்பர் முன் வந்து ‘இப்போ நாமெல்லாம் ஆனந்தப் படும்படி ஆயிரக்கணக்கான ச்லோகங்களைச் சொல்லி உபந்யாஸம் செய்த கல்யாணராம பாகவதருக்கு மிகுந்த கடன் தொல்லை இருக்கிறது. நீங்கள் எல்லாம் தாராளமாக தட்டில் பணம் போட வேண்டும்’ என்று சொல்கிறார். ஸ்வாமிகள் அவரைத் தடுத்து

धनेन न रमामहे खल जनान् न सेवामहे
न चापलं अयामहे भवभयान्न दूयामहे ।
स्थिरां तनुमहेतरां मनसि किंच काञ्चीरत–
स्मरान्तक–कुटुम्बिनी चरण पल्लवोपासनाम् ॥

என்ற மூகபஞ்சசதீ ச்லோகத்தை சொல்லி 'ராமாயண பாகவதம் சொல்லுவதும், கேட்பதும் ஜன்ம லாபத்திற்காகத் தானே தவிர பணம் சம்பாதிக்க இல்லை. நான் கூடாது என்று சொல்லி இருந்தும் இவர் சிலது பேசிவிட்டார். அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்.' என்று கூறினார்.

பின்னர் அன்று இரவில் அந்த அன்பரும் மற்ற நண்பர்களும் ஸ்வாமிகளைப் பார்த்து 'நீ என்ன த்யாகராஜ ஸ்வாமிகள் என்ற எண்ணமோ?' என்று கேட்க ஸ்வாமிகள் 'நான் த்யாகராஜ ஸ்வாமிகள் இல்லை. ஆனா அவரைப் போல ஆகவேண்டும் என்று ஆசைப் படுகிறேன்.' என்று பணிவாக கூறினார். அப்போது ஒரு புது மனிதர் அங்கு வந்து ஸ்வாமிகளை வணங்கி, 'நான் காஞ்சீபுரத்து ஆசாமி. இன்று காமாக்ஷி அம்பாள் மீது மூகபஞ்சசதீ ச்லோகம் சொல்லி என் மனத்தை குளிர வைத்து விட்டீர்கள்' என்று சொல்லிவிட்டுச் செல்ல, ஸ்வாமிகளின் நண்பர்களும் அவரை வணங்கி, 'காமாக்ஷி தேவியின் அநுக்ரஹம் உங்களுக்கு இருக்கிறது. நீங்களும் த்யாகராஜ ஸ்வாமிகளைப் போல விளங்குவீர்கள்' என்று வாழ்த்தி விட்டுச் செல்கிறார்கள்.

அதுபோலவே ஸ்வாமிகள் ராமாயணத்தின் ஸாரமாகவே வாழ்ந்தார். அதை இந்த புஸ்தகத்தில் பேச முயற்சி செய்திருக்கிறேன். ஸ்ரீமத்பாகவத பக்தியினால் ஞான வைராக்யத்தோடு விளங்கினார். உடல் சுகத்தையும், குடும்ப நலத்தையும், பணத்தையும், புகழையும் துச்சமாக மதித்து, பகவானின் புகழ் பாடுவதையே தம் புனிதப் பணியாக வாழ்நாள் முழுவதும் மேற்கொண்டார்.

இத்தகைய ஸ்வாமிகளின் தர்மப் பற்றைக் கண்டு காஞ்சி பெரியவர் மிக மகிழ்ந்து, 19 வருடங்கள் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும், கோகுலாஷ்டமியை முன்னிட்டு ஸ்வாமிகளை தாம் இருந்த இடத்திற்கு அழைத்து வரச் செய்து, ஏழு நாட்கள் பாகவதத்தை படிக்கச் செய்து, தானே அருகில் அமர்ந்து கேட்டு ரசித்தார். ஸ்ரீராமர்

தன் கதையை தானே கேட்டது போல, க்ருஷ்ண பகவான், தானே தன் கதையை கேட்க விரும்பினார் போலும்! ‘பாகவத ஸப்தாஹம் மலை போன்ற கார்யம். பாகவதருக்கு தான் ச்ரமம். நமக்கெல்லாம் ஆனந்தம். படனம் மதுரம். ப்ரவசனம் மதுரதரம்’ என்று மஹாபெரியவா ஸ்வாமிகளை வாயார வாழ்த்தியுள்ளார்.

‘எத்தனை கஷ்டம் இருந்தாலும் பொருட்படுத்தாமல், என் பேச்சைக் கேட்டு நடப்பவர்’ ‘ராமாயண பாகவதத்தை விலை பேசாத ஒரு மஹான்’ ‘தம் வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டவர். அவருக்கு மீண்டும் பிறவி கிடையாது’ என்று இப்படி பல முறை பல விதங்களில் மஹாபெரியவாள், நம் ஸ்வாமிகளைப் பற்றி அநுக்ரஹித்துள்ளார். மஹாபெரியவாளுடைய பூர்வாச்ரம தம்பியாக சதாசிவம் என்ற பெயரோடு அவதரித்து, முற்றும் துறந்த துறவியாக விளங்கிய ஸ்ரீசிவன் சார் ‘திருவல்லிக்கேணி ஸ்வாமிகள் ஒரு உண்மையான (genuine) ஸந்நியாஸி. அவரை தியானம் பண்ணிக் கொண்டிருந்தாலே மேலே போகலாம்.’ என்று அநுக்ரஹித்துள்ளார்.

இத்தகைய தூய்மையான தவ வாழ்க்கையாலும், மஹனீயர்களின் ஆசியாலும், கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் பல ஸித்திகளை அடைந்து, நிக்ரஹானுக்ரஹ மஹானாய் விளங்கினார். அவர் சொன்ன வார்த்தைகள், ஈச்வர வாக்காய் பலித்தது. ஆனால், அந்த ஸித்திகளை மறைத்துக் கொண்டு, அதனால் கூட்டம், பணம் எதுவும் வந்து விடாமல் இருக்க, மஹாபெரியவாளிடம் ஒவ்வொரு நாளும் ‘க்யாதி லாப பூஜையிலிருந்து என்னைக் காப்பாற்றி, உங்கள் பாத பக்தியை தரவேண்டும்.’ என்று வேண்டி வந்தார். அப்படி உத்தம பக்தியால் ஞான வைரக்யத்தை பெற்று ஜீவன் முக்தராய் ப்ரகாசித்த அந்த மஹான், முடிவில் ஸந்நியாஸ ஆச்ரமத்தை ஏற்றார். படித்தவர், பாமரர், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி தம்மிடம் வந்த அனைவருக்கும் இறைவன் பேரால் ஆறுதல் அளித்தார்.

‘சரவணபவ, சிவ, ராம, கோவிந்த, நாராயண, மஹாதேவ’ என்ற பகவானின் நாமங்களை தனிமையில் மனமுருகி ஜபித்து வந்தாலே, பகவத் பக்தி ஏற்பட்டு, இடையறாத பஜனத்தினாலேயே பக்தியின் வளர்ச்சியும், உலக விஷயங்களில் இருந்து விரக்தியும், பகவானுடைய ஞானத்தையும் அடையலாம்’ என்று தன் உன்னதமான வாழ்க்கையினால் வாழ்ந்து காட்டி உபதேசித்த, நம் ஸத்குரு, ஸ்ரீகோவிந்த தாமோதர ஸ்வாமிகளின் நினைவைப் போற்றுவோம்.

# முன்னுரை

Many times we feel that we are getting all blessings in our life just by the grace of Guru (God). ஆதியொடு அந்தம் ஆகிய நலங்கள் ஆறுமுகம் என்ற தெளிவு லேசாக தோன்றி மறைந்து விடுகிறது.

या या साधन सम्पत्तिः पुरुषार्थ चतुष्टये । तया विना तदाप्नोति नरो नारायणश्रयः ॥

புண்யம், பணம், காமம், மோக்ஷம் என்ற புருஷார்த்தங்கள், பகவானை ஆச்ரயித்தவனுக்கு, அவற்றை அடைய என்ன ஸாதனங்கள் தேவையோ அந்த புத்தி, படிப்பு, பணம், செல்வாக்கு அதெல்லாம் இல்லாமலே கிடைக்கும்.

இப்ப காமாக்ஷி அம்பாளை தரிசிக்க வேண்டுமென்றால், காஞ்சீபுரம் போக பஸ் சார்ஜ், சாப்பாடு இப்படி யோசிக்கணம். ஆனா தெய்வானுக்ரஹம் இருந்தா, நாம் நினைக்கும் போதே யாரோ வந்து கூட்டிண்டு போயிடுவா. அதுபோல பணத்தேவை இருக்கும் போது எல்லா செல்வங்களுக்கும் அதிபதியான பகவான், நம் சிறு தேவைகளுக்கு பணத்தை நம்மிடம் சேர்த்து வைப்பார். காமம் - pain and pleasure chase and cancel each other. So ஆசைகளை பூர்த்தி பண்ணிக்க அலைவது நம்முடைய அறியாமை. வேணுமோ வேண்டாமோ சுக துக்கங்கள் அந்தந்த நேரத்தில் நமக்கு வந்து சேரும். பக்தர்களின் காமங்களை பகவான் பூர்த்தி பண்ணாமலில்லை.

மோக்ஷத்துக்கு புலன்களை அடக்கி, யோகம் பயின்று, ஸந்நியாஸம் வாங்கிண்டு, தண்ட கமண்டலம் வெச்சுண்டு, கீதை படிச்சு, உலகம் பொய், பிரம்மமே சத்யம் என்ற ஞானத்தை, தெய்வானுக்ரஹம் இருந்தால் பகவானே கருணையால் அளிப்பார். மன இருளை ஞான தீபத்தால் போக்குவார். கீதையில் பகவானே அப்படி சொல்றார்.

मच्चित्ता मद्गतप्राणाः बोधयन्तः परस्परम् । कथयन्तश्च माम् नित्यम् तुष्यन्ति च रमन्ति च ॥

तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम् । ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते ॥

तेषामेव अनुकम्पार्थमहमज्ञानजं तमः । नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता॥

கோவிந்த தாமோதர ஸ்வாமிகள், இந்த 3 ஸ்லோகங்கள் தான் என் வாழ்வின் ஆதாரம் (motto) என்று சொல்வார்.

அருணகிரிநாதர் அநுக்ரஹித்த கடைக்கண்ணியல் வகுப்பு என்று ஒண்ணு இருக்கு. ‘அலைகடல் வளைந்துடுந்த’ என்று ஆரம்பிக்கும்.

அதுல message இதுதான் - மயிலையும் அவன் திருக்கை அயிலையும் அவன் கடைக்கண் இயலையும் நினைந்திருக்க வாருமே. வயிறு வளர்க்க நீங்கள் நம்பி இருக்கும் வித்தையை விட்டு விடுங்கள். நம் முருகனைப் பாடுங்கள். உங்களுக்கு என்னவெல்லாம் கிடைக்கும் என்று சொல்கிறேன் - இந்திரனுக்கும் குபேரனுக்கும் ராஜாவாகலாம், ஐராவதத்திலும் புஷ்பக விமானத்திலும் ஏறலாம், எதிரிகளை வெல்லலாம், தனியொரு ஞானம் பெறலாம், புகழ் பெறலாம், யமபடரைத் துரத்தலாம், முருகனோடு ஒருவன் என்று உணர்ச்சி கூடலாம், பிறவித் தளையிலிருந்து விடுபடலாம்.

நம் கோவிந்த தாமோதர ஸ்வாமிகளைப் பேசறதும் (ராமாயணம், திருப்புகழ் எல்லாம் எனக்கு quotation குடுக்கத் தான். என் subject எப்பவும் ஸ்வாமிகள் தான்) இதே பலன்களைக் தரும் என்ற conviction எனக்கு வந்துவிட்டால், நான் என் குருவின் குணங்களைப் பாடிக் கொண்டே இருப்பேன். அப்படி பாடிக் கொண்டே இருந்தால், அவருடைய அனுக்ரஹத்திற்கு என்றும் பாத்ரமாகி இருப்பேன்.

முன்பு அவருடைய அநுக்ரஹத்தால், 27 நாளுக்கு ஒரு முறை வால்மீகி ராமாயணம் படிக்கும் போது, அவரிடம் ராமாயணத்தில் 27 தர்மங்கள் என்று இதை சொல்லிக் காண்பித்தேன். ‘அழகாய் இருக்கிறது. ராமாயணம் தங்கக் கட்டி. இப்படி பலவிதமாய் நகை பண்ணி ராமருக்கு போடலாம் என்றார். ஆனால் மூலத்தை முழுக்க படிப்பதை விட்டுவிடாதே’ என்று சொன்னார். ராமாயண text க்கே தன் வாழ்க்கையையே அர்ப்பணம் பண்ணினவர் அவர். அதைப் படிப்பது, அப்படியே அந்த கதையை சொல்வது. அது தான் பரம க்ஷேமம் என்று உணர்ந்ததால் அப்படி சொன்னார். இந்த book நம் ஸத்குரு மஹிமையை மழலை மொழியால் பேசும் முயற்சி. அவர் கருணையால் இதையும் ஏற்பார் என்று என் நம்பிக்கை.

இந்த புஸ்தகத்தை படிக்கும் போது, எதாவது உங்களுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டால், ஸ்வாமிகள் சொன்ன படி 27 நாளில் ராமாயணம் படிக்கும் என் முயற்சி என்ற வித்திற்கு, உங்கள் த்ருப்தியாகிய உணர்ச்சி உரமாகும். குரு அனுக்ரஹமாகிய ஒளியும் கிடைத்துவிடும்.

ஸ்வாமிகள் வால்மீகி ராமாயணத்தை எப்படி உபாசனை செய்தார் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். ராமாயண பாகவத புஸ்தகங்களை casual ஆக தரையில் கூட வைக்க மாட்டார். ரொம்ப அன்போடு பட்டாபிஷேகத்தின் போது அந்த புஸ்தகத்திற்கு பூஜை செய்வார். அவருக்குள் ராமாயண பாகவதம் என்ற அமிர்தம் நிரம்பி இருந்தது. அவர் ஸ்லோகங்கள் சொல்லும் போதும், அந்த கதையை எடுத்து பேசும் போதும் அந்த அமிர்தம் ததும்பி வழிவது போல அவ்வளவு இனிமையாக இருக்கும். அதை பருகின பேர்களால் அதை மறக்க முடியாது. ராமாயணம் முழுக்க அவருக்கு மனதில் இருந்தது. நவாஹ ப்ரவசனத்தில் ஆயிரக்கணக்கான ச்லோகங்கள் எடுத்துச் சொல்லுவார்.

ஹனுமார் கடலைத் தாண்டும் ஸுந்தரகாண்டம் முதல் ஸர்கம் பெரிய ஸர்கம். அதை நடுவில் நிறுத்தாமல் படித்து முடிப்பார். ஹனுமாரை அந்தரத்தில் விடக்கூடாது என்பார். ஜடாயு விழுந்த பின், ராமர் வந்து மோக்ஷம் குடுக்கும் வரை, தசரதர் பரகதி அடைந்த பின் பரதன் வந்து ஸம்ஸ்காரம் பண்ணும் வரை, ராமர் ‘இன்று ராவணனை வீழ்த்துவேன்’ என்று சபதம் செய்தபின் அவனை வதம் செய்யும் வரை, இப்படி பல ஸர்கங்கள் சேர்த்தே படிப்பார். அவர் கண் முன்னால் அந்த ஜடாயு வீழ்ந்து கிடக்கும் போது, அவரால் எழுந்து போய் சாப்பிட முடியவில்லை. அப்படி அந்த பாவத்திற்குள் (bhavam) புகுந்து விடுவார். ‘எனக்காக இந்த பக்ஷி உயிரையே விட்டு விட்டதே’ என்ற இடத்தில் ராமராக இருந்து கதறுவார். ஜடாயுவாக இருந்து உயிரே போனாலும் பரவாயில்லை என்று மார்பு வலியை பொறுத்துக் கொண்டு மேலும் படிப்பார். அப்படி ஒரு sincerity and dedication!

ஒரு ஆத்தில் ‘ஸுந்தரகாண்ட முடிவில் யுத்த காண்ட முதல் ஸர்கம் (ராமர் ஹனுமாரை ஆலிங்கனம் செய்துகொண்டு நன்றியோடு அவரை பூஜிக்கும் இடம்) படிக்க முடியுமா, எங்க அப்பா அப்படி படிப்பார்’ என்று கேட்ட போது ‘ஆஹா! இது எவ்வளவு அழகு. இவ்வளவு நாள் தெரியாமல் போச்சே! இன்னியிலிருந்து எப்ப ஸுந்தரகாண்டம் படித்தாலும், யுத்த காண்டம் முதல் ஸர்கம் சேர்த்தே படிப்பேன்’ என்று சொல்லி அப்படியே செய்தார். இவர் ஸுந்தர காண்டம் படிச்சு முடிச்ச ஒவ்வொரு தடவையும் ஸ்ரீராமருடைய ஆலிங்கனத்தை உணர்ந்திருப்பார் என்பதில் ஸந்தேகமே இல்லை. अपराजित पिङ्गाक्ष नमस्ते रामपूजित என்ற மந்த்ரத்திற்கு பொருள் நம் ஸ்வாமிகள் தானே! (ராமபூஜித என்பதற்கு ராமரால் பூஜிக்கப் பட்டவர் என்று பொருள்.)

## பாலகாண்டம்

### 1. 'பகவான்னு ஒருத்தர் இருக்கார். அவர் கருணாமூர்த்தி' என்பதை மஹான்கள் நமக்கு உணர்த்துகிறார்கள்

வால்மீகி முனிவர் நாரத மஹரிஷியிடம் 'இந்த உலகத்தில் சத்யம், தர்மம், கல்வி, கேள்வி, வீரம், அழகு, ஒழுக்கம், பணிவு, இப்படி எல்லா நல்ல குணங்களும் கொண்ட மனிதர் யாராவது உண்டா?' என்று கேட்கிறார். நாரதர் ராமர் என்ற இக்ஷ்வாகு குல மன்னர் அப்படிப் பட்டவர் என்று அவருடைய சரிதத்தை சொல்கிறார்.

பிறகு வால்மீகி முனிவர், ப்ரம்ம தேவரின் ஆணையின்படி அந்த ராம சரித்திரத்தை ஞான திருஷ்டியால் கண்டு, விஸ்தாரமாக ஒரு காவியமாய் படைக்கிறார். அவர் அந்த ராமாயணத்தை லவ குசர்களுக்கு சொல்லித் தருகிறார். அவா ரெண்டு பேரும் ராமருக்கே அதை அச்வமேத யாக மண்டபத்தில் பாடிக் காண்பிக்கிறார்கள்.

தசரதரின் நீதி தவறாத ஆட்சி, மக்களுடைய மேன்மைக் குணங்கள் இவற்றை முதலில் சொல்லி, தசரதர் ரிஷ்யச்ருங்கரை அழைத்து வந்து அச்வமேத யாகமும் புத்ரகாமேஷ்டியும் செய்து, அதன் முடிவில் பாயஸப் ப்ரஸாதம் பெற்று கௌஸல்யை, ஸுமித்ரை, கைகேயி என்ற மூன்று மனைவிகளுக்கு அதை பகிர்ந்து அளித்ததையும் சொல்கிறார்.

விஷ்ணு பகவான் தேவர்களுக்கு ராவணனிடமிருந்து அபயம் குடுத்து, அதன்படி, துஷ்ட சம்ஹாரம் சிஷ்ட சம்ரக்ஷணம் செய்வதற்காக, கர்ப்பவாசம் இருந்து பூமியில், ராம லக்ஷ்மண பரத சத்ருக்ணர்களாய் அவதாரம் செய்கிறார். அவருக்கு ஸஹாயம் பண்ணுவதற்காக தேவர்கள், வானரர்களையும் கரடிகளையும் ச்ருஷ்டி பண்ணுகிறார்கள். ராமாவதாரம் முடிஞ்சாலும், அதை எல்லாரும் இன்னிக்கும் படிச்சுக் கேட்டுக் கடைத்தேற வேண்டி, கருணையோடு, வால்மீகி முனிவர் வாயிலாக அதை ராமாயண காவ்யமாக வெளிப்படுத்தி இருக்கார்.

---

நான் சின்ன வயசுலேர்ந்து எல்லாத்தையும் question பண்ணுவேன். Agnostic. பகவத் விஷயமாக பல புஸ்தகங்கள் படித்தேன். பல பெரியவர்களிடம் பல கேள்விகள் கேட்டேன். எனக்கு த்ருப்தியான பதில் கிடைக்கவில்லை. தெய்வீகத்தை சாமர்த்யத்தால் புரிந்து கொள்ள முடியாது என்பதை மட்டும் உணர்ந்தேன்.

ஸ்வாமிகள் கிட்ட பழகின புதுசுல பல கேள்விகள் இந்த மாதிரி கேட்டிருக்கேன். "பகவான் கருணைக் கடல் என்றால் ஏன் எனக்கு இவ்வளவு கஷ்டம் வரது?" னு கேட்டேன். "கடலை பார்த்தவா அப்படி சொல்றா. டெல்லிக்காரா, பீச்சே பார்க்காதவாளுக்கு அது சொன்னாப் புரியுமா? ஒனக்கு வேணும்னா பக்கத்துல வந்து பாரு. அப்ப புரியும்" என்றார். அவருக்கு பகவானைப் பத்தி ஸந்தேகமற தெரிந்து இருந்தது. ஓரளவு sincere ஆ கேட்டால் நமக்கும் புரிய வைக்க try பண்ணினார்.

"வாலி வதம் பண்ணினது சரியா?" என்று கேட்டேன். "இந்த மாதிரி casual ஆ question பண்றவாளுக்கு நான் பதில் சொல்ல மாட்டேன். ஒனக்கு வேணும்னா பக்தியோடு ராமாயணத்தை முழுக்க படி. அப்பறம் கேளு சொல்றேன்." என்றார்.

அவர் சொன்னபடி கேட்டு பணிவோடு நெருங்கியதில் ‘பகவான் என்று ஒருத்தர் இருக்க வேண்டும், அவர் கருணை கிடைத்து விட்டால் வாழ்க்கை அவ்வளவு பாரமாய் இல்லாமல் தள்ளி விடலாம்’ என்று லேசாய் புரியறது. ஏனென்றால் ஸ்வாமிகள் னு ஒருத்தர் இருந்தார். அவர் ஸத்தியமே வடிவமாக இருந்தார். எங்கிட்ட ரொம்ப கருணையோடும் இருந்தார். அதை நினைத்தால் இன்னிக்கும் ரொம்ப ஆறுதலாகவும் தைரியம் குடுப்பதாகவும் இருக்கிறது.

நான் ஏன் என்னைப் பற்றி சொல்கிறேன் என்றால், I am a sample of this generation. English educated, trained in scientific querying, greedy. Each of this is a hinderence to religious progress. பணப் பெருக்கமும், நவீன விக்ஞானமும் இக்காலத்தில் தெய்வத்தை முகாந்திரத்தோடு உணர முடியாமல் செய்துவிட்டது. புண்ய கார்யங்கள் எல்லாம் commercialize ஆகி விட்டன. ஏதோ பாக்ய வசத்தால், நல்ல அம்மா அப்பாவுக்கு பிள்ளையாய் பிறந்து, அவா பணத்தில் உயரத்தான் மனித வாழ்க்கை என்பது போல, பேராசை எனும் பிணியில் பிணிபட்டு அலைபவர்களாய் இல்லாமல், தெய்வ பக்தியை கடமையாய் செய்து, அதன் மூலம் ஒரு சந்துஷ்டியோடு விளங்குவதைப் பார்த்து, இதுவே இவ்வளவு ஆனந்தமாக இருக்குமானால், இதன் முடிந்த முடிவான நிலை எப்படி இருக்கும் என்று தேடும் போது, எனக்கு கிடைத்த பதில் நம் ஸ்வாமிகள். உன்னத பக்தியால், பகவானுடைய சரித்ரம், ரூபம், நாமம் இவற்றின் மூலமே ‘இதோ தெய்வம்’ என்று நினைக்கும் அளவுக்கு தெய்வ பாசத்தில் மூழ்கி இருந்த அவர் தர்சனத்தால் தான் எனக்கும் கூட தெய்வ நம்பிக்கை ஏற்பட்டது.

என்னைப் பொறுத்த வரை கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் நாம் கடைத்தேற அவதாரித்த மகான். சுகர் வ்யாசரைப் போல விஷ்ணு பகவானின் அம்சம். ராமாயண பாகவதம் படிச்சுண்டு இருந்ததால் அப்படி சொல்றேன். அரசடி கற்பக விநாயகர், அண்ணாமலையார், காமாக்ஷித் தாயார், திருத்தணி முருகன், பார்த்தஸாரதி, ப்ரத்யக்ஷ தெய்வமான ஸூர்ய பகவான் எல்லாம் அவர் தான். ‘सर्व देव नमस्कार: केशवम् प्रति गच्छति’ என்பது போல, இதில் எந்த தெய்வத்தைப் ப்ரீதி செய்தாலும் அவர் ஸந்தோஷப் படுவதைப் பார்த்திருக்கிறோம்.

அவரை தரிசித்தவர்கள் பாக்யசாலிகள். அவருடைய கதையை பேசினால் ராமகதையினால் எப்படியோ அப்படி பாபம் போகும். புண்யம் வரும். இந்த கலியில் இவ்வளவு தான் impact, வெளியில தெரியற மாதிரி காமிக்கலாம் என்பதால் அவர் அப்படி இருந்துட்டு போயிட்டார். ஆனா அதைப் புரிஞ்சுண்டு, நாம் கிடைச்ச வாய்ப்பை நழுவ விடாமல், இங்கிருக்கும் போது அவரை அநுபவித்து விட்டு, முடிவில் அவர்கிட்ட போயிடணம் என்பது என் ப்ரார்த்தனை.

ஒரு மஹானின் ஸங்கம் எவரையும் தூய்மைபடுத்தும். தன்னலமற்ற உத்தமர்களான ஸாதுக்கள், அவரை வணங்கி, அவர் சொல்படி நடந்து, தூய்மையில் உயர்ந்து ஸித்தி அடைவார்கள். விவேகிகள், மஹானுடைய மேன்மையை உணர்ந்து அவரிடம் பக்தி செய்து, தன்னலத்தை விட்டு ஸாதுக்களாவார்கள். பாமரர்களும் பாபிகளும் கூட, ஒரு மஹானிடம் பழகும் போது, தம் பாபச் செயல்களை விடமுடியவில்லையானாலும், அவரிடமும், அவர் செய்த ஸதுபதேசத்திலும் உதாசீனமாக இருந்தாலும் கூட, அவருடைய தர்சனத்தால், அவரை வணங்கியதால், சில தீய வினைகள் விலகி, நன்மைகளை அடைவார்கள். அப்படி அவரோடு பழகும் போதும், இப்போதும் பக்தியோ, படிப்போ, ஆசாரமோ, பணிவோ, ஸத்யமோ எதுவுமே இல்லாத போதும், அவரைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தால் பகவான் வழிகாட்டுவார், என்று நம்பிக் கொண்டு, ஸ்வாமிகளின் கருணையின் மேல் நம்பிக்கையோடு, வெறும் ஆசையினால் அவரைப் பேசுகிறேன். ஏனென்றால்,

तदेव सत्यं तदु हैव मङ्गळं तदेव पुण्यं भगवद्गुणोदयम् ।
तदेव रम्यं रुचिरं नवं नवं तदेव शश्वन्मनसो महोत्सवम् ॥
तदेव शोकार्णव शोषणं नृणां यदुत्तमश्लोक यशोऽनुगीयते ।

**2. முயற்சித் திருவினையாக்கும்; குரு அனுக்ரஹம் இருந்தால் தெய்வ பலம் கூடி அரிய கார்யங்கள் எளிதில் கைகூடும்.**

விச்வாமித்ரர் ஒரு யாகத்தை ராக்ஷஸர்கள் ஹிம்ஸையால் முடிக்க முடியவில்லை. தசரதர் கிட்ட யாகத்தை ரக்ஷிக்க ராமனைத் தரும்படி கேட்டு, கோச்சுக்கற மாதிரி நடிச்சு, ராமரைப் பெற்றுக் கொண்டு, அவருக்கு பலை அதிபலை மந்த்ரங்களை சொல்லி வெச்சு, ராமர் தாடகை வதம் செய்த பின், அவருக்கு அஸ்த்ர வித்யைகளை சொல்லிக் குடுத்து, தன் யாகத்தை முடித்து சித்தி அடைகிறார்.

ஸித்தாஸ்ரமத்திலிருந்து கிளம்பி மிதிலை செல்லும் வழியில் கங்கைக் கரையில் விச்வாமித்ரர் குழந்தைகளுக்கு குமார ஸம்பவம், பகீரதன் தபஸ், க்ஷீராப்தி மதனம் முதலிய கதைகளை சொல்கிறார்.

பகீரதன் வெகு முயற்சி பண்ணி, கங்கா தேவியை பூமிக்கும் பாதாளலோகத்துக்கும் கொண்டு போய் தன் முன்னோர்களான ஸகர புத்திரர்களை கரை சேர்க்கிறான். பகீரதன் தபஸில் மகிழ்ந்த பரமேச்வரன், கங்கையின் வேகத்தை தன் தலையில் தாங்கி பூமியில் விடுகிறார். அவன் முயற்சியால் நமக்கு புனித கங்கை நதி கிடைத்தது.

தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெறுகிறார்கள். பரமேச்வரன் ஹாலாஹல விஷத்தை சாப்பிட்டு மூவுலகையும் காக்கிறார். விஷ்ணு பகவான் கூர்ம அவதாரம், மோஹினி அவதாரம் எடுத்து தேவர்களுக்கு அமிர்தம் கிடைக்கும்படியாகச் செய்கிறார்.

---

ஸ்வாமிகள் இந்த 3rd value below (தூய்மையில் உயர இடையறாது பகவானை பஜித்தல்) என்ற கார்யத்தில் life long ஈடுபட்டு இருந்தார். ஆனா விச்வாமித்ரர் ப்ரஹ்மரிஷி ஆன பின்பும் ஒரு particular யாகம் பண்ணி சித்தி அடைய வேண்டும் என்று வ்யாஜம் ஏற்படுத்திக் கொண்டு, அதற்கு ஹேதுவாக ராமரைப் கேட்டு வாங்கிண்டு, அவருக்கு அஸ்த்ர வித்தைகளை சொல்லிக் குடுத்து, பின் யாகரக்ஷணத்துக்கு ப்ரதியாக ஸீதாதேவியை ராமபிரானோடு சேர்த்து வெச்சுட்டு, அப்பறம் பகவானிடம் கலந்து விடுகிறார்.

அது போல, ஸ்வாமிகள், தன் வாழ்நாள் முழுவதும் பகவானை வழிபட்டு வந்தார். அதற்கு ஆதரவு காட்டி, அண்டி வணங்கின பேருக்கு, எத்தனை முறை, நம் உலகியல் முயற்சிகளுக்கு தெய்வ

பலத்தை சேர்த்து வெச்சுருக்கார்! - எனக்கு வேலை கிடைக்கிறத்துக்கு, நான் PMP பாஸ் பண்றத்துக்கு, கல்யாணம் ஆகிறத்துக்கு, குழந்தை பிறக்கறத்துக்கு, அவாளை ஸ்கூல் சேக்கறதுக்கு. I am sure that many of you can list such projects where Swamigal's grace made the difference. Please make that list and talk about it to your children, near and dear. We owe it to ourselves.

அவர் இருக்கும் போதே 'குருவை நேராகவே ஸ்தோத்ரம் பண்ணலாம்' என்ற சாஸ்த்ரப்படி நாம் அவரை கொண்டாடி இருக்க வேண்டும். அப்ப நமக்கு பண்ணத் தெரியவில்லை. ஆனால் இப்ப பண்ணுவோம். அது நம் கடமை. அவர் ஞானி ஆனதால், பாப புண்யங்கள் அவருக்கு ஒட்டாது. அவரை ஸ்தோத்ரம் பண்ணினால், அவருடைய அபார புண்யத்திலிருந்து கொஞ்சம் நமக்குக் கிடைக்கும். அது நமக்கு எல்லாமே குடுக்கும். ஆனா இதுல ஒரு விஷயம் ஜாக்ரதையா இருக்கணம். வீடு கட்டினா, ஒரு மணி நேரம் வீட்டுப் பெருமையை பேசிட்டு, tour எல்லாம் முடிச்சுட்டு, ஒரு வார்த்தை 'எல்லாம் ஸ்வாமிகள் அருள்' னு சொன்னா போறாது. அவர் மஹிமையை பேசும் போது அவர் மஹிமையை நிறைய பேசணம். அது கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் ஸ்தோத்ரமா இருக்கணம். நம்ம ஸ்தோத்ரமா ஆகிவிடக் கூடாது.

ஸ்வாமிகளுடைய அதிஷ்டானம் உருவாகி, பூஜைகள், ஆராதனைகள் நடக்கும் விதத்தை நினைத்துப் பார்த்தால் - மனித முயற்சிக்கு மேல் தெய்வ பலம் என்பது கண்கூடாகப் புரியுமே! காவேரிக் கரையில் தாமே தம் அதிஷ்டானத்துக்கு இடம் குறித்ததும், யாரையும் கேட்காமல் பணம் வந்து சேர்ந்ததும், ஸ்வாமிகளை பார்த்தே இராத ஒரு ஸ்தபதி கனவில் கண்டபடி ஷட்கோண மண்டபம் அமைத்து யோகிகளின் சித்திரங்கள் வரைந்து குடுத்ததும், பழூர் ஜனங்கள் பக்தியோடு அவரை பூஜிப்பதும், வரும் பக்தர்களை அவர்கள் அன்போடு உபசரிப்பதும், அந்த மஹானின் மஹிமையை இன்றும் உலகிற்கு பறைச்சாற்றுகிறதே!

**3. மனிதப் பிறப்பின் பயன் தூய்மையில் உயர்வது தான், அதற்கு நாம் செய்யக் கூடிய புருஷப் ப்ரயத்னம் பகவத் பஜனம் மட்டுமே.**

அஹல்யையும் இந்த்ரனும் அழகும் பதவியும் இருக்கும் மோஹத்தில் தப்பு பண்ணி கௌதமர் கோபத்துக்கு ஆளகிறார்கள். ராமர் திருவடி பட்டு அஹல்யை சாப விமோசனம் பெறுகிறாள்.

விச்வாமித்ரர் கடும் தவம் செய்து, காமக் க்ரோதங்களை ஜெயித்து, படிப்படியாக தூய்மையில் உயர்ந்து ப்ரஹ்மரிஷி ஆகிறார்.

ஸீதா தேவி ராமபிரானை கணவனாக, குருவாக அடைந்து அந்த ஸம்ஸ்காரத்தால் தூய்மை அடைகிறாள். (ப்ரஹ்மசாரிக்கு உபநயனம் போல கன்னிகைக்கு விவாஹம்).

பரசுராமர் தன் ஆவேசத்தை ராமரிடம் சமர்ப்பித்து மீண்டும் சாந்தமான ரிஷி ஆகிறார். (விஷ்ணுவின் ஆவேசம் அவருக்குள் புகுந்ததால் அதை ஒரு ஆவேச அவதாரம் என்பார்கள்)

---------------------------------------------

"जीवस्य तत्व जिज्ञासा" - "உண்மைப் பொருளை உணர்வது தான் வாழ்வின் பயன்" என்று இந்த உபநிஷத் வாக்யத்தை நிறைய தடவை ஸ்வாமிகள் சொல்லி இருக்கார். சிவன் ஸார் அதையே ’மனிதப் பிறவி தூய்மையில் உயர்வதற்காக அருளப்படுகிறதே அன்றி பணத்தில் உயர்வதற்கு அல்ல’ என்று சொல்வார்.

அதற்கு இக்கலியில் பகவத் பக்தியே போதும், யோக யாகமெல்லாம் வேண்டாம், முடிந்த முடிவான ஞானம் அடையலாம் என்பதை ஸ்வாமிகள் நிரூபித்துக் காட்டினார். "கமலாம்பாம் பஜரே, கல்பித மாயா கார்யம் த்யஜரே" என்று தீக்ஷிதர் பாடியது போல, வாழ்க்கையின் கேந்திர பாடமான "பகவானை வழிபடுவதைத் தவிர மற்ற அனைத்தும் பயனற்றவை" என்பதை ஸ்வாமிகள் தம் வாழ்வின் மூலம் நமக்கு உணர்த்தினார். அவர் வேலையை விட்டுட்டு ராமாயண பாகவதமே படிச்சுண்டு இருக்கலாம் என்று தீர்மானம் பண்ணின போது அவருக்கு நிலபுலம், சொத்து ஒண்ணும் கிடையாது. சுத்தி இருக்கறவாளும் வசதி படைத்தவா கிடையாது. ராமர் காப்பாத்துவார், இது தான் கர்தவ்யம் (பண்ண வேண்டிய கார்யம்) னு எவ்வளவு strong நம்பிக்கை இருந்தா அந்த முடிவு எடுத்திருக்க முடியும்! அந்த முடிவிலிருந்து திரும்ப உலகியலுக்கு போகவே இல்லையே!

ஆனால் கருணையினால் தம்மிடம் உலகியல் ப்ரார்த்தனைகளோடு வந்தவர்களின் முயற்சிகளுக்கு, தெய்வ பலத்தைக் கூட்டி வைத்தார். அதோடு "பக்தி விரக்தி ஞான த்வார முக்தி அளிக்கும் ராம க்ருஷ்ண கோவிந்த என்ற நாமப் ப்ரயாகையில் ஆனந்தமாய் ஸ்னானம் செய்யுங்கள்" என்று தம்மை வணங்கின எவருக்கும், பணத்தால் பாராபட்சம் பார்க்காமல், தான் கடும் தவம் செய்து, ஸ்வாநுபவத்தால் உணர்ந்த அந்த உண்மையையும் கூடவே உபதேசித்தார்.

விச்வநாத ஐயர் கடைசி காலத்தில் ச்ரமப் பட்டு படியேறி வருவார். ஸ்வாமிகள் ‘நீங்க தான் நிறைய தடவை ராமாயணம் கேட்டுருக்கேளே. நீங்களே படிச்சுண்டு இருந்தாலே போறுமே? ஏன் ச்ரமப்படறேள்?’ என்று கேப்பார். விச்வநாத ஐயர் சொல்வார் - ‘நான் வரது ஒங்களோட zeal, faith இதெல்லம் பார்க்கத் தான். பாடம் கேக்க மட்டும் இல்லை’ என்பார். The zeal and faith Swamigal had in the very process of repeatedly reading the holy scriptures, to purify himself to reach God was something amazing and beautiful and one of a kind - न भूतो न भविश्यति

ஒரு முறை ஸ்வாமிகள் மூகபஞ்சசதீ படிச்சுண்டு இருந்தார். ‘காமாக்ஷியின் கடாக்ஷம், மாணிக்க குண்டலங்களின் ஒளி என்ற காஷாயம் அணிந்து, காதுவரை நீண்டு (ச்ருதியின் முடிவான உபநிஷத்துக்களை படித்துக்கொண்டு என்று ஒரு அர்த்தம்), அஹங்கார மமகாரம் உள்ளவர்களை நெருங்க விடாமலும், ஒரு யதீச்வரரைப் போல விளங்குகிறது’ என்ற ஸ்லோகம் படித்து முடித்தபோது நாராயணய்யர், சிவன் ஸாரை தரிசித்து விட்டு அங்கு வந்தார். சிவன் ஸார் ‘ஸ்வாமிகளை சாதாரண ஸந்நியாஸி என்று நினைச்சு விட வேண்டாம். அவர் ஒரு யதீந்த்ரர். அவருக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லுங்கோ’ என்று சொன்னதாகச் தெரிவித்துக் கொண்டார். ஸ்வாமிகள் தன் வாழ்வின் பயனை அடைந்தார் என்பதற்கு இதற்கு மேல் என்ன proof வேண்டும்!

**அயோத்யா காண்டம்**

## 4. ஊழிற் பெருவலி யாவுள? That to avoid the determination of destiny is impossible even for a divinity

தசரதர் ராமருடைய கல்யாண குணங்களை நினைத்துப் பார்த்து, ஜனங்களுடைய ஒப்புதலைப் பெற்று, பரதன் மாமா ஆத்துல இருக்கும்போதே, ராமருக்கு முடி சூட்ட ஏற்பாடு பண்றார். ஜனங்கள் ரொம்ப சந்தோஷமாய் நகரத்தை அலங்கரிக்கிறார்கள்.

ராம பட்டாபிஷேகம் என்று சொன்னவுடன் மந்தரைக்கு (கூனி) கைகேயி முத்து மாலை பரிசளிக்கிறாள். கூனி 'கௌஸல்யைக்கு வாழ்வு வந்துவிடும். நீ என்னை மாதிரி வேலைக்காரி ஆகிவிடுவாய்' என்று கைகேயி மனஸை பொறாமையால் கலைச்சு, "பரதனுக்கு பட்டாபிஷேகம் பண்ணனும், ராமனை பதினாலு வருஷங்கள் காட்டுக்கு அனுப்பணம்" என்று இரண்டு வரங்களை கேட்கச் சொல்லி குடுக்கிறா. 'ராமனும் பரதனும் எனக்கு ஒண்ணு தானே' என்று சொன்ன கைகேயி இந்த துர்போதனையை காது குடுத்து கேட்டதால், மனம் மாறி, தீராத அபவாதத்துக்கு ஆளாகிறாள்.

கைகேயி தான் முன்பு தசரதர் உயிரைக் காப்பாற்றிய போது கொடுத்த வாக்கை நினைவுபடுத்தி, அந்த இரண்டு வரங்களை தசரதரிடம் பிடிவாதமாய் கேட்டு வாங்கிக்கறா. தசரதர் "ஒரு தப்பு பண்ணாத ராமனை எப்படி காட்டுக்கு அனுப்புவேன், உலகம் பழிக்குமே, குணக்குன்றான ராமன் என் வார்த்தையை மறுக்கவும் மாட்டானே! அவனை பிரிந்து நான் எப்படி இருப்பேன்? இப்பவே என் உயிர் போக மாட்டேங்கறதே" னு கதறி அழுது புலம்பறார்.

உயிர் எப்படி நினைச்சா போகாதோ அது போலத் தான் rest of life.

---

In the last count, all that happened in Swamigal's life is testimony that destiny is all powerful.

மஹாபெரியவா ஒருத்தர் கிட்ட - "நம்ம பாகவதருக்கு வந்தாப் போல ஒரே ஜீவனுக்கு இவ்வளவு கஷ்டம் வந்து நீ பாத்துருக்கியா? ஸ்ரீமத் பாகவதம் படிக்கறதுனால தாங்கறார். இவம்மா குந்தி தேவி க்ருஷ்ணன் கிட்ட கேட்ட மாதிரி 'கஷ்டமே குடு. அப்பதான்

ஒன்னை மறக்காம இருப்போம்' னு வேண்டிண்டு இருப்பா போல இருக்கு." என்று சொல்லி இருக்கார். How Swamigal faced it is where the difference is. இது இப்படித் தான் என்று இருந்தார். தன் கடமையைத் தவறாமல் பண்ணினார். கடன் வாங்கி குடும்பதுக்கு சாப்பாடு போட்டார். படிக்க வெச்சார். வேதம் சொல்லிக் குடுத்தார். இவரிடம் பக்தியினால் பத்மஸ்ரீ வேல்முருகேந்த்ரன் HOD, Neuro Dept, GH வாரா வாரம் வந்து அவர் குழந்தைகளுக்கு ரொம்ப முயற்சியாய் வைத்யம் பண்ணினார்.

'என் முதல் பையன் mentally challenged. retentive memory கிடையாது. நான் ஆயிரக் கணக்கான ஸ்லோகம் மனப்பாடமா சொல்வேன். என் பையன் இப்படி இருக்கானே' என்று நினைத்திருந்தால் எவ்வளவு frustration வந்திருக்கும். ஜடபரதர் சரித்ரம் படித்து, மான் மேல பாசம் வைத்ததால் மானாகப் பிறப்பு வந்தது. பிள்ளை மேல பாசம் வைத்தால் மீண்டும் பிறவி வந்துவிடும். இப்ப இருக்கற நிம்மதி போய்விடும். பகவானை பஜிக்க முடியாது' என்று இப்படி ஒண்ணொன்னா எல்லாப் பாசங்களையும் ஜெயித்தார்.

ஆபத்துக்கள் ஊழ் வினையால் வருகின்றன. ஆனா பாபம் பண்ணக் கூடாது என்று தீர்மானமாக இருந்தார். By hook or crook, problems சரி பண்ணிக்கணம் என்று நினைக்கலை. நாம லேசா ஒரு கஷ்டம் வந்தாலே ராமாயண புஸ்தகத்தை மூடி வெச்சுட்டு by hook or crook அதை சரி பண்ண கிளம்பிடறோம். அவ்வளவு ஏன், எல்லாம் நன்றாக இருக்கும் போதே, நாளைக்கு என்ன ஆகுமோ என்ற பயத்தில் by hook or crook பணம் சேர்க்க வேண்டி அலைஞ்சுண்டு இருக்கோம். பாபத்தை மூட்டைக் கட்டுகிறோம். நாம் விதியை மதியால் வெல்லலாம் என்று நினைக்கிறோம். ஸ்வாமிகள்

சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை, உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்

என்ற ஔவைப் பாட்டி வாக்கை கடைபிடித்து விதியை நிஜமாகவே தெளிந்த மதியால் வென்றார். நாம் விதியிலிருந்து மீள ஒரே வழி, ஸ்வாமிகள் பாதங்களில் சரணடைவது தான்.

## 5. பித்ரு வாக்ய பரிபாலனம்

ஸுமந்த்ரர் ராமரை கைகேயி அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வருகிறார். ராமர் கைகேயி கிட்டேருந்து இரண்டு வரங்களை பற்றி கேட்டு, கொஞ்சமும் கலங்காமல் "அப்பா சொன்னா உயிரை கூட விடுவேன். என் பரதனுக்கு ராஜ்யத்தை குடுப்பது ஒரு விஷயமா, இப்பவே காட்டுக்கு போறேன்"னு கிளம்பறார்.

‘பித்ரு வாக்ய பரிபாலனம் பண்ணினவா யாரும் குறைவு அடைந்ததில்லை’ என்று கௌசல்யா தேவியை convince பண்ணி, சமாதானம் பண்ணி அவளுடைய ஆசிர்வாதம் வாங்கிக்கறார். லக்ஷ்மணன் கோபத்தையும் அதையே சொல்லி அடக்குகிறார்.

ஸீதை ‘உங்களோடு கூட காட்டுக்கு வருவேன். விட்டுட்டு போனா என் உயிர் போய்விடும்’ என்று வேண்ட, "சரி வா. அப்பா அம்மா குரு தான் எனக்கு கண்கண்ட தெய்வம். நான் அப்பாவை சத்யசந்தர் ஆக்கறதுக்காக என்ன கஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று போகிறேன். நீயும் அப்படி தீர்மானத்தோடு வா" என்று சொல்லி அவர்களோடு தசரதர் கிட்ட உத்தரவு வாங்கிக்கப் போறார்.

தசரதர் "ராம! என்னை சிறையில் போட்டுட்டு நீ ராஜா ஆனா நான் சந்தோஷப் படுவேன்" என்கிறார். ‘உங்களை ஸத்யசந்தராக ஆக்கறதுக்காக நான் எதை வேணா த்யாகம் செய்வேன். எனக்கு அதில் கொஞ்சமும் வருத்தமே கிடையாது. அதுவும் பரதனுக்கு ராஜ்யத்தைக் குடுப்பதில் ரொம்ப சந்தோஷம் தான். நீங்கள் கலங்க வேண்டாம். சீக்கிரமே வந்து உங்கள் பாதங்களைப் பற்றுவேன்" என்று சொல்லி அவரை console பண்ணி உத்தரவு வாங்கிக்கறார்.

---

அதே போல ஸ்வாமிகள் தன் அப்பா கிட்ட ரொம்ப பக்தியோடு இருந்தார். திண்ணையில் குளிரில் படுத்துண்டு இருக்கும் போது போர்வை சரி பண்ணி விட்டதையும், ஒரு முறை 500 பவுன் தானம் வாங்கிக்காமல் வைராக்யமாய் மறுத்ததையும், எங்களிடம் பல வாட்டி சொல்லி இருக்கார். தான் இப்படி இந்த மார்கத்தில் (பாகவத ராமாயண பாராயண ப்ரவசனத்தின் மூலம் ஜீவனம் நடத்துவதே பக்தி) இருக்க அப்பா allow பண்ணினதே, அவரோட வைரக்யத்துனால தான் என்று கொண்டாடுவார். அவரால் தனக்கு ஏற்பட்ட சிரமங்களை சொன்னதே கிடையாது.

‘5000 பேர் கதை கேக்க வரான்னு சொல்றாளே. நிறைய பணம் வந்திருக்கும். நமக்கு அனுப்ப மாட்டேங்கறான்’ என்று அவப்பா இவரைப் பத்தி தப்பா நினைச்சு கேட்ட போது ‘என் கைக்குப் பணம் எதுவும் வந்து சேரவில்லை. (middle men took all of it) ஒங்க பிள்ளை நான். எனக்கு தப்பு வழியில பணம் சம்பாதிக்கவும் சாமர்த்தியம், தைரியம் இல்லை. மன்னிச்சுக்கோங்கோ’ என்று அழுது அவரை சமாதானம் பண்ணி இருக்கார்.

"என்கிட்ட ஒரு 10000 ரூபா இருந்தா நீ மதிப்பே" என்று ஒரு தரம் அவர் சொன்ன போது "एतद्धि दुर्लभतरम् लोके जन्म् यदीदृशम्" என்ற கீதை ஸ்லோகத்தை சொல்லி "ஏழையானாலும் உங்களை மாதிரி தூய்மையான யோகிக்கு பிறந்ததே பாக்யம் என்று நான் நினைக்கிறேன்" என்று சொல்லி அவர் மனசை குளிர்வித்திருக்கிறார்.

‘தசரதர் காமீனு கூசாம உபந்நியாஸத்தில் சொல்றா. அவர் முதலில் கைகேயி கிட்டயும், ராமர் கிட்டயும் அன்பு வெச்சிருந்தார். ஆனா கைகேயி ராமருக்கு விரோதியா போயிட்டானு தெரிஞ்சவுடன் அவளை கைவிட்டார். ஆறு நாட்களில் ராமனை நினைத்து உயிரையே விட்டார். நாம நம் சுற்றம், வேலை இதெல்லாம் பகவானை அடையத் தடையாக இருந்தால் விட்டு விடுகிறோமா? கடைசி வரையில் விடறதில்லை. அதுனால தசரதரை காமீனு சொல்ல நமக்கு யோக்யதை கிடையாது’ என்பார் ஸ்வாமிகள்.

இதையே தன் அப்பா விஷயத்திலும் வெச்சுண்டார். அவப்பா இவம்மா காலமாகி 2வது மனைவி காலமாகி 3வது கல்யாணம் பண்ணிண்டார். அதையல்லாம் குறையா நினைச்சதே கிடையாது. இவப்பா ராமாயண பாகவதம் உபந்நியாஸத்துக்கு மூலம் படிப்பார். ‘ராமாயணம் படிச்சு அவர் உடம்பு வளர்த்து அந்த பீஜத்திலிருந்து நான் உண்டாகி, ராம பிரசாதத்தினால் வாழ்ந்துண்டு இருக்கேன்’ என்று பெருமையாகச் சொல்வார். ‘ஏழு தலைமுறையாக ராமாயணம் படித்த குடும்பம். அதை விட்டுட்டு வேலைக்கு போனதால் தான் கஷ்டங்கள் வரதுனு நினைக்கிறேன். பெரியவா (முன்னோர்கள்) பண்ணினதையே பண்ணனும்னு ஆசைப்படறேன்’ என்று மஹாபெரியவா கிட்ட சொன்னபோது, மஹாபெரியவா ரொம்ப சந்தோஷப் பட்டு இரண்டு கைகளையும் உயர்த்தி ‘உங்க பெரியவா பண்ணினதையே பண்ணு’ என்று ஆசீர்வதித்தார் என்று சொல்வார். அந்த உத்தரவை ஏற்று, ராம ப்ரசாதத்தினாலேயே கடைசி வரையில் ஜீவித்தார்.

அதனால் தான் ‘ராம பட்டாபிஷேகம் ஆனவுடன், ஹனுமார் ஸீதாதேவி குடுத்த முத்து மாலையை உடைச்சுப் பார்த்தார். அதில் ராமர் இல்லை. தன் மார்பை பிளந்து ‘இங்க ஸீதாராமர் இருக்கார்’னு காண்பிசார்னு ஒரு கதை சொல்லுவா.’ ஸ்வாமிகள் ‘எனக்கு அதைச் சொல்ல மனஸு வராது. ஏன்னா ஸீதாதேவி குடுத்த மாலை, அந்த ராம ப்ரஸாதத்தை அவமதித்தாப் போல ஆறதே. வால்மீகி ராமாயணத்தில், ஹனுமார் அந்த முத்து மாலையைப் போட்டுண்டு மலை மேல மேகம் போல அழகாக விளங்கினார் என்று தான் வருகிறது’ என்பார். இப்படி ராமாயண பாகவதத்தை ஒரு புராணக் கதை என்று நினைக்காமல் ஸத்தியமாக நம்பினதால் தான், அதை வாழ்ந்து காண்பித்த மஹானாக அவரால் ஆகமுடிந்தது.

இவப்பா காவேரிக் கரையிலேயே இருக்கேன் என்று சொல்லி விட ‘ராமாயணம் படிச்சு என்ன? அப்பாவை கடைசி காலத்தில் வெச்சு காபாத்தலை’ என்ற பேர் வந்து விடக் கூடாது என்று त्वम् यशोभाग्भविष्यति என்று விபீஷணனிடம் ராமர் ‘நீ ராவணனுக்கு ஸம்ஸ்காரம் பண்ணு. உனக்கு புகழ் ஏற்படும்’ என்ற சொன்ன வரிகளையே மந்த்ரமாக நம்பி ராமரை ஸ்வாமிகள் வேண்டி இருக்கிறார். அதன் பலனாக கடைசி காலத்தில் இவப்பா இவரோடு வந்து இருந்து உயிர் விட்டார். வேதம் படிச்சவாளுக்கு எப்படி ஸம்ஸ்காரம் பண்ணனுமோ அப்படி தன் அப்பாவுக்கு ப்ரம்மவேதம் பண்ணி ஸ்வாமிகள் பித்ருகடன் அடைத்தார்.

சாஸ்த்ர ரத்னாகரம் போலகம் ராமா சாஸ்த்ரிகள் என்ற மஹான் குளிக்கும் படித்துறைக்கு சென்று ஸ்வாமிகள் குளிப்பாராம், அவர் பேச்சைக் கேக்கலாம் என்பதற்காக. அவர் ‘ஒரு ஸ்லோகம் பண்ணியிருக்கேன் கேளு கல்யாணம்’ என்று சொல்லி -‘ஒரு நாட்டிய மங்கை நிறைய நகை போட்டுண்டு இருக்கறதைப் பார்த்து ஒரு குலமகள் குறைப் பட்டுக்க மாட்டா’என்ற அர்த்தத்தில் ஒரு ஸ்லோகம் சொன்ன போது ஸ்வாமிகள் ‘குலமகள் தன் கற்பிலேயே பெருமை அடைவது போல, உங்களை மாதிரி பெரியவா, பணத்தை மதிக்காமல் தன் படிப்பிலியே த்ருப்தி அடைகிறீர்கள்.’ என்று சொல்லி இருக்கார். ராமா சாஸ்த்ரிகள் ‘புரிஞ்சுண்டுடியே’ என்று கொண்டாடி இவரோடு ஆத்துக்கு வந்து, இவப்பாவிடம் ‘வெங்கட்ராம சாஸ்த்ரிகளே! ‘சுக தாதம் தபோநிதிம்’ என்பது போல இந்த கல்யாணராமனால் உங்கள் பெயர் நிலைத்திருக்கப் போகிறது’ என்று வாழ்த்திவிட்டுச் சென்றாறாம். அந்த வாழ்த்து ஸத்தியமாகி விட்டதே!

## 6. பணியுமாம் என்றும் பெருமை, சிறுமை அணியுமாம் தன்னை வியந்து

ஸுமந்த்ரர், வசிஷ்டர் எல்லாரும் கைகேயி கிட்ட "பரதனே இதை ஒத்துக்க மாட்டான். ஒனக்கு அபவாதம் தான் மிஞ்சும், வேண்டாம்" என்று சொல்லி பார்க்கறா. அவ காதுல வாங்கல. தசரதர் தன் சொந்த தன தான்ய கோஷத்தை ராமரோடு அனுப்பச் சொல்கிறார். கைகேயி அதை எதிர்க்கிறாள். ராமர் "யானையை குடுத்துட்டு, அதைக் கட்டும் சங்கிலி மேல ஆசைப் படுவேனா? எனக்கு இப்ப மரவுரி தான் வேணும்." என்று சொல்கிறார். கைகேயி அதை கொண்டு வந்து குடுக்கிறாள். ஸீதாதேவி அதை கட்டிக்கத் தெரியாமல் திணரும்போது ராமர் அதை தானே அவளுடைய பட்டு புடவை மேல சுத்தி விடறார். பெண்கள் எல்லாரும் கண் கலங்குகிறார்கள்.

ராமர் தசரதருடைய மத்த மனைவிகளிடம் "பழக்க தோஷத்தில் நான் ஏதாவது தப்பா பேசி இருந்தா மன்னிசுடுங்கோ" னு சொல்லிண்டு கிளம்பறார். ஜனங்கள் கூடவே வருகிறார்கள். "என் மேல் இருக்கும் அன்பினால் பரதனை ராஜாவாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லிட்டு போறார். ஆனாலும் அவா கூடவே காட்டுக்கு வரா.

ஸரயு நதிக் கரையில் "இவாளுக்கு கஷ்டம் வந்தா நான் சரி பண்ணனும். என்னால இவாளுக்கு கஷ்டம் வரக்கூடாது" என்று லக்ஷ்மணனிடம் சொல்லி எல்லாரும் தூங்கும் போது நடுராத்திரியில் சரயு நதியை தாண்டிப் போய்விடுகிறார். எழுந்து பார்த்த ஜனங்கள் தூக்கத்தை நொந்து கொள்கிறார்கள். திரும்ப வந்தவர்களிடம் வீட்டுப் பெண்கள் 'இங்க என்ன இருக்குனு வந்தேள்? ராமரோடு இருந்தால் பயம் கிடையாது. அவமானம் கிடையாது. இனி என்ன ஆகுமோ. காட்டுக்கு அவாகிட்டயே போய்விடுவோம்' என்று சொல்கிறார்கள்.

தசரதர் 'தர்மத்தை கைவிட்ட உன்னை நான் கைவிடுகிறேன்' என்று கைகேயியை விலக்கி, கௌசல்யை அரண்மனைக்கு வருகிறார். வருந்தி அழும் கௌசல்யா தேவியை ஸுமித்ரை 'தர்மத்தையும் ஸத்யத்தையும் விரதமாகவும் செல்வமாகவும் கொண்ட ராமருக்கு ஒரு குறையும் வராது' என்று சொல்லி சமாதானம் பண்றா.

ராமர் குஹனைப் பார்த்து அன்பு பறிமாறி, ஸுமந்த்ரரை சாமாதானம் செய்து திருப்பி அனுப்பி, கங்கையை கடந்து செல்கிறார். பரத்வாஜ

முனிவரை ப்ரயாகையில் தர்சனம் பண்றார். கங்கையை வேண்டிண்டு, யமுனையை வேண்டிண்டு, பரத்வாஜர் சொன்னபடி ஒரு ஆலமரத்தை ப்ரதக்ஷிணம் பண்ணி நமஸ்காரம் பண்ணி, சித்ரகூடம் சென்று, பர்ணசாலை அமைத்து, வாஸ்து சாந்தி செய்து, இந்த்ரனைப் போல ஆனந்தமாய் வசிக்கிறார்.

போற வழியில் லக்ஷ்மணன் கிட்ட சொல்றார் - "இத்தனை கஷ்டத்துக்கு நடுவில், இந்த முனிவரின் அன்பு கிடைத்ததே, அது பாக்யம்" which means "எதோ பாபத்தால் ராஜ்யத்தை இழந்து, அம்மா அப்பாவை பிரிஞ்சு வனவாசம் வந்தாலும், இந்த முனிவர் அன்பு பாராட்ட ஒரு புண்யம் பண்ணி இருக்கோமே". He is so humble throughout. Through all these scenes ராமருக்கு ஒரு second கூட "I am such and such, எனக்கு ஏன் இந்த unfair treatment?" என்ற எண்ணமே வரலை.

---

ஸ்வாமிகள் ஒரு நாள் கூட "எனக்கு ஏன் இந்த கஷ்டங்கள் வறது" னு சொல்லி நான் கேட்டதில்லை. மனைவிக்கு hysteria வந்த போது "ருத்ர ஏகாதசி பண்ணுங்கோ" என்று சொன்னால் கடன் வாங்கி பண்ணி இருக்கார். "நான் ராமாயணம் படிக்கறேன், போறாதா?" என்று கேட்க மாட்டார். ஒரு அன்பினால் ஒருத்தர் சொல்றாரே என்று செய்வார். அங்க வந்து ஒரு குழந்தை சொன்னா கூட சாஸ்த்ர சம்மதமாய் இருந்தால் தெய்வக் கட்டளையாய் நினைப்பார்.

"நான் யாருக்கும் குரு கிடையாது. friend தான்." என்று சொல்வார். அதை literal ஆ எடுத்துண்டு "நீங்க ஒரு மணிக்குள்ள சாப்பிட வேண்டும். உடம்ப வருத்திக்கக் கூடாது" னு சொன்னா கேட்டுப்பார்.

பெரியவா ஸ்வாமிகளைப் பற்றி "அவர் பாகவத சாஸ்த்ரத்தில் மூழ்கி இருக்கார். அவருக்கு ஞானம் வந்துடும்" என்று சொன்ன போது "என்னை பாகவத சாஸ்த்ரத்தில் மூழ்கி இருக்குமாறு உத்தரவு பண்ணி இருக்கா" என்று இன்னும் அதிகமாக சப்தாஹம் பண்ணினார். ஸ்வாமிகள் சொல்வார் - "மஹாபெரியவா கிட்ட பாகவதம் சொல்ல ஒக்காரும் போது ‘विदिता न मया’ சொல்லி நமஸ்காரம் பண்ணிட்டு உக்காருவேன். அதனால் க்ருபை கொண்டு, மத்த பண்டிதர்களிடம் கேட்பது போல பெரியவா என்னை கேள்வி எல்லாம் எதுவும் கேட்டதே கிடையாது"

மஹாபெரியவா கிட்ட ஸ்வாமிகள் பாகவத ஸப்தாஹம் செய்யும் போது, பெரியவா ஒருத்தரை பரீக்ஷித்து என்று நியமிப்பார். அவர் முழுக்கக் மூலபாராயணம் ப்ரவசனம் கேட்பார். மெத்த படித்தவரான கும்பகோணம் ராமமூர்த்தி சாஸ்த்ரிகள் என்ற மஹாபெரியவாளுடைய பூர்வாச்ரம அம்மாஞ்சி பலமுறை அந்த பாக்கியம் பெற்றவர். ஸ்வாமிகளிடம் பாகவதம் கேட்டுவிட்டு அந்தப் பெரியவர் மஹாபெரியவா கிட்ட வியப்போடு ‘பாகவதர் எத்தனை விஷயங்கள் எடுத்து சொல்றார். நீங்க என்னன்ன சாஸ்த்ரம் படிச்சிருக்கேள்னு கேட்டா எந்த சாஸ்த்ரமும் படிச்சதில்லைனு சொல்றாரே? என்னால் நம்பவே முடியலையே. அவர் யார்கிட்ட வாசிச்சார்னு பெரியவா தான் சொல்லணும்’ என்று கேட்கிறார்.

மஹாபெரியவா பதில் சொல்றா ‘அவர் சொல்றதும் right. நீ சொல்றதும் right. நீ சொல்ற மாதிரி படிக்காம இதெல்லாம் சொல்ல முடியாது. ஆனா அவர் யார்கிட்டயும் படிக்கலை. பின்ன எப்படி தெரியறது? குரு கீதை ல ஒரு ஸ்லோகம் இருக்கு கேட்டுருக்கியா

यस्य देवे परा भक्तिः यथा देवे तथा गुरौ । तस्यैतेऽकथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥

யாருக்கு தெய்வ பக்தியும் இருந்து, குரு பக்தியும் இருந்து, குருவையும் தெய்வத்தையும் ஒண்ணா நினைக்கிறாளோ அவாளுக்கு சொல்லித் தராமலே எல்லா சாஸ்த்ரங்களும் தெரியும் னு அர்த்தம். ‘நம்ம பாகவதருக்கு பல ச்ரமங்கள். படிக்க வசதி கூட கிடையாது. ஆனா அவர் என்னையும் குருவாயூரப்பனையும் ஒண்ணா நினைக்கிறார். அதுனால அவருக்கு படிக்காமலே இவ்வளவும் தெரியறது.’

சிவன் ஸார் கிட்ட ஸ்வாமிகள் குழந்தை மாதிரி இருப்பார். அவரை தரிசிக்க போகும் போது ஒரு நாள் பாகவதத்தில் இருந்து ஒரு ச்லோகம் எழுதிக்க சொன்னார். அவர் சன்னிதியில் படிக்க சொன்னார் - ‘नह्यम् मयानि तीर्थानि न देवाः मृत्शिलाधयः। ते पुनन्ति उरु कालेन यूयं दर्शन मात्रतः॥’ புண்ய தீர்த்தங்களும், கோவிலில் உள்ள சிலா தெய்வங்களும் அடிக்கடி நிறைய சேவிப்பதால் நம்மை தூய்மை படுத்துகின்றன. உங்களைப் போன்ற மஹான்கள் ஒரு தடவை தர்சனம் பண்ணினாலே தூய்மைப் படுத்துகிறீர்கள்." ஆசார சீலரான ஸ்வாமிகள், சிவன் ஸார் கையால் குடுத்தா, கடையில் வாங்கின பக்ஷணமானா கூட, ஒரு second கூட யோசிக்காம சாப்பிடுவார்.

சிவன் சார் ஒரு முறை என்னிடம் 'ஏணிப்படிகளில் மாந்தர்கள் புஸ்தகத்தை வெச்சு ஒரு புஷ்பம் போட்டுண்டு வந்தாலே மேன்மை அடையலாம்' என்று சொன்னதை ஸ்வாமிகளிடம் சொன்னேன். அன்றிலிருந்து கடைசி நாள் வரை, ஸ்வாமிகள் அந்த புஸ்தகத்திற்குப் பூஜை செய்து வந்தார்.

அதே நேரத்தில் தன்னுடைய படிப்போ, intelligenceஓ, presence of mind ஓ, குரல் இனிமையோ, வாக்படுத்வமோ, ஸித்திகளோ, மஹாபெரியவா பண்ணின அனுக்ரஹமோ, தெய்வ தரிசனமோ, ஞான வைராக்யமோ எதைப் பத்தியும் வியந்து பேசவே மாட்டார். நாமாக உணர்ந்து கொண்டாடும் போது சில செய்திகள் matter of fact மாதிரி சொல்லி இருக்கார். அதுவும் இன்னிக்கு இந்த மாதிரி நான் பேசி சந்தோஷப் படுவதற்காகத் தான் என்று தோன்றுகிறது.

அவர் பண்ணின கருணையில் இது தான் (தான் எப்படி புராணங்களின் உள்ளர்த்தங்களை புரிந்து கொண்டு அதைத் தன் வாழ்க்கையில் கடைபிடிக்க முயற்சி செய்து வெற்றியடந்தார் என்பதை புரியும்படி விளக்கி சொன்னது) எல்லாத்துக்கும் மேலாக நமக்கும், நமது ஸந்ததியினருக்கும் உறுதுணையாய் இருக்க போகிறது. அந்த நம்பிக்கையில் தான் இதை record செய்து வைக்கப் பார்க்கிறேன்.

இரண்டு புஸ்தகம் படிக்கறதுக்குள்ள 'நான் யார்?' 'அன்பே சிவம்' என்று பேசும் இந்தக் காலத்தில், ஸ்வாமிகள் அவ்வளவு படிப்பு, விவேகம், வைராக்யம் இருந்தும், ப்ரவசனம் பண்ணக்கூட அவராக கிளம்பவில்லை. அவரோட குரு, அம்பாள் ஆக்ஞை என்று சொல்லி கட்டாயப் படுத்தின பின் தான் உபந்யாஸம் பண்ண ஆரம்பித்தார்.

மஹாபெரியவா தன்னிடம் கஷ்டத்திற்கு விதாயம் கேட்டு வந்தவாளை 'அங்கே பாகவத ஸப்தாஹம் நடக்கிறது. போய் அந்த பாகவதரிடம் கல்கண்டு ப்ரஸாதம் வாங்கிண்டு போங்கோ. எல்லாம் சரியாகிவிடும்' என்று பல பேரை சொல்லி அனுப்ப, அதிலிருந்து தான் ஸ்வாமிகள் வந்தவாளுக்கு கல்கண்டு ப்ரஸாதம் குடுப்பது என்று வைத்துக் கொண்டார். ரிஷிகள், மஹான்கள் சொன்னது, அல்லது செய்து காட்டினது என்ற ஒரு basis இல்லாமல், ஸ்வாமிகள் ஒண்ணும் பேசவோ, செய்யவோ மாட்டார். ஸ்ரீராமரைப் போல, தர்மத்திலிருந்து ஒரு இம்மியளவு கூட தள்ளிப் போய்விடக் கூடாது என்பதில் வெகு ஜாக்ரதையாக இருந்தார்.

**7. காமினீ காஞ்சனத்தில் பற்று வைத்தால் முடிவில் துன்பமே. மனதை உலக விஷயங்களிலிருந்து எடுத்து பகவானிடத்தில் வைத்தால் தான் நிம்மதி கிடைக்கும்**

ஸுமந்திரர் திரும்பி வந்து தசரதரைப் பார்த்து, ராமரை கங்கைக் கரையில் விட்டுவிட்டு வந்ததையும், அவர் பரதனுக்கும் கௌசல்யைக்கும், தசரதருக்கு கட்டுப்பட்டு இருக்கவேண்டும் என்று சொன்ன செய்திகளையும் சொல்கிறார். தசரதர் "கைகேயி பேராசையால் இந்த கஷ்டம் வந்ததே, பரதன் இதை ஒத்துக் கொண்டால் அவன் எனக்கு அந்திம கார்யம் பண்ணக் கூடாது, என்னால் ராமன் காட்டுக்கு போய்விட்டானே" என்று வருந்தி அழுகிறார். ஸீதை படும் கஷ்டத்தை நினைத்து கௌசல்யை அழுகிறாள். ஸுமந்திரர் "அவர்கள் சந்தோஷமாகத் தான் இருக்கிறார்கள். இப்படி ஒரு அப்பா, அம்மா, பிள்ளை, அவன் தம்பி, மனைவி எல்லாம் இருந்தா என்பதை உலகம் உள்ள வரைக்கும் பேசுவார்கள். வருந்த வேண்டாம்" என்று சமாதானப் படுத்துகிறார்.

அவர் சென்ற பின் கௌசல்யை தசரதரிடம், "இப்ப எனக்கு நீங்களும் இல்லை. என் பிள்ளையும் இல்லாமல் செய்து விட்டீர்கள்." என்று சொல்கிறாள். தசரதர், "நீ எதிரிக்கும் கருணை செய்வியே. என்னால் எவ்வளவு பேருக்கு கஷ்டம் என்று ரொம்ப வருத்தத்தில் இருக்கும் என்னை மேலும் புண்படுத்தாதே." என்று வேண்டுகிறார். கௌசல்யை "சோகத்தால் தகாத வார்த்தை பேசி விட்டேன்" என்று கைகூப்பி மன்னிப்புக் கேட்கிறாள்.

தசரதர் தான் ஒரு முனிகுமாரனை சப்தவேதியால் அறியாமல் கொன்றதின் வினைப்பயனாக இந்த நிலைமை வந்தது என்பதை எண்ணி, ராமரையே நினைத்தபடி உயிர் விடுகிறார்.

வசிஷ்டர் பரதனை அழைத்து வரச்செய்து, அவனை முடிசூட்டிக் கொள்ளும் படி எல்லோரும் சொல்கிறார்கள். பரதன் கைகேயியை கடுமையாக திட்டி விட்டு, "ஒரு நாளும் நான் ராமனுடைய ராஜ்யத்தை அபகரிக்க மாட்டேன். என் புத்தி மாறாமல் இருக்க, இங்கிருந்தே வனத்தில் இருக்கும் தர்மத்தின் வடிவமான ராமரை நமஸ்கரிக்கிறேன். அவரையே திரும்ப கூட்டிண்டு வந்து ராஜா ஆக்குவேன்" என்று சபதம் செய்கிறான். தன் அப்பாவுக்கு அந்திம கார்யங்களை செய்து முடிக்கிறான்.

தசரதருக்கு பணத்தாசையால் கைகேயியும், பிள்ளைப் பாசத்தால் கௌசல்யையும் கூட துன்பம் தருகிறார்கள். அதனால் அவர் எல்லாப் பற்றையும் விட்டு, ராமரிடம் முழு மனதையும் வைத்து பரகதி அடைகிறார். பரதன், ராஜ்யம் என்ற பொருள் மீது பற்று வைத்திருந்தால், அவனுக்கு அப்பாவுக்கு கடைசி கார்யம் பண்ணும் பாக்யமும், ராமரும் (ராம பாதுகையும் ராமரும் ஒன்றே) கிடைத்திருக்காதே.

--------------------------------------------

காமினீ காஞ்சனத்தை வெறுக்க வேண்டியதில்லை. கர்ம வசமாக வருவதை தர்மத்தின் பொருட்டு சேர்த்துக்கலாம். அதில் பற்று வைத்தால் துன்பம் வரும். சிங்கார மடந்தையர் தீநெறி பெரும் வேதனை தரும். அன்பு மனைவி, நியாயமாக சம்பாதித்த செல்வமும் கூட, அதில் பற்று வைத்தால் முடிவில் துன்பம் தரும். படகு தண்ணியில் இருக்கலாம். படகுக்குள் தண்ணி வந்தால் ஆபத்து. இதை ஸ்வாமிகள் எவ்வளவு அழகாய் வாழ்ந்து காமிச்சார்!

அவருடைய புத்திக்கும் மேதா விலாசத்துக்கும் இந்தியாவையே விலைக்கு வாங்கி இருக்கலாம். பாகவத ராமாயணத்துக்கு விலை பேசாததால் 1951 லிருந்து 1986 வரைக்கும் கடனில் இருந்தார். அப்படி மிகுந்த கடனில் இருந்த போது, ச்ருங்கேரி மட பக்தர் ஒருத்தர், "நான் ஒங்களுக்கு வீடு கட்டித் தரேன், வரும்படிக்கு எற்பாடு பண்ணறேன். உபந்நியாஸத்தில் காஞ்சி பெரியவாளை போற்றி சொல்றதை விட்டுட்டா போதும்" என்று சொன்ன போது ஸ்வாமிகள், "கோடி ரூபா குடுத்தாலும் மஹாபெரியவாள் பாதத்தை விடமாட்டேன்" என்று சொல்லி இருக்கார். அதனால் தானே மஹாபெரியவா கிட்ட 19 வருஷம் தொடர்ந்து ஒவ்வொரு வருஷமும் கோகுலாஷ்டமி போது பாகவத சப்தாஹம் பண்ணும் பாக்யம் கிடைச்சுது. ராமர் தன் கதை கேட்டது போல, மஹாபெரியவா மணிக்கணக்கா உட்கார்ந்துண்டு கேட்டாளே!

திருச்சியில் ஒரு பணக்காரர், ஸ்வாமிகள் ப்ரம்மசாரியாய் இருந்த போது, அவருடைய குணத்தைப் பார்த்து தன் பெண்ணை குடுக்க விரும்பி இருக்கார். பொறாமையால் யாரோ ஸ்வாமிகள் அப்பா கிட்ட ‘அந்த பெண்ணிற்கு எதோ வ்யாதி’ என்று சொல்ல, இவப்பா ‘நான் மெதுவா கேட்டு தெரிஞ்சுண்டு வரேன்’ன்னு கிளம்பறார். ஸ்வாமிகள் வேண்டாம் என்று தடுக்கிறார். இவப்பா ‘கல்யாணத்துக்கு பின் அவளால் உன்னை திருப்தி படுத்த முடியலைன்னா என்ன

பண்ணுவ? என்று கேட்கும் போது 'எனக்கு கல்யாணம் ஆகி ஒரு மாஸத்துல எதாவது உடம்புக்கு வந்து, அவளைத் திருப்தி படுத்த முடியலைன்னா, அவ என்ன பண்ணனும்னு நீங்க எதிர்பார்ப்பேளோ, அதையே நான் பண்ணுவேன். தாடி வளர்த்துண்டு பாகவதம் படிச்சுண்டு இருந்துடுவேன்' என்று சொல்லி இருக்கார். 'இதெல்லாம் நடக்காத பேச்சு' என்று சொல்லி அவப்பா போய் கேட்க, பெண்ணின் அப்பா கோச்சுண்டு 'உம்ம பிள்ளைக்கு என் பெண்ணை தரமாட்டேன்' என்று சொல்லி விடுகிறார்.

அந்த பெண்ணுக்கு ஒரு கோவிலில் வேறு மாப்பிளையோடு கல்யாணம் நடக்கிறது. ஸ்வாமிகள் தினமும் அந்த கோவிலை ப்ரதக்ஷிணம் பண்ணிண்டு போய் காவேரில குளிச்சுட்டு வருவாராம். "அன்னிக்கும் அதே மாதிரி ப்ரதக்ஷிணமாத் தான் போனேன். ஒண்ணும் ஏக்கம் ஏற்படவில்லை" என்று சொல்வார். "ராமர் கைகேயி அரண்மனையில் போய் தசரதரை பார்த்து இரண்டு வரங்களை பற்றி கேட்ட பின், வெளியில் வந்து, பட்டாபிஷேக த்ரவ்யங்களை, ஒண்ணும் மனதில் கலக்கம் ஏற்படாமல் ப்ரதக்ஷிணம் பண்ணிண்டு போனார்" என்ற இடத்தில் இந்த incident சொல்வார்.

எல்லாப் பெண்களையும் ஸ்வாமிகள் அம்பாளாகவே பார்த்ததால், எல்லாப் பெண்களும் இவரை தங்கள் குழந்தை போல் treat பண்ணினார்கள். இருந்தாலும் since he was a role model, யாராவது ராமாயண நவாஹத்துக்கு கூப்பிடுவதாய் இருந்தால், ஆத்து மாமா வந்து கூப்பிட வேண்டும். ஒன்பது நாளும் leave போட்டுட்டு கூட இருக்க வேண்டும். போற இடத்தில் ராத்திரி பால் சாப்பிட மாட்டார். பெண்களை தனியாக சந்திப்பதோ உபதேசங்கள் செய்வதோ கிடையாது. So many rules to show people the right path.

'ராமசந்த்ராஸ்ரய' என்று குலதெய்வமான ஸ்ரீராமரையும், தன்னை ஆட்கொண்ட சந்த்ரசேகர ஸரஸ்வதி ஸ்வாமிகளயும் அடைக்கலம் புகுந்து, மூவாசைகளையும் கடந்து சிவன் ஸார் "யதீந்த்ரர்" என்று கொண்டாடும் நிலையை அடைந்தாரே! அந்த சாந்தமும், கருணையும், ஞானமும் நாம் நேரில் பார்த்ததால் அல்லவா மனிதனுக்கு இப்படி ஒரு நிலை உண்டு என்று அறிந்தோம். பகவத் பக்தி என்ற ஒரு எண்ணைப் பசையை மனத்தின் மேல் பூசிக்கொண்டு இருந்ததால், தாமரை இலையின் மேல் தண்ணிர் ஒட்டாதது போல, அவர் மனத்தில் உலகப் பற்றுக்கள் ஒட்டவில்லை.

## 8. சுற்றத்தால் சுற்றப் பட ஒழுகின் செல்வம் தான் பெற்றத்தாற் பெற்ற பயன் (செல்வதை பகிர்ந்து உண்பதே அதன் பயன்)

வசிஷ்டர் ராஜ சபையைக் கூட்டி, பரதனை அங்கு வரவழைத்து "ராஜ்யத்தை எற்றுக்கொள்" என்று சொல்கிறார். பரதன் அவரைக் கண்டித்து, "தசரதர் பிள்ளையாக பிறந்து விட்டு ராமருடைய ராஜ்யத்தை நான் எப்படி எடுத்துக்கொள்ள முடியும். நானும் இந்த ராஜ்யமும் ராமருடைய சொத்து. சுமந்த்ரரே! படை கிளம்பட்டும். போய் ராமரை அங்கயே பட்டாபிஷேகம் பண்ணி அழைத்து வருவோம்" என்று சொல்லி எல்லாரோடும் காட்டுக்குக் கிளம்புகிறான்.

கங்கை கரையில் குஹனை பார்க்கிறான். குஹன் சந்தேஹப் படும் போது, "ஒரு friend நீயே ராமனுக்காக உயிரை குடுக்க தயாரா இருக்க. நான் அவன் தம்பியல்லவா. என்னை சந்தேஹப் படாதே" என்று சொன்னபின் குஹன் அவனை வாழ்த்துகிறான். லக்ஷ்மணன் ராமரிடம் காட்டிய அன்பையும், ராமரும் சீதையும் கங்கை ஜலத்தை மட்டும் குடித்து விட்டு, புல் தரையில் தூங்கினதையும் கேட்டு பரதன், தன்னால் ராமருக்கு இந்த கஷ்டம் வந்ததே என்றெண்ணி "ராமரை ராஜாவாக்கிட்டு நான் காட்டில் ராமர் வாழ்வதைப் போல் தவ வாழ்க்கை மேற்கொள்வேன்" என்று சத்யம் செய்கிறான்.

பரத்வாஜரைப் பார்த்து வணங்குகிறான். அவர் பரதனுக்கும் சேனைக்கும் தன் மந்த்ர சக்தியால் விருந்து, ஆடல், பாடல் எல்லாம் காட்டி test பண்றார். மற்ற ஜனங்கள் அதில் மயங்குகிறார்கள். பரதன் ராமரையே நினைத்து உருகுகிறான். அவன் உறுதியைக் கண்டு முனிவர் ராமர் இருக்கும் இடத்தை சொல்கிறார். பரதன் சித்ர கூட மலையையும் மந்தாகினி நதியையும் பார்த்து ராமருக்கு பக்கத்தில் வந்து விட்டோம் என்று சந்தோஷப் படுகிறான்.

ராமர் சீதையோடு இயற்கையை ரசித்துக் கொண்டு "உன்னோடும் லக்ஷ்மணனோடும் இந்த இடத்தில் 1000 வருஷம் கூட ஆனந்தமாய் இருப்பேன். அப்பா வாக்குப் படி காட்டுக்கு வந்ததில் என் பரதனுக்கு ப்ரியமாக முடிந்தது" என்று பேசி விட்டு, மந்தாகினி நதியில் ஸ்னானம் செய்து விட்டு ஆஸ்ரமத்திற்கு வருகிறார்கள்.

சலசலப்பை கேட்டு என்ன என்று லக்ஷ்மணனை பார்க்க சொல்கிறார். லக்ஷ்மணர் மரத்தின் மேல் ஏறிப் பார்த்து, "பரதன் படையோடு

வருகிறான். இன்று பழி தீர்ப்பேன்" என்று சொல்கிறான். ராமர் அவனிடம், "பரதனை கொன்று விட்டு ராஜ்யத்தை என்ன செய்வாய்? நாம் எல்லோரும் சேர்ந்து அனுபவிக்கத் தான் எந்த செல்வமும். இல்லை என்றால் அதை நெருப்பு பொசுக்கட்டும். ஒன்னை மாதிரி தான் அவனும். என் மேல் பக்தியால் வந்திருக்கான். அவனை திட்டினா என்னை திட்டற மாதிரி." என்று சொல்கிறர். லக்ஷ்மணன் வெட்கப்பட்டு கீழே இறங்கி ராமர் அருகில் கைக்கூப்பி நிற்கிறான். பரதன் வந்து "அண்ணா" என்று ராமர் பாதங்களில் விழுகிறான்.

---------------------------------------------

ஸ்வாமிகளைப் பற்றிய இந்த செய்தி நிறைய பேருக்கு தெரிஞ்சுருக்காது - அவர் life முழுக்க கடனில் இருந்தாலும் ஒரு கொடை வள்ளல். சத்தம் போடாம தானம் பண்ணினதால் வெளியே தெரியாது. 1951 சென்னைக்கு வந்தவுடன் அவருடைய அக்கா அத்திம்பேர் கூட வந்து அண்டி இருந்தா. All the time he helped his poor relatives. கஷ்டப் படுபவர்களைப் பார்த்தால் கடன் வாங்கினப் பணத்தைக் கூட எடுத்துக் குடுப்பார்.

அவப்பா வைதீகம். ஆதனால் வைதிகர்கள் ச்ரமப் படுவது அவருக்கு தெரியும். நிறைய வைதீக fraternity க்கு குடுத்து இருக்கார். தன்கிட்ட வரவா எதாவது தானம் பண்ண ஆசை பட்டா கஷ்டப் படற வைதிகாளை கைக் காமிப்பார். வேதம் படித்தவர்களை பூஜிப்பார்.

ஒரு தடவை அப்படி விஸ்வநாத ஐயர் ஒரு வைதிகருக்கு கோ தானம் பண்ணினார். ஸ்வாமிகள் பக்கத்துல இருந்த ஒருத்தர் "நம்மால ஒரு கோ தானம்" என்றார். ஸ்வாமிகள் சொன்னார் - "நாம்ப ஒரு மாட்டை வாலை உருவிக் குடுத்தாலே "ந மம" என்று சொல்லி "எல்லாதுலேயுமே என்னுடையது" என்ற அக்ஞானமான எண்ணம் போக வேண்டி தானம் பண்றோம். யாரோ யாருக்கோ தானம் பண்ணினதுக்கு நீ "நம்மால" என்று மமகாரத்தை பிடிச்சு வெச்சுக்கறியே" என்று விளையாட்டாக சொல்வது போல வலிக்காமல் பெரிய உண்மையை சொன்னார்.

அவாத்துல எல்லாருமே kind ஆ இருப்பா. அவா கஷ்டத்துக்கு நடுவில அன்பான ஆறுதலான வார்தைகள் சொல்லத் தவறவே மாட்டா. அவா ஆம் ஒரு மடம் மாதிரி இருந்தது. எல்லாரும் வந்து சாப்டுட்டு போவா. நான் வருஷக் கணக்கா அவாத்துல ராத்திரி சாப்பிட்டுருக்கேன். அவர் சாப்பிட்ட பின் ப்ரசாதமாக சாப்பிடணம்

என்று ஆரம்பித்தது எங்களுக்கு 25 தோசை கூட பண்ணி மாடிக்கு குடுத்தனுப்புவா. என் கல்யாணத்துக்கு அப்பறம் அருமையான விருந்து சாப்பாடு, புடவை வேஷ்டி எல்லாம் வெச்சுக் குடுத்தா. வெங்கடேச சமாராதனை, வ்யாஸ பூஜை, குருவாயூரில் உதயாஸ்தமன பூஜை, இப்படி எத்தனையோ.

ஒரு நாள் சிவன் ஸார் ஐ தரிசிக்க கிளம்பின போது ஸ்வாமிகள் 'ஜானகிராமா பணம் எடுத்துண்டியா?' னு கேட்டார், சிவன் ஸார்க்கு குடுக்க. I was surprised. 'ஒங்க நிலைமை என்ன! அவர் நிலைமை என்ன! இதெதுக்கு?' னு கேட்டேன். 'विदिता न मया विशदैककला न च किन्चन कांचनम् अस्ति गुरो' என்ற ஸ்லோகத்தில் 'ஒங்களுக்கு அர்பணிக்க எனக்கு படிப்பும் இல்லை, பணமும் இல்லை, உங்கள் க்ருபையால் என்னை ஆட்கொள்ள வேண்டும்' என்று வருகிறதே. அப்ப பணம் இருந்தால் அதை குருவுக்கு அர்ப்பணம் பண்ண வேண்டும் என்பது தெரிகிறதல்லவா? அதுக்காகத் தான்' என்றார்.

ஸூர்யன் மழையை வாங்கிண்டு வேற இடத்தில் விடுவது போல யாரோ பணம் கொண்டு வந்து வைப்பா. யாரோ எடுத்து செலவு பண்ணுவா. கடுமையான பாபம் செய்துகொண்டு அதை justify பண்ணுபவர்கள், சில பேர் குடுக்கும் பணத்தை cover பிரிச்சு எண்ணி கூட பார்க்காமல் கோவில் உண்டியலில் போடச் சொல்லி விடுவார். அந்த கணக்கு பார்த்தா அவர் பண்ணின தானத்துக்கு எல்லையே இல்லை. அவரோட possessions சில புத்தகங்கள், ஸ்வாமி படங்கள், குருவாயூரப்பன் விக்ரஹம், பெரியவா பாதுகை, சில காவித் துணிகள். He was not possesive about that also.

ஒரு மஹாபெரியவா படம் 20-30 வருஷம் அவர் கிட்ட ராமாயண பாகவதம் கேட்ட பெரியவா - நான் 'அப்படியே நேர்ல பாக்கற மாதிரி இருக்கார்' னு சொல்லுவேன். ஒரு நாள் 'நாளைக்கு கார்த்தால ஆறு மணிக்கு வா' னு சொன்னார். 'இந்த பெரியவா எப்பவும் எங்க போனாலும் உன்னோட வெச்சுக்கோ' என்று சொல்லி குடுத்துட்டார்.

ஸ்வாமிகள் பூஜை செய்த குருவாயூரப்பன் விக்ரஹம் தனி ஒரு அழகு. அவர் அந்த க்ருஷ்ணனை ஆசையாக பூஜை பண்ணுவது கண்கொள்ளா காட்சி. எளிமையான பூஜை தான். ஆனால் அவர் செய்யும் ஷோடசோபசர பூஜையே, பாசத்தோடு அந்த குழந்தையை

கொஞ்சுவது போல இருக்கும். பூஜை முடிச்சு, அலங்காரம் பண்ணி வெச்சு, மாலை போட்டு அழகு பார்த்து, த்ருஷ்டி கழிப்பார்.

यत् त्रैलोक्यमहीयतोऽपि महितं सम्मोहनं मोहनात्
कान्तं कान्तिनिधानतोऽपि मधुरं माधुर्यधुर्यादपि ।
सौन्दर्योत्तरतोऽपि सुन्दरतरं त्वद्रूपं आश्चर्यतोऽपि
आश्चर्यं भुवने न कस्य कुतुकं पुष्णाति विष्णो विभो ॥

என்ற நாராயணீய ஸ்லோகத்தை கேட்டு கேட்டு அந்த ஸ்வாமி அவ்வளவு அழகாக ஆகிவிட்டாரா, அல்லது அவருடைய மாதுர்யம் ஸ்வாமிகள் வாக்கில் வந்துவிட்டதால், ஸ்வாமிகள் சொல்லும் போது அந்த ச்லோகம் அப்படி தித்தித்ததா என்று சொல்ல முடியாது. ஆனால் அப்படி அவரோடு பேசின அந்த விக்ரஹத்தைக் கூட 'என் காலத்திற்கு பிறகு யார் பூஜை பண்ணுவாளோ?' என்று ஒரு நாள் கூட பேசினதில்லையே! ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்பது இது தானோ!! ஆனா அவர் தபோ மஹிமையால் இன்னிக்கும் அதிஷ்டானத்தில் அந்த குருவாயூரப்பனுக்கு நித்ய பூஜை நடக்கிறதே!

நாமும் யாராவது நம்மிடம் தற்கால கவர்ச்சி ஸாமியார்களைப் பற்றி, என்ன மஹிமை, என்ன அழகு என்று பேசினால் உஷாராகி, கருணையோடு கல்கண்டு கட்டிக் கொடுக்கும் நம் ஸ்வாமிகள் அழகையும், நம்மையும் அடியவர்க் கூட்டத்தில் சேர்த்த அந்த ஆச்சர்யத்தையும், காமாக்ஷியின் அநுக்ரஹத்தால் தேனையும் பழிக்கும் அவர் குரல் இனிமையையும் நினைத்து, இதைக்காட்டிலும் மேலான மஹிமையான வஸ்து வேறு இருக்க முடியுமா? முடியவே முடியாது என்று இந்த ச்லோகத்தைச் சொல்லி ஞாபகப் படுத்திக் கொண்டு, ஏக பக்தியாய் இருக்க வேண்டும்.

குருவாயூரப்பனும் மஹாபெரியவாளும் (மஹாபெரியவா பாதுகையும்) இருக்கும் இடத்தில் லக்ஷ்மீதேவி நித்ய வாஸம் பண்ணினதும், அதை அவர் பகிர்ந்து அளித்ததும் ஆச்சர்யமே இல்லையே! ஆராதனை போது அந்த வைபவத்தைக் கண்கூடா பார்கிறோமே. அவரை நம்பினவா எல்லாரும் ஸுபிக்ஷமாக ஒரு குறையும் இல்லாமல் இருப்பதும் அவர் ஆசிர்வாத்தால் தானே!

## 9. அறத்தான் வருவதே இன்பம். Always do the right thing and not what is convenient.

பரதன் ராமரிடம் தசரதர் வியோகத்தை தெரிவிக்கிறான். ராமர் மயங்கி விழுகிறார். பின்னர் தெளிந்து அப்பாவுக்கு தர்ப்பணம், பிண்ட தானம் செய்கிறர். வசிஷ்டரும் அம்மாக்கள் எல்லாரும் வந்து ராமர், சீதை லக்ஷ்மணரைக் கட்டிண்டு, முதுகைத் தடவி அன்பை காட்டுகிறார்கள். மறு நாள் காலை பரதன் எல்லோரும் முன்னிலையில் ராமரை வணங்கி கைகேயியும் தசரதரும் செய்த ஏற்பாட்டை வெறுத்து பேசி, "நாங்கள் தம்பிகளும், மந்த்ரிகளும், ரிஷிகளும், சேனைத் தலைவர்களும், கைகேயி உள்பட எல்லோரும் உன்னையே ராஜாவாக விரும்புகிறோம். தயவு செய்து அயோத்திக்கு திரும்ப வா" என்று காலில் விழுந்து கெஞ்சுகிறான்.

ராமர் "உன் அம்மா வரம் கேட்டதும் தப்பில்லை. அப்பா உயிரைக் காப்பாத்தினதால் அவளுக்கு கேட்க உரிமை இருந்தது. அப்பாவுக்கு தன் மனைவி மக்களை இஷ்டப்படி வைக்க உரிமை உண்டு. அதனால் அவர் வரம் குடுத்ததும் தப்பில்லை. இப்ப நாம் அவர் சொன்னதை அப்படியே கேட்டு நடக்க வேண்டும். அப்போ தான் அவர் குடுத்த சத்யம் நிற்கும். நான் காட்டுக்கு ராஜா நீ நாட்டுக்கு ராஜா, அவ்வளவு தான். வருந்தாதே" என்று சமாதானம் செய்கிறார்.

பரதன் "உனக்கு பதிலாக நான் காட்டில் இருக்கேன்" என்கிறான். "தசரதர் சொர்கம் போய் விட்டார். இனிமே அப்படி மாத்த முடியாது." என்கிறார் ராமர். ஜாபாலினு ஒரு ரிஷி "கையில் கிடைத்ததை அனுபவி. சத்யம், அம்மா, அப்பா என்று பலதை போட்டு குழப்பிக்காதே" என்று சொன்னவுடன் கடும் கோபத்தோடு அந்த நாஸ்திகப் பேச்சை ராமர் கண்டித்து "சத்யத்தில் அல்லவா உலகமே நிற்கிறது. உம்மை எப்படி எங்கப்பா பக்கத்தில் வெச்சுண்டு இருந்தார்" என்று கோபிக்கிறார். ஜாபாலி மன்னிப்பு கேட்கிறார்.

வசிஷ்டர் "நான் குலகுரு, நான் சொல்லிக் கேட்டால் பரவாயில்லை" என்று சொல்லும் போது "அப்பா வார்தையை மீறி நீங்கள் சொல்வதை செய்ய முடியாது" என்று கூறி விடுகிறார். மற்ற ரிஷிகள் ராமர் சொல்வதையே ஆமோதிக்கிறார்கள். பிறகு ராமர், வசிஷ்டர் சொன்னபடி இரு பாதுகைகளில் ஏறி நின்று, இறங்கி, அவற்றை பரதனுக்கு அளிக்கிறார். பரதன் அதை ஏற்றுக் கொள்கிறான்.

ராமர் தான் தர்மத்தில் இருந்து மாறாமல் ஹிமவானைப் போல் உறுதியாய் இருந்து, வந்த எல்லோரையும் திரும்பி போகச் செய்கிறார்.

பரதன் ராம பாதுகைகளை தலையில் வைத்துகொண்டு, பரத்வாஜரை தரிசித்து விட்டு, அயோத்திக்கு திரும்புகிறான். ராமர் இல்லாத அயோத்தியில் இருக்கப் பிடிக்காமல் பக்கத்தில் நந்திக்ராமம் என்ற இடத்தில் ராம பாதுகைகளுக்கு பட்டாபிஷேகம் செய்து, அவற்றை முன்னிட்டு ராஜ்ய கார்யங்களை நடத்துகிறான். ஆனால் எந்த ராஜ போகங்களையும் அனுபவிக்காமல் ராமர் காட்டில் வசிப்பதை போல், நாட்டில் இருந்தும், ஜடை போட்டுண்டு மரவுரி தரித்து, தபஸ்வியாக ராமர் வரும் நாளை எண்ணி கழிக்கிறான்.

ராமர், அத்ரி முனிவர் அனஸூயா தேவியை தரிசித்து விட்டு தண்டக வனத்துக்கு உள்ளே செல்கிறார்கள். அனஸூயை, அன்போடு தன் தபஸால் வாடாத மாலை, காயாத சந்தனம், கறுக்காத நகைகள் முதலியவற்றைத் வரவழைத்து ஸீதைக்கு போட்டு அழகு பார்க்கிறா. "உன் ஸ்வயம்வரம் நடந்த கதையை சொல்லு" என்று கேக்கறா. ஸீதையும் அதை ருசியாக சொல்கிறாள். அதில் "ராமர் வில்லை முறித்தார். ஜனகர் என்னை அவருக்கு கைப்பிடித்து குடுக்க முன்வந்தார். ஆனால் ராமர், தன் அப்பா ஒத்துண்டா தான் கல்யாணம் பண்ணிப்பேன் என்று சொன்னார். அதன்படி தசரதர் வந்து permission வாங்கிண்டு என்னை கல்யாணம் பண்ணிண்டார்." என்று பாலகாண்டத்தில் இல்லாத ஒரு செய்தியை சொல்கிறாள். மறுநாள் அவர்களிடம் உத்தரவு பெற்று காட்டிற்குள் செல்கிறார்கள்.

ராமரோ பரதனோ convenient ஆ ராஜ்யத்தை எடுத்துண்டு இருக்கலாம். அனா அவா இங்க கிடைக்கிற இன்பத்தைக் காட்டிலும் தர்மத்தால் கிடைக்கும் மோக்ஷத்தையே நம்பினார்கள். So they did the right thing. ஜனகர் குடுத்த போது சீதையை ராமர் ஏற்றுக் கொண்டு இருக்கலாம். But he did the right thing by waiting for his dad's permission.

---

ஸ்வாமிகள் was always like that, He always did the right thing - ஒரு "ராமாயண பாகவத trust" என்று ஆரம்பித்து கடனை சரிக்கட்டி இருக்க முடியாதா? தன் ப்ரவசனத்தில் sabha secretaries சொன்னாப் போல adjust பண்ணிண்டு (adjust பண்றது னா வேற என்ன, நரஸ்துதி

பண்றது தான்) போயிருக்க முடியாதா? தன் சிஷ்யர்கள் செய்யும் பாபங்களை கண்டுக்காமல் இருக்க முடியாதா? மஹாபெரியவா பேரைச் சொல்லி so called பெரிய மனுஷாளை ஸ்னேஹம் பண்ணிக்க முடியாதா?

He was never tempted to do any of that. 'धनेन न रमामहे खल जनान् न सेवामहे न चापलं अयामहे भवभयान्न दूयामहे । स्थिरां तनुमहेतरां मनसि किंच काञ्चीरत स्मरान्तक कुटुम्बिनी चरण पल्लवोपासनाम् ॥ என்று 28 வயதில் சொன்னதை 75 வயதில் ஸித்தி அடையும் வரை கடைபிடித்தார்.

க்யாதி லாப பூஜை வராமல் இருக்க தினம் பகவானை வேண்டிண்டார். தர்மத்தையே உறுதியாகப் பற்றி ஜீவன் முக்தி அடைந்தார். பணத்தில் பாராபக்ஷம் பார்க்காமல் எல்லாருக்கும் பகவான் பேரால ஆறுதல் சொன்னார்.

ஒரு தடவை முட்டுகாடு என்ற இடத்தில் தன் பால் பண்ணையில் விஸ்வநாத ஐயர் இவரை அழைத்து கொண்டு போய் ஒரு வாரம் இருக்க சொன்னார். தன் பக்தர்கள் அவ்வளவு தூரம் வரக் கஷ்டப் படறான்னு தெரிஞ்சவுடன் அடுத்த வாரமே திருவல்லிக்கேணி வந்துட்டார். வெள்ளைப் பண்டம் விற்பது சாஸ்த்ர சம்மதம் இல்லை என்று சொல்லி அவரை அந்த பால் பண்ணையை விற்கச் செய்தார்.

கடனை இன்ன தேதியில் திருப்பி தரேன் என்று சொன்னால் உயிரைப் பணயம் வைத்தாவது அதைத் திருப்பி குடுப்பார். எங்காத்து வாத்யார் நாரயண சாஸ்த்ரிகளிடம் வாங்கின கடனை ஒரு நா ராத்திரி 11 மணிக்கு கதவை தட்டி திருப்பி குடுத்திருக்கார்.

என்னை போல ஒரு பைசா குடுக்க முடியாத நிலையில் இருந்தாலும், வந்து நமஸ்காரம் பண்ணின பசங்களுக்கு ஞான ஸர்வஸ்வத்தையும் கொட்டி ராமாயண பாகவதத்தை சொல்லி குடுத்தார். நாங்க என்ன கைம்மாறு பண்ண முடியும்? நான் பணம் ஸம்பாதிக்க ஆரம்பிச்ச பின் அவருக்கு குடுக்க try பண்ணி இருக்கேன். 'கணபதி ஸுப்ரமணியன், அப்பா பிரியப்பட்டது குடுக்கட்டும். நீ எனக்கு என்னிக்கும் பணமே தர வேண்டாம். நீ ராமாயணம் படி. அது தான் எனக்கு திருப்தி' என்று பலமுறை சொல்லி இருக்கிறார். என்னை எப்பவும் அன்போடு முழுப் பேர் சொல்லி தான் கூப்பிடுவார்.

ஸ்வாமிகள், ஆதிசங்கரர் காண்பித்த வழியில், ஷண்மத தெய்வங்களையும் பாகுபாடு இல்லாமல் வழிபடுவதையே ஒத்துப்பார். ராமாயண பாகவதத்திலேயே சிவ பக்தி இருப்பதையும், சிவபுராணங்களில் விஷ்ணு பக்தி இருப்பதையும் எடுத்துக் காட்டுவார். அந்தந்த தெய்வத்தை வழிபடும் போது அந்த உண்மைப் பொருளில் அவரைப் போல லயித்து விட அவரால் தான் முடியும். வைஷ்ணவர்களிடம் 'ராமரும், க்ருஷ்ணரும், வெங்கடேசப் பெருமாளும், ரங்கநாதரும் ஒண்ணு னு நீங்க நினைப்பது போல அதோடு சேர்த்து பரமேச்வரனும் அம்பாளும் அதே வஸ்து தான் என்று நாங்கள் நினைக்கிறோம்' என்பார்.

அதே போல நாமத்தில் அவருக்கு இருந்த பக்தி. ஏழு கோடி மஹாமந்த்ரங்களும் ராம நாமத்தில் அடக்கம் என்று முழு நம்பிக்கையோடு இருந்தார். 'மஹாபெரியவா ஒரு மணி ஜபம் பண்றது ராம நாமம் தான். அதனால் தான் அவருக்கு அத்தனை மஹிமை' என்று சொல்வார். சிவன் ஸார், மஹாபெரியவா ஒத்துண்ட பாகவத சாஸ்த்ரத்தில் சொன்ன பக்தி மார்கத்தின் மஹிமையை தன் அநுபவத்தாலும் அறிந்து அது தான் right என்று இருந்தார்.

சில பேர் 'இவர் பிடிவாதத்தால் இப்படி கஷ்டப்படறார். நான் இந்த உபாஸனை (அவாவா பண்ற மந்த்ரஜபம், மண்டகப்படி, ஹோமம்) பண்றதால பகவான் என்னை நன்னா வெச்சிருக்கான்.' என்று இவர் காதுபடச் சொல்வார்கள். இவர் 'சரி. அதைப் பண்ணிப் பார்ப்போமே' என்று கிளம்ப மாட்டார். அடுத்த ஒரு ஆபத்து வரும்போது, அவா தான் இவர் கிட்ட பயந்து அடிச்சுண்டு வருவா. இவர் பகவந் நாமங்களால் ஆன ஒரு ஸ்லோகம் சொல்லிக் குடுப்பார்.

போதேந்திராளைப் போல தெய்வீக யோக்யதை இவருக்கு இருந்ததால், அந்த நாம மந்திரத்தாலேயே சூரியனைக் கண்ட பனி போல வந்த ஆபத்து விலகிவிடும். அப்பறம் வேதாளம் முருங்கை மரம் ஏறிவிடும். அவா அடுத்த ஸாமியார் கிட்ட பணத்தைக் கொட்டி நல்ல பேர் வாங்க போயிடுவா. இவர் பாகவத புஸ்தகத்தை பிரிச்சு படிக்க ஆரம்பிப்பார். அப்ப அதெல்லாம் நல்ல கார்யம் இல்லையா என்ற கேள்வி வரும். பக்தியோடு பகவானை நாமங்களால் அர்ச்சிப்பதே எல்லாவற்றிற்கும் மேலான தர்மம், என்று பீஷ்மர் விஷ்ணு ஸஹஸ்ரநாம ஆரம்பத்தில் சொல்லியிருப்பது தான் பதில். அதற்காக சாஸ்த்ரங்களை ஸ்வாமிகள் விட்டுவில்லை. See next chapter.

## ஆரண்ய காண்டம்

## 10. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு

ஸீதையோடும் லக்ஷ்மணனோடும் ராமர் அடர்ந்த காட்டுக்குள் நுழைகிறார். அங்கு முனிவர்களை வணங்குகிறார். விராதன் என்ற அரக்கனை வதம் செய்கிறார். சரபங்கர் என்ற முனிவரை தேடிப் போய் வணங்குகிறார். சரபங்கர் தன் தவத்தை ராமருக்கு அர்ப்பணித்து, அவர்கள் கண் முன்பே தீயில் உடலை உகுத்து விட்டு, திவ்ய தேஹத்தோடு ப்ரஹ்மலோகம் செல்கிறார்.

ரிஷிகள் ஞான த்ருஷ்டியால் ராமரை பகவான் என்று அறிந்து, தங்கள் தவத்திற்கு இடையூறு விளைவிக்கும் ராக்ஷஸர்களிடம் இருந்து காப்பாற்றும்படி கேட்கிறார்கள். ராமரும் அவர்களுக்கு அபயம் அளிக்கிறார். பின்னர் மூவரும் ஸுதீக்ஷ்ணர் என்ற ரிஷியை கண்டு வணங்குகிறார்கள். ஸுதீக்ஷ்ணர் அவர்களுக்கு உணவளிக்கிறார்.

ஸீதை "உங்களிடம் ஏதும் விரோதம் இல்லாத போது ராக்ஷஸர்களை நீங்கள் ஏன் வதம் செய்ய வேண்டும்?" என்று கேட்கிறாள். "ப்ராம்மணர்களை காப்பது என் கடமை. அவர்களுக்கு குடுத்த வாக்கின்படி நடப்பேன்" என்று ராமர் பதில் சொல்கிறார்.

பத்து வருடங்கள் பல முனிவர்களின் ஆஸ்ரமங்களில் ஆனந்தமாய் கழித்துவிட்டு, ராமர் அகஸ்த்திய முனிவரை சென்று தரிசிக்கிறார். அகஸ்த்யர் ராமருக்கு விஷ்ணு தனுசை குடுத்து ஆசீர்வதிக்கிறார். "நீ என்னுடன் இருக்க விரும்புவது தெரியும். ஆனால் நான் சொல்வதைச் செய். கோதாவரிக் கரையில் பஞ்சவடி என்ற இடத்தில் போய் தங்கு" என்று சொல்கிறார். அதை ஏற்றுக் கொண்டு ராமர் பஞ்சவடி சென்று, ஜடாயுவை கண்டு அவரோடு பேசி friendship பண்ணிக்கறார். அவர்கள் தங்குவதற்கு லக்ஷ்மணன் கட்டின பர்ணசாலையை பார்த்து சந்தோஷப் பட்டு ராமர் அவனை கட்டிண்டு கொண்டாடுகிறார்.

---

ஸ்வாமிகள் பற்றைக் கடந்த ரிஷிகள், கருணையொடு prescribe பண்ணின தர்ம சாஸ்த்ரங்களை ரொம்ப நம்பிக்கையோடு கடைபிடித்தார். பாடசாலையில் ஆரம்பித்த யஜுர் வேதம், அப்பறம் முழுக்க அத்யயனம் பண்ணினார். தன் 2 பிள்ளைகளுக்கு வேதம் சொல்லிக் குடுத்தார். ப்ரஹ்ம முஹுர்த்தத்தில் எழுந்து ஸ்னானம்,

ஸந்த்யாவந்தனம், அப்பறம் மாத்யான்னிகம், ப்ரம்மயக்ஞும் தவறினதே கிடையாது. பர்யேணி தர்ப்பணம், ச்ராத்தம் எல்லாம் ரொம்ப மடியாகப் பண்ணுவார். ஸப்தாஹத்துக்கு நடுவில் தீட்டு ஏதாவது வந்தால், அதைக் காத்து விட்டு அந்த portion சேர்த்து வைத்துப் படிப்பார். நாள் கிழமை பார்த்து நல்ல கார்யங்களை ஆரம்பிப்பார்.

மஹாபெரியவா கிட்ட கோகுலாஷ்டமி ஒட்டி ஸப்தாஹம் பண்ற அந்த வாரத்தில் அம்மாக்கும், சித்திக்கும் (அப்பாவொட second wife) ச்ராத்தம் பண்ணிட்டு, மூல பாராயணம் முடிச்சுட்டு, சாயங்காலம் ப்ரவசனம் பண்ணினார். தான் follow பண்ற அனுஷ்டானத்துக்காக யாரையும் ச்ரமப் படுத்த மாட்டார். So it created respect for those practices in the mind of even an agnostic like me.

நேராகப் பார்த்த தன் அப்பா, மஹாபெரியவா, போலகம் ராமா சாஸ்த்ரிகள், தன் school teachers, மற்றும் ராமக்ருஷ்ண பரமஹம்சர், வள்ளிமலை ஸ்வாமிகள், சேஷாத்ரி ஸ்வாமிகள் இவா சரித்ரம், உபதேசங்களை நிறைய வாட்டி படிச்சு அவாளை எல்லாம் mentors ஆ வெச்சுண்டு தன் வாழ்க்கையை நடத்தினார். அவர் follow பண்ணும் போது those practices took a special meaning - It was obvious that the godliness and purity that he gained through bhakthi, was being retained by ஆசார அனுஷ்டானம் etc. They were more for cleanliness and simplicity and not to show off. Modern technology, ameneties எல்லாம் avoid பண்ணுவார். The focus was on developing bhakthi, kindness, honesty, getting rid of ego and attachment etc. than ஆசார அனுஷ்டானம்.

இப்படி ரிஷிகள், மஹான்கள் வார்த்தைகளை பிடிச்சுண்டு, பற்றுகளை evolutionaryயா விடுவது போல விட்டார். என்னிக்குமே அவர் பற்றற்ற ஞானி தான். கருணையினால், நாம் ஒரு உண்மையான பாகவதர் (பகவானைச் சேர்ந்தவர்) எப்படி இருப்பார் என்று தெரிஞ்சுக்க வேண்டி, அப்படி உறவு பிரிவெல்லாம் வந்துட்டு போனாப் போல காண்பிச்சார். பாகவதம் படிச்சா தாபத்ரயமும் அடியோடு போய்விடும் என்ற வரிக்கு இப்படி ஒரு living example இல்லைனா நமக்கு அதில் எப்படி நம்பிக்கை வரும்? ‘எதை விட முடியறது’, என்று சொல்லிக் கொண்டு மேலும் மேலும் உலகவிஷயங்களில் முழுகி விடுவோம்.

ஸ்வாமிகள் மஹாபெரியவாளுடைய உறவுக்காரா எல்லார் கிட்டயும் எப்பவுமே பக்தியா இருப்பார். ‘சிவன் ஸார் எனக்காக மஹாபெரியவா எடுத்துண்ட இன்னொரு உருவம்’ என்று சொல்வார். சிவன் ஸார் உத்தரவின் பேரில் ஒரு தடவை 15 நாளில் பாகவதம் உபன்யாசம் பண்ணினார். அவருக்காக த்ருவ சரித்ரம், ஜடபரத சரித்ரம் எல்லாம் சொல்லி இருக்கார். சிவன் ஸார் அனுப்பின பேர்களுக்கு பகவத் கீதை, விஷ்ணு ஸஹஸ்ரநாமம், சங்கரபகவத்பாதர் அருளிய ஷண்மத தெய்வங்களுடைய ஸ்தோத்ரங்கள் எல்லாம் சொல்லிக் குடுத்தார்.

சிவன் ஸாருடய ‘ஏணிப்படிகளில் மாந்தர்கள்’ புஸ்தகத்தைப் படித்து கண் ஜலம் விடுவார். "நான் இந்த உலகத்தில் materialists நடுவுல தனியாக ஏதோ சில ideals follow பண்ணிண்டு இருந்தேன். எதோ consolationக்கு சொல்றார் என்று நினைப்பா. சிவன் ஸார் book படிச்சப்பறம் தான் அவர் இதையெல்லாம் ஒத்துண்டு இருக்கார் னு நிம்மதியாச்சு" என்று சொல்வார்.

One word of warning he gave me - "பற்றுகளை விட்டு, உண்மையை தேடிக் கண்டு கொண்ட மஹான்களை அண்டி, அவர்கள் சொல்வதை பின்பற்றினால், நாமும் ஆசாபாசங்களில் இருந்து விடுபடலாம். நம் உலகக் கடமைகளையும் கோபதாபம் இல்லாமல் அன்போடு செய்யலாம். அப்படிப்பட்ட மஹான்கள் அரிதாகி விட்ட இந்தக் காலத்தில், மஹான்களுடைய வாக்கு (ராமாயணம் பாகவதம், ஏணிப் படிகளில் மாந்தர்கள், திருப்புகழ் etc.) அந்த books, அது தான் இந்த காலத்தில் நிஸ்ஸங்கத்தை குடுக்கக் கூடிய ஸத்சங்கம். தெய்வத்தை விற்று புகழ் பணம் கூட்டம் சேர்க்கும் போலி சாமியார்களிடம் சேர்ந்து பற்றுகள் அதிகமாகி அல்லல் படாதே."

Conclusion: With him as our ideal state, நாம் முடிஞ்ச வரைக்கும் ரிஷிகள் சொன்னதைக் கேட்டுண்டு, மூணு வேளை ஸந்த்யாவந்தனம் பண்ணிண்டு, humble ஆ books மூலம் தனிமையில் ஸத்சங்கம் பண்றது best option - இது ரொம்ப கஷ்டம் தான். எல்லாரும் சன்யாசி கிடையாதே. As social animals we are desperate for approval from others around us என்பது இருந்தாலும், இந்த ideal ஞாபகமாவது இருந்தால் தான், ஸத்ஸங்கம் என்று பேரில், சமூகத்தில் அதர்மம் மலிவதற்கு நாம் காரணமாகாமல் இருப்போம்.

## 11. தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்

சூர்பணகை வந்து ராமரிடமும் லக்ஷ்மணரிடமும் தன் ஆசைக்கு இணங்குமாறு கேட்கிறாள். அவர்கள் அவளிடம் வேடிக்கையா பேசவே, அவள் சீதையை கொல்ல வருகிறாள். ராமர் சொல்படி லக்ஷ்மணன் அவளை மூக்கறுத்து தண்டிக்கிறான். அவள் சென்று ஜனஸ்தானத்தில் கரன் என்ற ராக்ஷஸனிடம் முறையிடுகிறாள். கரன் அனுப்பிய 14 ராக்ஷஸர்களை ராமர் வதம் செய்கிறார்.

சூர்பணகை போய் கரனை மீண்டும் தூண்டி விடுகிறாள். கரன் 14000 ராக்ஷஸர்களோடு ராமருடன் யுத்தம் பண்ண வருகிறான். ராமர் லக்ஷ்மணனிடம் சீதையை பார்த்துக்க சொல்லிட்டு, அகஸ்த்யர் குடுத்த வில்லையும், விச்வாமித்ரர் சொல்லிக் குடுத்த அஸ்த்ரங்களையும் கொண்டு, அனைவரையும், தனி ஒருத்தராக, வதம் பண்ணுகிறார்.

அகம்பனன் என்ற ஒரு ராக்ஷஸன் தப்பிச்சு போய் ராவணனிடம் ஜனஸ்தான வதம் பற்றிச் சொல்லி, "நீ மஹாபராக்ரமசாலியான அந்த ராமரோடு யுத்தம் பண்ண முடியாது. அவன் மனைவியை அபகரித்து வந்து விடு. ராமர் சீதையை பிரிந்து துக்கம் தாங்காமல் உயிர் விட்டு விடுவார்" என்று துர்போதனை பண்றான். ராவணன் வந்து மாரீசனிடம் help கேக்கறான். அந்த வாட்டி மாரீசன் சொன்ன புத்திமதியை எற்று லங்கைக்குத் திரும்பி போய்விடுகிறான்.

சூர்பணகை ராவணனிடம் வந்து "உனக்காக ஸீதை என்ற ஒரு அழகான பெண்ணைத் தூக்கிண்டு வர பார்த்தேன். என்னையும் மூக்கறுத்து, கர தூஷணர்களையும் ராமர் வதம் பண்ணிட்டார். நீ போய் அதுக்கு பழிக்கு பழி வாங்கிட்டு சீதையை எடுத்துக்கோ" என்று காமத்தை தூண்டி விடுகிறாள்.

ராவணன் வந்து மாரீசனை மாய மானாகப் போகச் சொல்கிறான். மாரீசன் ராமருடைய குணங்களையும் வீரத்தையும் எவ்வளவோ எடுத்து சொல்லியும் கேக்காமல், "இப்ப நீ போகலைன்னா ஒன்னை கொன்னுடுவேன்" என்று மிரட்டி அவனை மானாகப் போக வைக்கிறான். லக்ஷ்மணன் ‘இது மாரீசன் மாயை, மானல்ல’ என்று சொல்லித் தடுத்தும், ராமர், ஸீதை ஆசையாக கேட்டதால் அந்த மானை பிடிக்கப் போகிறார். லக்ஷ்மணனும் போனவுடன், ராவணன் கபட சன்யாசியாக வந்து சீதையை அபகரிக்கிறான்.

ராம லக்ஷ்மணா சூர்பணகை கிட்ட பரிஹாஸமா பேசினதே வினை ஆனது. சூர்பணகையால் கர தூஷணர்களுக்கும், பின்னர் ராவணனுக்கும் பெரும் கேடு விளைந்தது. ராவணால் மாரீசனுக்கு உயிர் போச்சு. லக்ஷ்மணன் warn பண்ணியும் கேட்காமல் மாய மானை விரும்பிய சீதைக்கு ராமரைப் பிரியும் துன்பம் நேர்ந்தது. So துஷ்டர்களிடம் இருந்து தூர விலகி இருப்பதே மேல்.

---------------------------------------------

ஸ்வாமிகள் வாழ்ந்த காலகட்டத்தில் வேண்டாத politics, cinema, club எல்லாம் ஜாஸ்தியாச்சு. அவர் அவற்றை discuss பண்ணவே மாட்டார். ராமாயணத்திலியே ஸ்வாமிகள் எல்லாம் சொல்ல மாட்டார். அஹல்யா சாப விமோசனம் "கௌதமர் குளித்து தேஜோமயமாக கமண்டலம் எடுத்துண்டு வந்தார்" என்ற இடத்தில் தான் ஆரம்பிப்பார். ராவணன் சீதையை வர்ணிப்பது, வாலி ராமரை question பண்றது எல்லாம் சொல்ல மாட்டார். "ஸீதை ராவணனுக்கு answer பண்ணினது, ராமர் வாலிக்கு answer பண்ணினது, அதைச் சொன்னா question தானா புரிஞ்சுடுமே" என்று சொல்வார்.

"மேலே போனா மேன்மை கிட்டும். மத்தவா comments எல்லாம் விட்டு தள்ளு" என்பார். "योषितां संगि संगम् கூட கூடாது' என்று materialist ஆவே பேசிண்டு இருந்தா அவாளை கழட்டி விட்டுடுவார். இல்லை பகவானிடம் அவர்களை விலக்கும் படி வேண்டிப்பார். ஆரோக்யம் கொறஞ்ச போது "ப்ரவசனம் பண்றதை காட்டிலும் மூல பாராயணமே பண்றேன். அது தான் பெரிய புண்யம்" என்று முடிவெடுத்ததுக்கு அது ஒரு reason. சுகர் வால்மீகி போன்ற மஹரிஷிகள் கூட இருப்பது தான் அவருக்கு ஆனந்தமாய் இருந்தது.

க்ருஹஸ்தனா இருந்தால் தீட்டு போன்ற வேளைகளில் 3 நாள் 10 நாள் பாராயணம் பண்ண முடியாமல் போனது, அவருக்கு இருந்த தெய்வ பாசத்தினால், தாங்க முடியாத கஷ்டமாய் இருந்தது. அவர் பாகவத ஸந்நியாஸம் வாங்கி கொண்டதுக்கு அது ஒரு காரணம். இது என்னோட observation. ஸ்வாமிகள் தானே கூட இப்படி சொல்ல மாட்டார். ஏன்னா இந்த காலத்தில் போலி பாகவத பண்டிதர்கள் 'பக்தி பண்ணினா போதும். தீட்டெல்லாம் பார்க்க வேண்டாம்' என்று சொல்வது போல ஆகிவிடும். எனக்கு புரிஞ்சது - ஸ்வாமிகள் சாஸ்த்ரங்களை கைவிடவில்லை. கடந்து சென்றார்.

## 12. எதுவும் எதிர்பார்க்காத பகவத் பக்தியே (அஹைதுகீ பக்தி) ஜீவன் முக்தி

ஸீதையை ராவணன் தூக்கி செல்லும் போது, ஜடாயு தடுத்து, அவனோடு யுத்தம் பண்றார். ஜடாயு ஜெயித்துக் கொண்டே வரும்போது, அவர் மூக்கால் கொய்த ராவணன் கைகள் மீண்டும் முளைக்கின்றன. வாளால் வயதான அந்த பக்ஷியை வெட்டி விழ்த்தி விட்டு, ஸீதையை தூக்கி கொண்டு போய்விடுகிறான். ஸீதை மலை மேல் நிற்கும் ஐந்து வானரர்களை பார்த்து, தன் நகைகள் சிலதை கழட்டி துணியில் முடிஞ்சு தூக்கி போடறா.

ராவணன் லங்கையில் தன் செல்வத்தை எல்லாம் காண்பித்து சீதையிடம் ஆசை வார்த்தைகள் பேசுகிறான். ராக்ஷஸிகளை விட்டு பயமுறுத்துகிறான். ஸீதை எதையும் பார்க்காமல் தன் கணவனும் தெய்வமுமான ராமரையே நினைத்து தவமாய் அமர்கிறாள்.

லக்ஷ்மணனை கண்ட ராமர் அவனிடம் "என் ஆணையை மீறி ஏன் ஸீதையை விட்டு விட்டு வந்தாய்?" என்று திட்டுகிறார். இருவரும் வந்து பார்த்து ஸீதையை காணாமல் எங்கும் தேடுகிறார்கள். ராமர் அழுது புலம்பும் போதும், உலகையே அழிப்பேன் என்று கோபப் படும்போதும் லக்ஷ்மணன் அவர் கால்களை பிடித்துக் கொண்டு 'ராமா, நீ ஸாதுக்களின் புகலிடம் அல்லவா? ஒருத்தன் பண்ணின தப்புக்காக உலகை அழிக்கலாமா? மேலும் தேடுவோம்' என்று சமாதானம் செய்கிறான். அடிபட்டு கிடக்கும் ஜடாயுவைக் கண்டு ராமர் மேலும் துக்கப்படுகிறார். ஜடாயு "சீதையை ராவணன் தூக்கிண்டு போயிருக்கான். உனக்கு மீண்டும் கிடைப்பாள்" என்று சொல்லி அவர் மடியில் உயிரை விடுகிறது. அப்பாவைப் போல அன்பு காட்டிய அந்த பக்ஷிக்கு ராமர், மந்த்ர பூர்வமாக சம்ஸ்காரம் செய்து வைகுண்டம் அனுப்புகிறார்.

ஒரு கபந்தமான (தலை இல்லாத) அரக்கனை கைகளை வெட்டி எரித்த பின் அவன் "தனு" என்ற கந்தர்வனாக மாறி "ராமா! ரிஷ்யமூக மலையில் உள்ள சுக்ரீவன் என்ற வானரத்தோடு ஸ்னேஹம் செய்துக் கொள். அவன் உனக்கு ஸீதையை தேடித் தருவான்" என்று சொல்லி விமானத்தில் மேலுலகம் செல்கிறான். ராம லக்ஷ்மணர்கள் சபரி என்ற வேடுவ ஸ்த்ரீ, மதங்க முனிவருக்கும் அவர் சிஷ்யர்களுக்கும் செய்த கைங்கர்யத்தால் ராம மந்த்ரம் கிடைக்கப் பெற்று, அதனால் ஸித்தி

அடைந்து விளங்குவதை பார்த்து, அவள் பூஜையை எற்கிறார். சரபங்கரைப் போல சபரியும் தன் உடலை தீயில் உகுத்து விட்டு, திவ்ய தேஹத்தோடு மதங்க முனிவர் சென்ற அதே உலகத்துக்கு, வைகுண்டத்திற்குச் செல்கிறாள்.

---------------------------------------------

ஸ்வாமிகள் சொல்வார் - "பக்தி என்றால் ஏதோ கோவிலுக்கு போறது, எதோ சில ஆவர்த்தி பாராயணம் பண்ணுவது தானா? த்யாகராஜ ஸ்வாமிகளோ அருணகிரிநாதரோ இத்தனை ஆவர்த்தி ஜபித்தேன் என்று பாடி இருக்காளா? "முருகன் குமரன் குஹன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர்வென்று அருள்வாய்" என்று தானே பாடுகிறார்? அப்படி மனஸு உருகி அவனிடம் தஞ்சம் புகுந்தால் அருள் கிடைக்குமே!

பக்தி மார்கத்தில் hypocrisy ஜாஸ்தி ஆயிடுத்து. கர்ம மார்கத்தில் எல்லார் கண் பார்க்க ஸந்த்யாவந்தனம் பண்ணித் தான் ஆகணும். பண்ணிட்டா மாதிரி நினைச்சுக்க முடியாது. ஞான மார்கத்தில் உலகத்தை துறந்து ஸந்யாசியாய் போகணம். பக்தி மார்கத்தில் 'நான் ஸ்வாமியை நினைத்துக் கொண்டே இருக்கேன்' என்று சொல்லிவிடலாம். அதுனால இது bed of roses என்று நினைத்து கொள்கிறார்கள். பக்தர்கள் சரித்ரத்தைப் படித்தால் அப்படியா வருகிறது? எவ்வளவு சோதனை! முன்ன புரந்தரதாஸர் 9 கோடி வராகனை விட்டுட்டுப் போனார் என்றால் மஹான் என்றார்கள். இந்த காலத்து மட்டி ஜனங்கள் 'field க்கு வந்து 2 வருஷத்துல 10 கோடி சேர்ந்துட்டார். புது கோவில் கட்டிட்டார். என்ன கூட்டம். என்ன மஹிமை' என்று சொல்கிறார்கள்.

பக்தி மார்கம் செக்கனி ராஜ மார்க்கம் தான். 'नेदिष्ठामेव कामपीठ गताम्' என்று ரொம்ப பக்கத்துல உள்ளுக்குள்ள பகவானை பார்க்கலாம்! யந்த்ர தந்த்ர மந்த்ரமெல்லம் வேண்டாம்! ஆனா உள்ள பகவான் வந்துட்டா சுக துக்கம், லாப நஷ்டம் எல்லாம் ஒண்ணும் பண்ணாத நிலைமைக்குத் தான் பக்தினு பேர். அது வரைக்கும் சோம்பலை ஒழித்து இடையறாது பஜனம் பண்ண வேண்டும். "ஸ்தித ப்ரக்ஞனும், உத்தம பக்தனும், ஞானியும் ஒண்ணு தான்." என்று மஹாபெரியவா கிட்டயே சொல்லி approval வாங்கி வெச்சுருக்கேன்" என்பார்.

ஸீதாதேவியும், லக்ஷ்மணரும், ஜடாயுவும், சபரியும் அஹைதுகீ ராம பக்தியால் அடைந்த அந்த நிலையை ஸ்வாமிகள் அடைந்து, ஜீவன்

முக்தராய் ப்ரகாசித்தார். மனுஷாளுக்கு வர கஷ்டதுல்ல பெரிய்ய கஷ்டம் புத்ர சோகம் - அதுவே அவரை ஒண்ணும் பண்ணலியே. ஸந்நியாசிக் கோலத்தில் தன் பாகவத பாராயணத்தை அன்னிக்கும் பண்ணின்டு இருந்தார். 'ப்ரம்ம ஸத்யம் ஜகன்மித்யா' என்ற ஞானம் இல்லைன்னா, துக்கம் தொண்டையை அடைக்காமல் இருக்குமா? கண் ஜலம் வராம இருக்குமா? பாகவத புஸ்தகத்தைப், பிரிச்சு வெச்சுண்டு படிக்க முடியுமா?

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு கதை சொல்வார் - ஒரு குடியானவன் ஞானியாக இருந்தானம். அவன் குழந்தை தவறிப் போய்விட்டது. அவன் மனைவி அழறா. இவன் கிட்ட 'நீ அழமாட்டியா, உன் மனம் கல்லா?' என்று கேட்கிறாள். இவன் சொல்றான், 'நேத்தி ராத்திரி ஒரு கனவு கண்டேன். அதில் நான் ஒரு மஹாராஜாவா இருந்தேன். எனக்கு பத்து குழந்தைகள் இருந்தா. எழுந்து பார்த்தா ஒருத்தரும் இல்லை. அவாளுக்காக அழறதா இந்த குழந்தைக்காக அழறதா?' என்று கேட்டானாம். ஸ்வாமிகள் அந்த நிலையில் இருந்தார்.

ஒரு பைரவி ப்ராஹ்மணி ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் இருந்த உத்தம பக்தி லக்ஷணங்களைப் பார்த்து, அவரை ஒரு அவதார மஹானாக அடையாளம் கண்டு கொண்டு, அதை ஒரு பண்டிதர்கள் சபையில் நிலைநாட்டினார். இன்று உலகமே அதை ஒத்துக் கொள்கிறது. ஆனால் அவர் காலத்தில் அதை எத்தனை பேர் ஒத்துண்டு இருப்பா? அது போல நம் ஸ்வாமிகளைப் பற்றி மஹாபெரியவா போன்ற ஞானிகளே எடுத்து சொல்லியும் கூட, அவரிடம் explanation கேக்கறவா தான் ஜாஸ்தி இருந்தா.

அவரே வேடிக்கையாக சொல்வார். 'வேதபாடசாலையிலிருந்து school லில் சேர்த்தா அப்பா. அதுனால் பெரிய பையனா இருந்துண்டு சின்ன class ல ஏன் படிக்கிறேனு கேட்கும் போது explanation குடுப்பேன். அப்போ ஆரம்பிச்சது. வாழ்க்கை முழுக்க ஏன் எல்லாம் வித்யாசமா பண்றேன் என்பதற்கு explanation குடுத்துண்டே இருக்கேன்.' என்பார். நான் சொன்னேன் - 'நீங்க different இல்லை பெரியவா. unique. ஒரு unique phenomonon. நீங்களே புரிய வெச்சா தான் புரிஞ்சுக்க முடியும்' என்று சொன்னேன். சந்தோஷப் பட்டார்.

सद्गुरो! ज्ञानं मे देहि विशदं मोक्षदं बंधनाशनम्

## கிஷ்கிந்தா காண்டம்

## 13. ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு

ராமரும் லக்ஷ்மணரும் பம்பா ஏரிக்கரையில், ருஷ்யமூக மலை அருகே வந்து சேர்ந்து, அங்கு வசந்த காலத்தின் அழகை ரஸித்து கொண்டே வருகிறார்கள். சீதையை நினைத்து புலம்பும் ராமரை லக்ஷ்மணன் சமாதானம் செய்கிறான். ஸுக்ரீவன் மலை மீதிலிருந்து இவர்களை பார்த்து, 'வாலி அனுப்பி தன்னை கொல்ல வந்தவர்களோ' என்று எண்ணி பயந்து, ஹனுமாரை அவர்களிடம் அனுப்புகிறான். ஹனுமார் ராமரே கொண்டாடும் அளவுக்கு மிக இனிமையாக அவர்களிடம் பேசி, அவர்களை ஸுக்ரீவனிடம் அழைத்து வந்து, ஸுக்ரீவனுக்கும் ராமருக்கும் அக்னி ஸாக்ஷியாக நட்பு செய்து வைக்கிறார்.

ஸீதை தூக்கி போட்ட நகைகளை பார்த்து, ராமர் வருந்தி அழும் போது ஸுக்ரீவன் அவரைச் சமாதானம் பண்ணுகிறான். ஸுக்ரீவன் தானும் மனைவியை பிரிந்து வருந்துவதை சொல்லி, வாலி தனக்கு செய்த துரோகத்தைப் எடுத்துச் சொல்கிறான். ராமர் நான் வாலி வதம் செய்வேன் என்று சொன்னதும் மகிழ்ந்தாலும், ராமரின் வலிமையை சந்தேகிக்கிறான். ராமர் அவன் விரும்பியபடி துந்துபி என்ற அரக்கனின் உடலை எத்துகிறார். சுக்ரீவன் 'வாலி கஷ்டப்பட்டு தூக்கிப் போட்டான். நீ சுலபமாக எத்தி விட்டாய். அதனால் எனக்கு இன்னும் ஸந்தேகம் போகவில்லை' என்கிறான். அதனால் மீண்டும் அவன் விரும்பியபடி ஏழு மரங்களையும் ஒரு மலைச்சிகரத்தையும் ஒரே அம்பால் பிளந்து தன் வலிமையை அவனுக்கு நிரூபிக்கிறார்.

பின்னர் சுக்ரீவன் வாலியோடு யுத்தம் செய்கிறான். இருவருக்கும் வித்தியாசம் தெரியாததால், ராமர் வாலியை கொல்லவில்லை. கோபப்படும் சுக்ரீவனுக்கு அதை விளக்கி, ஒரு கொடியை அவனுக்கு மாலையாக போட்டு, மீண்டும் யுத்தம் செய்யச் சொல்கிறார். தன் மனைவி தாரை தடுத்தும் கேட்காமல் வாலி வந்து சுக்ரீவனோடு மோதி, ராம பாணத்தால் அடிபட்டு விழுகிறான். ராமரிடம் வாதம் செய்கிறான். பின்னர் ராமர் "உன் தம்பி மனைவியை நீ அபகரித்ததால் இந்த தண்டனை" என்று சொன்னதை ஏற்று, அவரை பார்த்தபடியே உயிரை விட்டு மேலுலகம் செல்கிறான்.

தாரை பலவாறு புலம்புகிறாள். ஸுக்ரீவனும் வருந்துகிறான். ஹனுமாரும் ராமரும் அவர்களைத் தேற்றுகிறார்கள். அங்கதனைக்

கொண்டு வாலிக்கு ஸம்ஸ்காரம் செய்வித்து, பின்னர் ராமர் பிரஸ்ரவண மலையில் சென்று வசிக்கிறார். வானரப் பெரியோர்கள் ஸுக்ரீவனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைக்கிறார்கள். ஸுக்ரீவன், ராமர் சொல்படி, வாலி புதல்வனான அங்கதனை யுவராஜாவாக பட்டாபிஷேகம் செய்விக்கிறான்.

---------------------------------------------

ஸ்வாமிகள் தன்னை பிறர் குரு என்று சொல்லுவதை encourage பண்ண மாட்டார். "இப்ப குரு என்பார்கள். அப்பறம் வேர்க்குரு மாதிரி அரிக்கிறது என்று கஷ்டப்படுவார்கள்" என்று joke ஆ சொல்வார். குரு என்றால் அவரிடம் எந்த condition ஓ எந்த reservation ஓ இல்லாமல் போக வேண்டும். அவர் ஒருத்தரால் தான் மஹா பெரியவா கிட்ட அப்படி இருக்க முடிந்தது. So தன் கிட்ட வரவா எல்லாரையும், அவாளுக்கு பாவம் வராமல் இருக்க வேண்டி, friends என்று சொல்லி விடுவார். To be his friend the only criteria was அங்க வந்தா ஸதா ஸர்வதா ஸ்வாமியை பத்தி தான் பேசுவார். அது பிடிச்சா தான் அங்க உட்கார முடியும். பஜனம் பண்ண encourage பண்ணுவார். மத்தபடி மனுஷாளை முகஸ்துதி பண்ண மாட்டார்.

He was fully aware that, what he had to offer was not interesting to all people at all time. So he used to say, I am the way I am. 'वानरा एव नस्छिन्नम्' எல்லாருக்கும் பிடிச்ச மாதிரி என்னால் இருக்க முடியாது. என்னை சகிச்சுக்க முடிஞ்சா என்னை ஒரு friend னு நினைச்சுக்கட்டும்' என்பார். ஆனா அவர் கிட்ட நெருங்கி வந்து friends ஆனவா எல்லாரும் - they were friends for life. Either they died before him or he attained siddhi before them.

But the friendship was always one sided. அவா ஆறுதல் வேண்டும் போது இவர் கிட்ட வந்தா. பகவான் பேரால் இவரால் ஆறுதல் தர முடிந்தது. This consolation was something people could not buy with money or get from women. So he was always giving more than what he took in every friendship. So they stayed with him. நாள்பட அவருடைய மேன்மையை உணர்ந்து, தன் ego வை விட்டு அவரிடம் குரு என்ற பாவனையோடு வணங்கியவர்களை பாவங்களிலிருந்தும் அதன் மூலம் ஆபத்திலிருந்தும் மீட்டார்.

ஒரு தடவை இவரோட ஸ்ரீவித்யா குரு இவரை ஒரு ஆத்தில் ஸுந்தர காண்டம் படிக்கச் சொன்னாராம். இவர் போன போது அவா 'மூணு நாளில் படிப்பேள்' என்று குரு சொன்னார் என்ற போது 'ஸுந்தர காண்டம் படிக்க மூணு நாள் ஆகாது. நான் வேணா மூணு நாளில் மூணு ஆவர்த்தி படிக்கிறேன்' என்று சொல்லி அன்னிக்கு நாலரை மணி நேரத்தில் ஒரு ஆவர்த்தி படித்து விட்டு வந்தார். அவாத்து பையன் காணாமல் போய்விட்டான். திரும்ப வரவேண்டும் என்று அவா ப்ரார்த்தனை. அவா அன்னிக்கு ஸ்வாமிகள் குரு கிட்ட 'நீங்க மூணு நாள் படிப்பார்னு சொன்னேள். அவர் ஒரே நாளில் நாலரை மணி நேரத்தில் மொத்தத்தையும் படிச்சுட்டார். என்ன படிச்சாரோ' என்று இழுத்த போது அந்தப் பெரியவர் கடும்கோபத்தோடு 'அவர் ஒரு ஸுந்தர காண்ட சித்தர். மஹான். அவரைப் போய் ஸந்தேகப் படுகிறாயே. உன் பிள்ளை வரவே மாட்டான்' என்று திட்டிவிடுகிறார். இவா மன்னிப்பு கேட்கறா. 'நீ நாளைக்கு அவர் கிட்டயே இந்த தப்பெண்ணம் வந்து விட்டதுக்கு மன்னிப்பு கேள்' என்று சொல்லிக் குடுக்கிறார். அவாளும் அப்படியே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அப்பறம் மூணு ஆவர்த்தி படிச்சு அந்த பையன் வந்துவிடுகிறான்.

ஸ்வாமிகள் சொல்வார் 'பெரிய கார்யத்தை சுலபமாக பண்ணினா, சுக்ரீவனுக்கு ராமர் கிட்ட வந்த மாதிரி ஸந்தேகம் வந்துவிடுகிறது. இந்தக் காலத்தில் பந்தா பண்ணினா தான் மதிக்கறா. அதுனால ஒழுங்கா இருக்கறவா கூட மாறிடறா. எனக்கு மனுஷா கொண்டாட வேண்டும் என்ற ஆசை இல்லாததால் நான் மாத்திக்கல.'

அவர் கொள்கைகளை புரிந்து கொள்ள முடியாமலோ, உலக விவகாரங்கள் ஜாஸ்தி ஆகும் போதோ, மனுஷா வருஷக் கணக்கா அவரை விட்டுட்டு போய் திரும்ப வருவா. ஆனா அவர் விட்ட எடத்துலேர்ந்து ஆரம்பிச்சுப்பார். ஏன் போன எங்க வந்த? என்று கேட்க மாட்டார். Because he was not attached to them. அவர் கிட்ட பக்தியோடு இருந்தால் கருணை செய்வார். இப்ப இவ்வளவு பேசறேன். நாலு வருஷம் அவரை விட்டுட்டு US போனேனே. திரும்ப வந்த போது அதே அன்போடு இருந்தார்.

ஸ்வாமிகள் தன்னை friend என்று சொல்லிக் கொண்டதிலும் ஒரு அழகு இருக்கிறது. பகவத் கீதையில் பகவான் தான் நமக்கு सुहृत् (எதுவும் எதிர்பார்க்காமல் நன்மையைச் செய்பவர்) என்று சொல்லி

இருக்கிறது. வேற உறவுகளில் கடமை உரிமை எல்லாம் உண்டு. ஸ்வாமிகளிடம் மனம் விட்டு பேச ஒரு friend என்று ஆரம்பித்து, அப்பறம் கொஞ்சம் கொஞ்சமாக அவர் ஒரு सुहृत् என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. முடிவில் உலகில் எல்லாவற்றைக் காட்டிலும் நமக்கு மேலான க்ஷேமத்தை தரும் தெய்வமே தான் இது என்பதை அநுபவித்து உணர்ந்து

त्वमेव माता च पिता त्वमेव त्वमेव बन्धुश्च सखा त्वमेव ।
त्वमेव विद्या द्रविणं त्वमेव त्वमेव सर्वं मम देव देव ॥

என்று அவரிடமே நம்மை ஒப்படைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகிறது. இதில் என்னுடைய ஒரு அநுபவம் என்னவென்றால், அப்படி அவர் எனக்கு सुहृत् என்பதை உணர ஆரம்பித்ததிலிருந்து, எனக்கு அம்மா, அப்பா, உறவு, நட்பு, பணம், படிப்பு எல்லாத்துலேயும் இருந்த மனக் கோணல்கள் சரியாகி, ஓரளவு ஸஹஜமாக பழகி வருகிறேன்.

ஸ்வாமிகளுடைய சின்ன வட்டதில் இருந்த நண்பர்களும் அவர்களுடைய சுற்றமும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே, தான் பட்டாம்பூச்சி போல பறந்து பகவானிடம் போய்விட்டார். அந்த அதிசயத்தைப் பார்த்து பரவசமடைந்து நிற்கிறோம்.

## 14. நன்றி மறப்பது நன்றன்று

ராமர் மழைக்காலத்தை வர்ணித்துக் கொண்டு ப்ரஸ்ரவண மலையில் பொறுமையோடு காத்திருக்கிறார். வெகு காலத்துக்கு பின் ராஜ்யம் கிடைத்ததால் ஸுக்ரீவன் சிற்றின்பத்தில் மூழ்கிவிடுகிறான். இடையில் ஹனுமார் அவனிடம் ராம கார்யத்தை ஞாபகப்படுத்தி, அவன் உத்தரவு பெற்று, நீலனைக் கொண்டு வானரப் படை திரட்டுகிறார்.

ஷரத் ருது வந்த பின்னும் ஸுக்ரீவன் தன்னை வந்து பார்க்காத போது, ராமர் பொறுமை இழந்து லக்ஷ்மணனிடம், கிஷ்கிந்தைக்கு சென்று, ஸுக்ரீவனை warn பண்ண சொல்கிறார். லக்ஷ்மணர் ’அவனைக் கொன்றுவிடுகிறேன்’ என்று கோபப்படும் போது ’அன்று நமக்கு யாருமில்லை என்ற நிலைமையில் ’நானும் நீயும் friends. உன் கஷ்டம் என் கஷ்டம்’ என்று சுக்ரீவன் சொன்னது ஆறுதலாய் இருந்ததே. அதை நினைத்துக் கோபத்தை விடு. சொன்னா வழிக்கு வருவான், கொன்று விடாதே’ என்று சொல்லி அனுப்புகிறார்.

லக்ஷ்மணன் வில்லேந்தி வெகுண்டு வருவதைக் கண்டு வானரர்கள் நடுங்குகிறார்கள். ஹனுமார் ஸுக்ரீவன் மந்திரியாய் இருந்தாலும், பயமின்றி ’நீ காலம் கடந்ததை அறியாமல் இருந்த தப்பிற்கு கைகூப்பி மன்னிப்பு கேட்டுக்கோ. அப்ப தான் உயிர் பிழைக்க முடியும்’ என்று சொல்கிறார்.

தாரை லக்ஷ்மணனிடம் பேசி, அவன் கோபத்தை குறைத்து, ஸுக்ரீவனிடம் அழைத்து வருகிறாள். லக்ஷ்மணன் ’செய்நன்றி மறந்தால் பிராயச்சித்தமே கிடையாது. வாலி போன வழிக்கதவை இன்னும் மூடவில்லை’ என்று எச்சரிக்கிறான்.

தாரை ’வானரப் படை இல்லாமல் ராவணனின் ராக்ஷஸப் படையை ஜெயிக்க முடியாது. வானரப் படை வந்து கொண்டிருக்கிறது. அது தான் delay’ என்று சொல்கிறாள். ஸுக்ரீவன் ’அதெல்லாம் இல்லை. மஹாவீரரான ராமருக்கு ஒரு help ம் வேண்டாம். என் படை ஒரு அலங்காரம் தான். அடிமை அறியாமல் செய்த பிழையை பொறுத்துக் கொள்’ என்று சொல்லவே லக்ஷ்மணன் கோபத்தை விட்டு ’நான் பேசினதையும் மனத்தில் வைத்துக்கொள்ளாதே. என் அண்ணா படும் கஷ்டத்தை பார்த்து சிலது சொல்லிவிட்டேன். வந்து அவரை ஸமாதானம் செய்.’ என்று ராமரிடம் அழைத்து செல்கிறான்.

ஸுக்ரீவன் ராமரிடம் வந்து வீழ்ந்து வணங்கி, தரையில் உட்காருகிறான். அதற்குள் வானர சேனை வந்து சேரவே, ராமர் ஸுக்ரீவனின் பிழையை மன்னித்து, மறந்து அவனை போற்றுகிறார். ஸுக்ரீவன் 'இது உன் படை. உத்தரவு குடு' என்று சொன்னாலும் ராமர் 'என் தேவை என்ன என்று உனக்குத் தான் நன்றாகத் தெரியும். அதனால் நீயே அவர்களுக்கு உத்தரவு குடு' என்று அவனையே தன் காரியத்திற்கு help ஆக வெச்சுக்கறார்.

---

ஸ்வாமிகள் தன்னை முழுமையாக பகவானிடம் ஒப்படைத்து விட்டதால், உலகத்தில் யாரிடமும் அடக்கத்தை காண்பிக்க வேண்டிய தேவை இல்லாமல் இருந்தார். ஆனாலும் தன் எளிய தேவைகளை பூர்த்தி செய்ய நெருங்கி வந்த நண்பர்களிடம், மிகுந்த நன்றியோடு அன்பு பாராட்டினார். அவர்களுடைய குடும்பத்தினர் களுக்கும் நண்பர்களுக்கும் கூட உடம்பு சிரமத்தைப் பார்க்காமல் சத்விஷயங்களை சொல்லிக் குடுப்பார். ஆறுதல் சொல்வார். பஜனம் செய்ய encourage பண்ணுவார். ரொம்ப hope குடுப்பார். ஸுலபமான முறையில் நாமங்களை ஜபித்து பகவானை வழிபட்டு ஆபத்துக்களிலிருந்து மீள வழி சொல்லித் தருவார்.

தாரை சுக்ரீவனுடைய 'வானரப் படை இருந்தால் தான் ராவணனை எதிர்க்க முடியும்' என்று பேசினது போல, தன் நண்பர்களைச் சேர்ந்தவர்கள், தங்களால் தான் ஸ்வாமிகள் குடும்பம் நடக்கிறது என்று நினைத்தால் பொருட்படுத்த மாட்டார். தெரிஞ்சது அவ்வளவு தான் என்று விட்டுவிடுவார்.

தன்னை புரிந்து கொண்டு, அன்பினால் தனக்கு கைங்கர்யம் பண்ணுபவர்களை allow பண்ணுவார். அதற்காகவே தன்னைச் சுற்றி சில சிரமங்கள் இருப்பது போலக் காட்டிக் கொண்டார் என்று நினைக்க தோன்றுகிறது. தன்னளவில் perfectionist ஆ இருந்தாலும் மற்றவர்களிடம் அதை எதிர்பார்க்க மாட்டார். 'அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லாமல் இருந்தா போறும்' என்பார்.

ஸுக்ரீவனைப் போலச் சிற்றின்பக் கடலில் நாம் மூழ்கி இருந்தாலும், ஹனுமாரைப் போல ஸ்வாமிகள் வந்து ஞாபகப்படுத்தி இருக்கிறார். அவர் சொல்லிக் குடுத்ததைப் படித்து, ராம கைங்கர்யம் செய்தால், அதுவே நாம் அவருக்கு செலுத்தும் நன்றியாக இருக்கும்.

ஹனுமார் ஞாபகப் படுத்தின பின், சுக்ரீவன், ராமர் நட்புக்காக உயிரையே த்ருணமாக மதித்து, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ராக்ஷஸர்களோடு யுத்தம் பண்ண வந்தான். அது மாதிரி ஸ்வாமிகள், அவருக்கு அடிமையாக இருக்கக் கூட லாயக்கிலாத நம்மையும் friend என்று சொன்னாரே என்றெண்ணி, நமக்கு பண்ணின உதவியை மறக்காமல் இருந்தால், என்னிக்காவது ஒரு நாள் அவர் இடையறாது தெய்வ பக்தி பண்ணினதோட பெருமை புரியும்.

நாமும் ஸ்வாமிகள் நமக்கு சொன்னதைச் செய்யணம், பஜனமே பண்ணனும், அதுனால உயிரே போனாலும் சரி, என்று கிளம்புவோம். அப்படி கிளம்பினா, உயிர் ஒண்ணும் போயிடாது. ஸுக்ரீவன் ராம பட்டாபிஷேகத்தைப் பார்த்தாப் போல நாமும் அடிக்கடி ராமாயணம் படிச்சு, பூர்த்தி பண்ணி, பட்டாபிஷேகம் பண்ணி பார்த்து ஆனந்தப் படலாம். நம் குழந்தைகளும் ராமாயணத்தில் உள்ள தர்மங்களை தெரிங்சுப்பா. நம்ம மதத்தோட ஆணி வேர் இந்த வால்மீகி ராமாயணம் தானே. So we will be saved from all dangers.

## 15. உன்னால் நிச்சயம் முடியும்; உன்னால் மட்டுமே முடியும்

ஸுக்ரீவன் சீதையை தேட நான்கு திக்குகளிலும் வானரர்களை அனுப்புகிறான். அந்தந்த திசையில் உள்ள நாடு நகரங்கள் நதிகள் ஆபத்துக்கள் எல்லாம் விவரமாக் சொல்லி 'ஒரு மாதத்தில் திரும்பி வர வேண்டும்' என்று கட்டளை இட்டு அனுப்புகிறான். ஹனுமாரிடம் அவன் 'இந்த காரியத்தை முடிக்க உன்னால் நிச்சயம் முடியும்' என்று சொல்லுவதைப் பார்த்து ராமரும் தன் பெயரிட்ட முத்திரை மோதிரத்தை ஹனுமாரிடம் அடையாளமாகத் தந்தனுப்புகிறார்.

மற்ற மூன்று திசைகளிலும் சென்றவர்கள் ஒரு மாதத்தில் திரும்ப வந்து 'தெற்கு திக்கில் சென்றவர்கள் நல்ல செய்தியோடு வருவார்கள்' என்று positive ஆக சொல்கிறார்கள். அங்கதன் தலைமையில் தெற்கு திக்கில் சென்றவர்கள் முயற்சியோடு தேடியும் கிடைக்காமல், பசி தாகத்தால் வாடி, ஒரு குகையில் நுழைந்து ஸ்வயம்ப்ரபா என்ற ஒரு தபஸ்வியை பார்க்கிறார்கள். ஹனுமார் அவளிடம் ராம கதையைக் கூற, அவள் மகிழ்ந்து, அவர்களுக்கு உணவளித்து, தன் தபோ மஹிமையால் அவர்களை வெளியில் கொண்டு விடுகிறாள்.

ஒரு மாதக் கெடு முடிந்து விட்டதால் திரும்பி போக பயந்து, சுக்ரீவனைத் திட்டும் அங்கதனுக்கு, ஹனுமார் புத்தி சொல்கிறார். அவன் 'நான் வடக்கிருந்து உயிரை விடப்போறேன். ஜடாயு ராமருக்காக உயிரைக் குடுத்தது. நாம் சுக்ரீவனுக்கு பயந்து உயிரை விடவேண்டி இருக்கிறது' என்று பேசும் போது ஸம்பாதி என்ற ஜடாயுவின் அண்ணா கழுகு 'ஹா! என் தம்பி ஜடாயுயை பற்றி விவரமாய் சொல்' என்று கேட்கிறது. அங்கதன் விவரம் சொன்ன பின், கடல் ஜலத்தால் தம்பிக்கு தர்ப்பணம் செய்துவிட்டு, 'ஸீதை லங்கையில் ராவணனால் சிறை வைக்கப் பட்டு இருக்கிறாள்' என்று பார்த்து சொன்னவுடன், முன்பு நிஷாகர மஹரிஷி அநுக்ரஹித்தபடி அதற்கு இறக்கைகள் மீண்டும் முளைக்கின்றன. அதைப் பார்த்த வானரர்களுக்கு மீண்டும் நம்பிக்கை ஏற்படுகிறது.

ஆனாலும் 'யார் கடலைக் கடந்து சீதையை பார்த்து வரமுடியும்' என்ற கேள்விவர ஜாம்பவான் ஹனுமாரிடம் 'வாயுபுத்ரனான உன்னால் தான் இந்த காரியத்தை செய்ய முடியும். நாங்களும் ஒற்றைக்காலில் நின்று உனக்காக பகவானை வேண்டுகிறோம். எங்கள் எல்லாருடைய உயிரும் இப்போது உன் கையில் இருக்கிறது.

சென்று வா' என்று உற்சாகப் படுத்துகிறார். ஹனுமாரும் தன் பலத்தை உணர்ந்து, உலகளந்த பெருமாளைப் போல் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டு மஹேந்திர மலையில் ஏறுகிறார்.

ராமர் encourage பண்ணினதுனால் சுக்ரீவன் திறமை (topography of the world) வெளிப்படுகிறது. அங்கதனுக்கும் ஒரு leader post குடுத்து, responsibility வரும் போது எப்படி behave பண்ணனும் என்பதை ஹனுமார், ஜாம்பவான் எல்லாரும் mentor பண்ணறா. எல்லாம் இழந்த ஸம்பாதிக்கு நிஷாகர மஹரிஷி hope குடுக்கறார். ஹனுமான் பெரிய காரியம் செய்வதற்கு 'உன்னால் தான் முடியும்' என்று எல்லோரும் உற்சாகப் படுத்துகிறார்கள்.

---------------------------------------------

மஹா பெரியவா தெய்வத்தின் குரலில் சொன்ன வேத தர்ம சாஸ்த்ரங்களை follow பண்ண முடியலையே, சிவன் ஸார் எழுதின ஏணிப்படிகளில் மாந்தர்களில் ரொம்ப கீழ்ப் படியில இருக்கோமே என்று வருத்தம் ஏற்படும் போது 'என் வார்த்தையை நம்பி இந்த ஸ்தோத்ரங்களை அநுதினம் படி. எல்லாக் கோணங்களிலும் பகவான் உன்னைக் காப்பாற்றுவார். material as well as spiritual. இந்த குறைகளெல்லாம் போய்விடும். கவலைப் படாதே' என்று ஸ்வாமிகள் சொல்லி ரொம்ப hope குடுப்பார்.

'புன: புனஸ்ச உத்தம ஸாந்த்வ வாதி' என்ற ஸுந்தர காண்ட ஸ்லோகத்திற்கு 'பகவானின் மஹிமையையும் கருணையையும் மீண்டும் மீண்டும் சொல்லி, என்னை ஏற்றுக் கொண்டது போல உன்னையும் ஆட்கொள்வார் என்று hope குடுப்பது குருவின் கார்யம். பகவத் பஜனம் போல அதுவும் பகவானுக்கு இஷ்டமான காரியம். அதைச் செய்தால் அவன் அருள் கிடைக்கும். அதனால் தான் என் பாராயணத்துக்கு நேரம் ஆனாலும் பரவாயில்லை என்று வரவா கிட்ட பேசிண்டு இருக்கேன்' என்று சொல்வார். திருமூலர் திருமந்திரத்தில்

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே

இதில் கடைசி வரியின் அர்த்தமாய் ஸ்வாமிகள் விளங்கினார்.

அவரவர்களுடைய ஜாதகம், குடும்ப சூழ்நிலை, பிடித்தம், திறமை அதைக் கொண்டு பக்தி பண்ணச் சொல்லிக் கொடுத்து உற்சாகப் படுத்துவார். விஸ்வநாதய்யரிடம் நாராயணீயத்தில் grammatical peculiarities எடுத்து சொல்வார். ஜானகிராமய்யர் நாகராஜய்யர் போன்று எத்தனையோ பேரை ராமாயண பாகவதம் படிக்க வைத்தார். சமையல் செய்ய பிடித்தம் இருந்தால், கேது நாடியில் தினம் பிள்ளையாருக்கு கொழுக்கட்டை நிவேதனம் பண்ண சொல்வார். Dr.திருமால்வளவன் 50 நமஸ்காரம் பண்ணினால் கூட தானும் ஸ்லோகங்கள் சொல்வார். வைராக்யமாய் இருக்கும் ஸுரேஷை 'மனுஷாகிட்ட போய் வேலை பார்க்க வேண்டாம். பகவந் நாமத்தை நம்பு. அதுவே காப்பாற்றும்' என்று சொல்லி இருக்கார்.

நாமும் மனத்தளர்ச்சி ஏற்படும் போது, ஒருத்தருக்கு ஒருத்தர், முடிஞ்ச வரைக்கும், அவர் பேரால hope குடுத்துக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்று தோன்றுகிறது. எனக்கு உள்ளே எவ்வளவோ அழுக்கு இருந்தாலும், அந்த தூய்மையான பெரியவர் என்னையும் பக்கத்தில் உக்காத்தி வெச்சுண்டார். அவ்வளவு பெரிய வஸ்துவை எல்லாத்துலயும் சின்னவனான நான், ரொம்ப தெரிஞ்சவன் மாதிரி பேசறேன். நீங்களும் 'குழந்தை தானே' என்று encourage பண்றேள். எதாவது தப்பு இருந்தா, எடுத்துச் சொல்லுங்கள். திருத்திக் கொள்ள முயற்சி செய்வேன்.

## एकमक्षरं हृदि निरन्तरं भासते स्वयं लिख्यते कथम्

ஆனா ஸ்வாமிகள் ஒரு incident சொல்லுவார். மஹாபெரியவா கிட்ட பாகவத பாரயணம் பண்ணும் போது, பெரியவா 'பாகவத ஸப்தாஹத்துக்கு 5 பேர் பக்கத்தில் இருக்க வேண்டும்' என்று சொன்னாராம். 'எதுக்கு 5 பேர் தெரியுமா?' என்று கேட்டுவிட்டு, 'நாலு பேர் பாகவதம் கேட்கறத்துக்கு. ஒருத்தர், யாராவது நாஸ்திகன் வந்தா கழுத்தப் பிடிச்சு வெளியில தள்ளறத்துக்கு' என்று சொன்னாளாம். 'நான் அதை நடைமுறைப் படுத்தாததுனால எனக்கு பல ச்ரமங்கள் வந்தது' என்பார் ஸ்வாமிகள். அது போல நாமும் ஸ்வாமிகளை தெய்வமாய் நம்பாதவர்களிடம் அவர் மஹிமையை சொல்லக்கூடாது. சொன்னால் ஏதாவது பேச்சு வந்து நம் பக்தியே ஆட்டம் கண்டுவிடும். அது எவ்வளவு பெரிய ஆபத்து!

## ஸுந்தர காண்டம்

## 16. யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே

ஹனுமார் ‘ராம பாணம் போலச் சென்று ஸீதாதேவியை கண்டு வருவேன்’ என்று நண்பர்களுக்கு வாக்களித்து விட்டு ஆகாசத்தில் பறந்து செல்கிறார். இடையில் வந்த மைனாக மலையை தீர்மானத்தாலும், ஸுரஸா என்ற நாகமாதாவை புத்தியாலும், ஸிம்ஹிகை என்ற ராக்ஷஸியை பலத்தாலும் வென்று லங்கையை அடைகிறார். லங்கையின் காவலாக இருந்த ஒரு அரக்கியை விளையாட்டாக ஜயித்து, பின் உள்ளே சென்று அந்த நகரத்தின் அழகையும், பாதுகாப்பையும், ராக்ஷஸர்களின் போக வாழ்வையும், புஷ்பக விமானத்தையும் கண்டு வியக்கிறார்.

ராவணன் அந்தப்புரத்தில் ஸீதையை தேடுகிறார். ‘பிறன் மனைவியை தூங்கும் போது பார்த்தோமே’ என்று கவலைப் படுகிறார். ‘என் மனம் சலிக்கவில்லை. மேலும் ராம கார்யத்துக்காக, அவர் சொல்லி, இங்கு வந்தோம். அதனால் தவறில்லை’ என்றெண்ணி மேலும் தேடுகிறார். மந்தோதரியை ஸீதையோ என்றெண்ணி நிற்கிறார். பின்னர் தெளிந்து, மற்ற இடங்களில் தேடுகிறார்.

எங்கும் தேடியும் ஸீதையை காணாமல் வருந்தி, பலவாறு புலம்பி உயிரையும் விடத் துணிகிறார். பின்பு அது சரியில்லை என்று முடிவு செய்து, ‘எது வரையில் ஸீதாதேவியை பார்க்கிறேனோ அது வரையில் மீண்டும் மீண்டும் தேடுவேன்.’ என்று கிளம்பி அசோக வனத்தில் தேடுகிறார். கார்ய ஸித்திக்காக ராமலக்ஷ்மணர்களையும் ஸீதையையும், மற்ற தெய்வங்களையும் வேண்டுகிறார். ஸீதாதேவியை தரிசிக்கிறார். உடனே மரங்களுக்குள் தன்னை நன்றாக மறைத்துக் கொள்கிறார்.

---

காமினி காஞ்சனத்தில் பற்றுகள் போய், ஆசா பாசங்கள் விலகி இருப்பது ஒரு உயர்ந்த நிலை. ஆனால் ‘நான்’ என்ற ego அஹங்காரம் முழுமையாக மறைந்து பகவானை ஸூத்ரதாரியாகக் கண்டு கொள்வது, (ஹனுமார் இருந்தது போல) முடிந்த முடிவான நிலை. கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் அந்த நிலையில் விளங்கினார். அதனால் தான் அவருக்கு எந்த சறுக்கலும் இல்லாமல், கடைசி மூச்சு வரையில் பக்தி பண்ணிக் கொண்டு இருக்க முடிந்தது.

அப்படி தெய்வத்தின் கையில் தன்னை ஒரு கருவியாக உணர்ந்ததால் தான், மஹா பெரியவாள் என்ற ஞானிக்கு பாகவதம் சொன்னது, சிவன் ஸார் உத்தரவின் பேரில், வீட்டில் இருந்தபடியே யதீந்தராய் விளங்கியது, ராமாயண பாகவதத்தை படிக்கும் போதே அதில் லயித்து புற உலகை மறந்து தெய்வத்தோடு ஒன்றிவிடுவது, ரொம்ப கீழ்ப் படியில் இருக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் hope குடுத்து வாழவைத்தது, போன்ற நினைத்து பார்க்கவே முடியாத அரிய பெரிய காரியங்களை ஸ்வாமிகளால் செய்ய முடிந்தது. தன்னைச் சுற்றி ஒரு ஸங்கம், trust, கூட்டம், கௌரவம் இதெல்லலாம் வராமல் அவரால் தடுத்துக் கொள்ள முடிந்தது.

ஹனுமார் desperate ஆகி புலம்புவது போல ஸ்வாமிகளும் புலம்புவார். “எனக்கு க்ருஷ்ண தர்சனம் கிடைக்குமா?” என்று அவர் கண் ஜலத்தோடு கேக்கற sincerity, பணத்துக்காக மட்டுமே அழும் கல் நெஞ்சைக் கூட உருக்கும். அவருக்கு வந்த pressure sugar எல்லாம் கூட உலக விஷயங்களில் anxiety னால் நமக்கு வர மாதிரி இல்லை. மாறி மாறி பகவானுக்கு ஏங்குவதாலும், இனிமையை அநுபவிப்பதாலும் என்று எனக்கு தோன்றும். heart attack கூட ஸ்வாமிக்காக அழுதழுது நெஞ்சு வெடித்ததால் தான் என்று நினைப்பேன். அந்த period ல அவ்வளவு desperate ஆ இருந்தார்.

‘எது வரையில் ஸீதாதேவியை பார்க்கிறேனோ அது வரையில் மீண்டும் மீண்டும் தேடுவேன்.’ என்று ஹனுமார் சொன்னது போல ‘ஸ்வாமி தர்சனம் கிடைக்கும் வரையில் மீண்டும் மீண்டும் இந்த ராமாயணத்தை படிப்பேன்’ என்று சொல்வார். ‘ஹனுமார் ஸீதைதேவியை தரிசித்த பின் மரங்களுக்குள் தன்னை நன்றாக மறைத்துக்கொண்டார்.’ என்று வருவது போல், ஸ்வாமிகள் பகவத் தர்சனம் கிடைத்த பின் ஸந்நியாஸிக் கோலத்தில் அதிகமாக மௌனம் காத்து தன் ஞானத்தை மறைத்துக் கொண்டார்.

ஆனால் நமக்கு ஒரு வழிகாட்டியாக இருக்க விரும்பி, எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல், முக்யமாக உடம்பு வேதனையை பொறுத்துக் கொண்டு, கடைசி நாள் வரை அந்த ராமாயண பாகவதத்தை படித்து, சொல்லிக் குடுத்து கொண்டிருந்தார். அப்போது வெளிப்பட்ட கருணை வார்த்தைகளும், இனிமையான ஸ்தோத்ர பாராயணங்களும் தான், இன்று நினைத்தாலும் ஆறுதல் தருகிறது.

## 17. ஒருயிர் ஈருடலாய் விளங்கும் ஸதிபதிகள் வணக்கத்துக்கு உரிய தெய்வங்கள்

ராம பக்தியால் உள்ளே கனன்றும், முகத்தால் மிக வாடி இருக்கும் ஸீதையை கண்ட ஹனுமார் 'கற்பின் கனலாய் விளங்கும் இந்த தெய்வப் பெண்ணைப் பிரிந்து ராமர் உயிரோடு இருப்பதே ஆச்சர்யமாய் இருக்கிறது. ஒருவர் உயிர் மற்றொருவரிடம் இருப்பதால் தான் அது சாத்தியம்' என்று நினைக்கிறார்.

ராவணன் ஸ்தீரீகளுடன் அங்கு வந்து ஸீதையிடம் பலது பேசுகிறான். அவனைத் துரும்பு போல் மதிக்கும் ஸீதை 'உயிர் பிழைக்க ஆசை இருந்தால் ராமரிடம் என்னை ஒப்படைத்து மன்னிப்பு கேட்டுக் கொள்' என்று தைரியமாய்ச் சொல்கிறாள்.

அவன் போன பின் ராக்ஷஸிகள் ஸீதையை மிரட்டுகிறார்கள். ராமரை குறைத்து பேசும் போது மட்டும் ஸீதை 'என்னை நீங்கள் கொன்று தின்றாலும் சரி. உங்கள் பேச்சைக் கேட்க மாட்டேன். என் கணவன் ராமனே என் தெய்வம்' என்கிறாள். த்ரிஜடை என்ற ராக்ஷஸி ஸீதைக்கு நல்ல வேளை வரப்போவதைக் குறிக்கும் ஸ்வப்னம் கண்டதைச் சொல்லி, மற்ற ராக்ஷஸிகளை விலக்குகிறாள். ராமர் இத்தனை நாட்களாக வரவில்லையே, இறந்திருப்பாரோ என்ற எண்ணம் ஏற்பட ஸீதை தான் தன் உயிரை விடக் கிளம்புகிறாள்.

மரத்திலிருந்து எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த ஹனுமார், ஸீதாதேவி பயப்படாத படி எப்படி பேசுவது என்று யோசித்து, ராம கதையை அவள் கேட்கும்படி இனிமையாக சொல்கிறார். வியந்து பார்த்த ஸீதையை நெருங்கி வந்து 'நீங்கள் யார்? ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்டு, அவள் பதில் சொன்ன பின், தான் ராம தூதனாய் வந்திருப்பதைத் தெரிவிக்கிறார். அவளுடைய பயம் ஸந்தேகம் எல்லாம் போகும் வரை மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கிறார்.

---

வேற எதுக்கும் இல்லை என்றாலும், ஸ்வாமிகள் நிலைமையில், அவர் ஏகபத்னி விரதமாய் இருந்ததற்கும், அவர் மனைவி அவர் கொள்கைகளை ஏற்று அவர்கள் கூடி வாழ்ந்த வாழ்க்கைக்காகவே அவர்களுக்கு கோவில் கட்டி கும்பிடலாம். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' என்ற குறளை இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் ஏன் வைத்தார் என்பது

இவர்களைப் பார்த்தால் புரியும். மேம்போக்கா பார்த்தா இல்லை. Deep inside, the attitude they had towards each other is where the difference was. ஸீதாதேவி ராமனிடத்தில் வைத்தது போன்ற பக்தியை ஸ்வாமிகள் மஹாபெரியவாளிடம் வைத்திருந்தார். தனக்கென்று ஒரு ஸங்கல்பமோ, ஸந்தேகமோ இல்லாமல், மஹாபெரியவா சொல்படி ராமாயண பாகவதம் படிச்சார். அந்த பஜனத்துலேயே ஆனந்தம் அடைந்து, 'यद्यत् भव्यं भवतु भगवन् पूर्व कर्मानुरूपम्' என்று, எந்தக் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் கடைசி வரையில் படிச்சார்.

ஸ்வாமிகளின் பூர்வாச்ரம மனைவி அவரிடம் அந்த மாதிரி இருந்தா. அவாளுக்கு hysteria என்று சொல்லி தான் கேட்டிருக்கேன். நான் பார்த்த வரையில் ஒரு நாள் கூட அவா அவரிடம் அதிர்ந்து பேசினது கூட கிடையாது. ஸ்வாமிகளுக்கு எதாவது உடம்பு சிரமம் என்றால் தவிச்சுப் போயிடுவா. அவருடைய குணங்களை வாயாரப் போற்றுவா.

அந்தம்மா பணத்தாசை இல்லாமல் இருந்தது கூட பெரிசில்லை. தன் பிள்ளை, பெண்கள் மேல இருக்கிற பாசத்தினால், அவா கஷ்டப்படும் போது, இவரை படிக்க விடாமல் எழுப்பி இருக்கலாமே. on the contrary இவர் பண்ற காரியத்தை எப்பவுமே மதிச்சா. என்ன தாபம் ஏற்பட்டாலும் மாடிக்கு வந்து இவரை இந்த இரண்டு ஸ்லோகங்கள் சொல்லச் சொல்லி கேட்டுட்டு போவா. It is a scene worth remembering forever.

केशपाशधृत पिञ्चिकावितति संचलन्मकरकुण्डलं
हारजाल वनमालिका ललितमङ्गराग घनसौरभम् ।
पीतचेलधृत काञ्चिकाञ्चित–मुदञ्चदंशुमणि नूपुरं
रासकेलि परिभूषितं तव हि रूपमीश कलयामहे ॥

वल्लिदेवयानिका समुल्लसन्तमीश्वरं
मल्लिकादि दिव्यपुष्प मालिका विराजितम् ।
झल्लरी निनाद शंखवादन प्रियं सदा
पल्लवारुणं कुमारशैल वासिनं भजे ॥

ஒரு முறை ஸ்வாமிகளிடம் ‘த்யாகராஜ ஸ்வாமிகள் சரித்ரம்’ படித்துக்கொண்டு இருந்தேன். அதில் த்யாக்ராஜ ஸ்வாமிகளின் தர்மபத்னி ஒரு நாள் அவரிடம் வந்து நமஸ்கரித்து ‘உங்களுக்கு கைங்கர்யம் பண்ணும் பாக்யம் கிடைத்தது. தர்மஸம்வர்த்தனி அம்மா என்னை கூட்டிண்டு போக வந்திருக்கா. உத்தரவு தரவேண்டும்’ என்ற இடம் படிக்கும் போது ஸ்வாமிகள் ‘கீழே இருக்கறவாளால (ஸ்வாமிகள் மனைவி) எனக்கு ச்ரமம் என்பது தான் உலகத்துக்கு தெரியும். அவாளோட அன்பும் விச்வாசமும் எனக்கு தான் தெரியும். எந்த புற்றில் எந்த பாம்போ? யார் புண்யத்தை யார் கண்டா?’ என்று சொன்னார். இதில் இவருடைய ஏகபத்னி வ்ரதமும் தெரிகிறது.

ஸ்வாமிகள் ஸந்நியாஸம் வாங்கிக் கொண்ட பின், அவருடைய பூர்வ ஆச்ரமத்தைப் பற்றி பேசவேண்டுமா என்று தோன்றலாம். நான் பார்த்துப் புரிந்து கொண்ட வரை, ஸ்வாமிகள் பிறந்த நாளிலிருந்து கடைசி நாள் வரை, ஒவ்வொரு ஆச்ரமத்திலும், ஒவ்வொரு நாளின் எல்லா வேளைகளிலும் செய்தது எல்லாமே சாஸ்த்ர சம்மதமானது, ராமாயணத்திற்கு ஒரு விளக்கம் போல அமைந்தது அவர் வாழ்க்கை. அதனால் அது புண்யச்லோகம். (அதைப் பேசினால் புண்யம் கிடைக்கும்.) அவருக்கு ச்ரமங்கள் இருந்தது என்பது உண்டு. ஆனால் அந்த ச்ரமத்திலும், அவர் ஸத்யத்தையும் தர்மத்தையும் கைவிடாமல், இடையறாத பக்தி பண்ணிண்டு இருந்தார்.

மற்ற பக்தர்கள் கதையில் வருவது போல ‘பகவானால் ஆட்கொள்ளப் பட்டபின் தூய்மை அடைந்தார்கள்’ என்பது போல நம் ஸ்வாமிகளை நினைக்கக் கூடாது. அநுபூதியுடனே பிறந்த அவதார மஹானான அவர், தபஸினால் மேலும் தூய்மையில் உயர்ந்து, துறவி, ஞானி போன்ற நிலைகளை அடைந்தார். அதைத் தான் சிவன் ஸார் ‘அவர் தனியாக ஸந்யாஸம் வாங்கிக் கொள்ள வேண்டுமா என்ன?’ என்று முதலில் கேட்டுவிட்டு பின்னர் ஸந்யாஸத்துக்கு அநுமதி வழங்கி, ‘அமோகமாக இருப்பார்’ என்று ஆசீர்வதித்தும், ஸந்யாஸம் வாங்கிக் கொண்டபின் ‘அவா யதீந்த்ராள்’ என்று கொண்டாடியதில் இருந்தும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஸ்வாமிகள், தம்பதிக்களுக்குள் ஒற்றுமை வளர, சாயங்கால வேளையில் நெய் விளக்கு ஏத்தி ‘शिव शंकर सर्वात्मन् श्रीमातर्जगदम्बिके’ என்று ஒரு ஸ்லோகம் சொல்லச் சொல்லுவார். அப்போ இந்த ஸதிபதிகளையே பார்வதீ-பரமேச்வரர்களாக நினைத்து வணங்குவோம்.

## 18. பொய்யை நிந்திக்க வேண்டும், உண்மையை சாதிக்க வேண்டும்

ஹனுமார் ஸீதாதேவியிடம் ராமலக்ஷமணர்களின் அங்க அடையாளங் களையும், ராமருடைய குணங்களையும், ஸுக்ரீவனோடு நட்பையும், வாலி வதத்தையும், வானரர்கள் நான்கு திக்குகளில் ஸீதையைத் தேடுவதையும், தான் கடலைக் கடந்து வந்து அவளைக் கண்டதையும் கூறி, ராம நாமம் பொறித்த அவருடைய மோதிரத்தை ஸீதாதேவி யிடம் அளிக்கிறார். ஸீதை சோகம் தீர்ந்து மகிழ்ச்சி அடைகிறாள்.

'ராமர் என்னை மறக்காமல் இருக்கிறாரா? ஏன் இன்னும் என்னை மீட்க வரவில்லை?' என்று வருந்தும் ஸீதையிடம் ஹனுமார் 'இனி அழ வேண்டாம். விரைவில் ராமர் வந்து தங்களை மீட்டுச் செல்வார்' என்று மீண்டும் மீண்டும் கூறி சமாதானம் செய்கிறார்.

ஹனுமார் விச்வரூபம் காட்டி 'இப்போதே வேண்டுமானால் என் முதுகில் ஏற்றிக் கொண்டு போய் உங்களை ராமரிடம் சேர்க்கிறேன்' என்று சொன்ன போது ஸீதை, 'ராமரே வந்து இந்த ராவணாதி ராக்ஷஸப் பதர்களை அழித்து, என்னை மீட்டுக் கொண்டு போவது தான் அவர் புகழுக்கு அழகு. ஒரு மாதம் நான் உயிர் தரிப்பேன். ஹனுமான், நீ போய் சீக்கிரம் அவர்களை அழைத்து வா' என்கிறாள். தன் சூடாமணியை அடையாளமாக ஹனுமாரிடம் தருகிறாள்.

ஹனுமார் அசோகவனத்தை அழித்து, ராவணன் அனுப்பிய 80000 ராக்ஷஸர்களை தவிடு பொடியாக்குகிறார். 'நான் ராமதாஸனான ஹனுமார். ஆயிரம் ராவணர்கள் வந்தாலும் என்னை எதிர்க்க முடியாது' என்று கர்ஜிக்கிறார். 5 ஸேனாபதிகளையும், 7 மந்திரி குமாரர்களையும், ராவணன் புதல்வனான அக்ஷகுமாரனையும் வதம் செய்து, இந்தரஜித்தைத் தத்தளிக்கச் செய்து, பின் அவன் ஏவிய ப்ரம்மாஸ்திரத்திற்கு தாமாக கட்டுப் படுகிறார்.

ராவணனைப் பார்த்து சிறிதும் கலங்காமல் அவன் செய்த தவற்றை சுட்டிக்காட்டி, ராமரின் மஹிமையையும், வானரர்களின் வீரத்தையும் எடுத்துச் சொல்லி, ஸீதையை ராமரிடம் ஒப்படைக்கவில்லையானால் ஸர்வ நாசம் ஏற்படும் என்று அறிவுறுத்துகிறார். இப்படி ஹனுமார் உண்மைப் பொருளான ராமரின் பெருமையை எங்கும் நிலை நாட்டுகிறார். பொய்யின் வடிவமான ராவணனுடைய ராக்ஷஸர்களை ஹதாஹதம் செய்து, அவனையும் நிந்திக்கிறார்.

ஸ்வாமிகள் போலிகளை கண்டிப்பது, நாத்திகர்களை சாடுவது என்று open ஆக பண்ணவில்லை. ஆனால், அவர் வாழ்வின் மூலமே எதை ஒத்துக் கொண்டார், எதை தவிர்த்தார், எதைக் கண்டித்தார் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

அவர் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வதற்கு முன் அருகில் இருந்த ஒரு ஆச்ரமத்திலும், மடத்திலும், ஒரு ஸந்நியாஸி அங்கு வந்து இருப்பதானால் அவர்களுடைய rules regulations என்ன என்று கேட்டுக் கொண்டு வரச் சொன்னார். ஒரு இடத்தில் 'என்ன capital வெச்சுருக்கார்?' என்று கேட்டா. இன்னொரு இடத்தில் 'எவ்வளவு contribution குடுப்பார்?' என்று கேட்டா. என்னிடம் 'மனவடக்கத்தைச் செல்வமாகக் கொண்ட யோகிகளுக்குத் தான் அம்பாள் அருள் கிடைக்கும்' என்ற ஸ்லோகத்தைக் காட்டினார்.

பாகவதம் படிக்கும் ஒரு பெரியவர் 'enough and to spare என்ற அளவில் தேவைக்கு மேலயே பணம் வரது' என்றார். ஸ்வாமிகள் 'பைபிளில் ஒரு ராஜா கூட please give me my daily bread என்று பகவான் கிட்ட வேண்டிக்கணம் என்று வருகிறது. பாகவதம் படிக்கிறவா பணத்தை நம்பலாமா?' என்று சொன்னார்.

ஸ்வாமிகள் ப்ரவசனம் செய்யும் போது பாகவதத்தின் core message ஆன பகவானை ஏற்றுக் கொள்றது, உலகத்தை (materialism) வெறுத்து தள்ளறது, இதை stress பண்ணி சொல்வார். கலி புருஷனிடம் பரீக்ஷித்து மஹாராஜா 'மது, மாது, சூது, மாமிசம் இவற்றின் மூலம் வளர்ந்து கொள்' என்று சொன்ன போது, அவன் இன்னும் கொஞ்சம் இடம் கேட்கிறான். 'இவற்றில் இருக்கும் தோஷங்கள் க்ரோதம், காமம், மதம், ஹிம்ஸை அதெல்லாம் சேர்ந்து இருக்கும் பணத்தின் மூலம் வளர்ந்து கொள்' என்று சொல்கிறார். 'குடிகாரன், சூதாடி இவர்களையாவது உலகில் வெறுப்பார்கள். ஆனால் பணம் சேர்ப்பவர்களை போற்றுவார்கள். உண்மையாக பக்தன் அதைச் செய்யக்கூடாது' என்பார்.

'இதனால் தான் உங்களுக்கு பணம் வரமாட்டேங்கறது. மத்த ப்ரவசனம் பண்றவாளுக்கு பணம் கொட்றது' என்று அவரிடம் சொன்ன போது, 'எனக்குக் கொட்ட வேண்டாம். கொட்டினா அதைப் பொறுக்கவும் எண்ணவும் தான் time சரியா இருக்கும்.

எனக்கு பகவானை பேசிண்டு இருக்கறதே போதும்' என்று சொன்னார். It is such poignant message. நாம பணம், tax, investment, bills என்று அதுலியே எவ்வளவு time waste பண்றோம்!

ஒரு முறை, leave போட்டுட்டு அவரோடே படிச்சுண்டு இருக்கப் போறேன்னு இருந்தேன். எனக்கு உலக ஆசைகள் பாக்கி இருக்குனு பார்த்ததால அவர் 'இப்படி இருக்க முடியாது. திரும்ப வேலைக்கு போ. சொல்லிக் குடுத்த ஸ்தோத்ரங்கள் படிச்சுண்டு இரு'ன்னு அனுப்பி விட்டார். நான் US போன போது அவர் கிட்ட சொல்லிண்டு போகவில்லை. 'என்னை தர்ம சங்கடத்தில் வைக்காமல் இருந்தான்' என்று சொல்லி இருக்கார். 2-3 வருஷத்துக்கு அப்பறம் லீவில் வந்த போது 'நெய்யை விட்டு நெருப்பை அணைக்க முடியுமா? அநுபவிச்சு தீர்க்கறது, சேர்த்து வெச்சுண்டு வரது என்பதெல்லாம் கிடையாது. அங்க இருந்தா நம்ம culture எல்லாம் போயிடும். திரும்பி வந்துவிடு. காமம், க்ரோதம், லோபம் அதையெல்லாம் feed பண்ணிண்டே இருந்தா, நரகத்தில் விழுந்து விடுவாய்.' என்று சொன்னார். சொன்ன பேச்சைக் கேட்டு திரும்பி வந்ததுக்கு, ரொம்ப அன்போடு வால்மீகி ராமாயணம் சொல்லிக் குடுத்தார்.

அதே நேரத்தில் மஹாபெரியவா, பருத்தியூர் கிருஷ்ண சாஸ்த்ரிகள், போலகம் ராமா சாஸ்த்ரிகள், தேதியூர் ஸுப்ரமண்ய சாஸ்த்ரிகள், இவாளைப் பேசும் போதும், பகவானுடைய ஸ்தோத்ரங்கள் படிக்கும் போதும் எவ்வளவு thrill ஆவார் என்று நேரில் பார்த்திருக்கிறோமே! நாமும் இப்படி ஸத்தியப் பொருளான ஒரு ஸத்குரு நமக்கு கிடைத்தார் என்பதை எண்ணி, ப்ரியத்தோடு அவருடைய வாழ்வையும், வாக்குகளையும், குணங்களையும், கொள்கைகளையும் போற்றிக் கொண்டே இருந்தால் தான், ஞாபகமாவது இருக்கும். அடுத்த தலைமுறையினருக்கு தெரியும். அவர்களும் அவருடைய ஆராதனையை செய்து க்ஷேமம் அடைவார்கள்.

மனஸ் தானாக பணத்தையும், பெண்களையும், குழந்தைகளையும், வீடு, gadgets போன்ற போகப் பொருள்களையும் புகழ்ந்து கொண்டே இருக்கிறது. அதிலிருந்து கஷ்டம், சுகம் ரெண்டும் வரது. பொய்யான அவை கூட வரப்போவதில்லை. அவற்றை நிந்திக்க வாய் வரலைன்னாலும், ஸ்வாமிகள் என்ற ஸத்தியப் பொருளை சாதிச்சுண்டே இருந்தால், அதுக்கு ஒரு effect இருக்கும்.

## 19. ஜீவாத்மாவை பரமாத்மாவிடம் சேர்க்க குரு பண்ணும் உதவி

நல்ல புத்தி சொன்ன ஹனுமாரை, ராவணன், கோபத்துடன் கொல்லுமாறு உத்தரவிடுகிறான். விபீஷணன் தடுத்து, ‘தூதனைக் கொல்லக் கூடாது’ என்று சொன்னவுடன், ராவணன் ஹனுமாரின் வாலில் தீ வைக்கச் சொல்கிறான். ராக்ஷஸர்கள் கொக்கரித்துக் கொண்டே அதைச் செய்கிறார்கள். தெருவில் அவரைக் கொண்டு செல்லும் போது ராக்ஷஸிகள் கைக்கொட்டிச் சிரிக்கிறார்கள்.

ஸீதையிடம் ராக்ஷஸிகள் இதை கேலியாகச் சொன்னவுடன், ஸீதை அக்னி பகவானிடம் ஹனுமார் வாலில் சுடாதிருக்கும் படி வேண்டுகிறாள். உடனே ஹனுமாரே வியக்கும் வண்ணம், அவர் வாலில் தீ குளிர்ச்சியாகி விடுகிறது.

ராமரின் மஹிமை அறியாமல் கொட்டமிடும் ராக்ஷஸர்களை பயமுறுத்துவோம், என்றெண்ணி ருத்ராம்சமான ஹனுமார், தன் வாலில் வைத்த தீயினால், விபீஷணன் கிருஹத்தைத் தவிர, லங்கையின் எல்லா மாளிகைகளுக்கும் தீ வைக்கிறார். ஸீதைக்கு தீயினால் ஆபத்து உண்டாகி இருக்குமோ, என்று தன் கோபத்தை நொந்து கொள்ளும் ஹனுமார், அவள் பத்திரமாக இருக்கிறாள் என்று உறுதிப் படுத்திக் கொண்டு, அவளிடம் உத்தரவு பெற்று கிளம்புகிறார்.

கடலைக் கடந்து திரும்பி வந்து நண்பர்களிடம் ஹனுமார் ‘दृष्टा सीता - கண்டேன் ஸீதையை’ என்று முழங்குகிறார். ஸீதாதேவியின் ராமபக்தியை போற்றி, அவளை ராமரோடு சேர்த்து வைக்க எல்லா வானரர்களும் யுத்தம் செய்ய வேண்டும் என்று உற்சாகப் படுத்துகிறார். வானரர்கள் வழியில் மதுவனத்தில் தேன் குடித்து வெற்றியை கொண்டாடிய பின், ராமரிடம் போய்ச் சேருகிறார்கள்.

ஹனுமார் ராமரிடம் ஸீதையின் சோக நிலைமையையும், மாறாத பக்தியையும் எடுத்துக் கூறி, அவள் தந்த சூடாமணியை ராமரிடம் தருகிறார். ஸீதையை நினைத்து புலம்பும் ராமரிடம், மேலும் மேலும் அவளைப் பற்றிப் பேசி, அவள் ராமரிடம் வைத்திருக்கும் அன்பையும் நம்பிக்கையையும் சொல்லி ராமரின் வீரத்தை வளர்க்கிறார்.

ராமர் ஹனுமாரை ஆலிங்கனம் செய்து ‘இன்று நீ என் குல கௌரவத்தை நீ காத்தாய்’ என்று பூஜிக்கிறார். எப்படி கடலைத்

தாண்டுவது, எப்படி லங்கையை தகர்ப்பது என்று கவலைப்படும் ராமரை 'நாங்கள் இருக்கிறோம். எல்லாம் வெற்றிகரமாக முடியும். உடனே கிளம்ப உத்தரவு செய்யுங்கள்' என்று தைரியம் சொல்ல, ராமர் உத்தரவின் பேரில் வானரப் படை கிளம்புகிறது.

ஸீதை என்ற ஜீவாத்மாவை ராமர் என்ற பரமாத்மாவிடம் சேர்த்து வைக்க, ஹனுமார் என்ற குரு, ஒரு காரணமின்றி, தன் இயல்பான கருணையினல் உதவி செய்கிறார். ராவணாதி ராக்ஷஸர்கள் என்ற பாபிகளினால் ஏற்படும் கஷ்டத்தையெல்லாம் பொறுத்துக் கொண்டு, லங்கையென்ற பூர்வ வினைகளை எரித்து, பகவானிடம் ஜீவன் படும் கஷ்டத்தையும், அவரையே நம்பி இருப்பதையும் எடுத்துச் சொல்லி, பகவானை அழைத்து வருகிறார். வானரர்கள் என்ற மற்ற தெய்வங்களும் அந்த ஜீவனுக்கு அநுகூலமா இருக்கும்படி செய்கிறார்.

---

பகவானால் அனுப்பப்பட்ட நம் ஸ்வாமிகளைப் போன்ற மஹான்களால் தான் குருவாக இருந்து, அது போன்ற கருணையைச் செய்ய முடியும். முன்னே ஒரு இடத்தில், சிஷ்யர்களுக்கு பாபம் வராமல் இருப்பதற்காக தன்னை ஒரு friend என்று தான் ஸ்வாமிகள் சொல்லிக் கொள்வார் என்று சொன்னேன்.

ஆனால், ஓரளவு கர்வத்தை விட்டு, அவர் மேன்மையை உணர்ந்து, அவரை குருவாக ஆச்ரயித்தவர்களுக்கு எவ்வளவு கருணை பண்ணியிருக்கார்! திரும்பத் திரும்ப ஸ்வாமியை நினைக்க சொல்லிக் குடுத்தும், தன் புண்யத்தால் அவர்கள் பக்தி பண்ண ஹேதுவான enviroment ஏற்படுத்திக் குடுத்தும், அந்த சிஷ்யர்களை, சுற்றியுள்ள materialists ஏளன வார்த்தை பேசும் போது ஆறுதல் சொல்லியும், பரிவோடு பாபத்திலிருந்து விலக்கி, ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றியும், வினைகளைப் எரித்தும், கடைசி நிமிஷம் ஸ்வாமி ஞாபகத்தோடு உயிர் பிரிய அநுக்ரஹித்தும் - இது நமக்கு தெரிந்தது.

குழந்தைகளுக்காக அம்மா அப்பா கவலைப்படுவது குழந்தைகளுக்கு புரியாதது போல, அவர் ஸ்வாமி கிட்ட நமக்காக மன்றாடினது நமக்கு தெரியாதது. 'நீ இந்த ஸ்லோகத்தை சொல்லிண்டு hospital போ. நானும் நாராயணீயம் படிக்கறேன். ஸ்வாமி காப்பாத்துவார்' என்று சொல்லி அனுப்பிட்டு நம்மை விட உருக்கமாக பகவானை வேண்டிக் கொள்ளும் கருணையை நம்மால் புரிஞ்சுக்க முடியுமா?

ஸ்வாமிகள் தெய்வம் போல கருணையோடு இருந்தார் - அது ஒன்றே போதும் அவரை ஆச்ரயிக்க. ஆனால் அவர் குரு என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்று ராமாயணத்தில் சொல்லி இருக்கோ அந்த எல்லா லக்ஷணங்களும் பொருந்தி இருந்தார். ராமாயணம் முதல் ஸர்கத்தில் நாரத மஹரிஷியிடம் வால்மீகி முனிவர் ராம சரித்ரத்தை குருமுகமாக கேட்டுக் கொண்டு, பிறகு ப்ரம்மாவின் ஆக்ஞைப்படி அதை விஸ்தாரமாக, காவ்யமாக படைக்கிறார். முதல் ச்லோகத்தில் நாரதரைப் பற்றி स्वाध्याय निरतम्, तपो निरतम्, वाग्विदां वरम्, मुनिपुङ्गवम् என்று நான்கு அடைமொழிகள் குடுக்கப் பட்டுள்ளது. இந்த நான்கு அடைமொழிகளும் நம் ஸ்வாமிகளுக்கு முழுமையா பொருந்துகிறதே!

ஸ்வாமிகள் யஜுர் வேத அத்யயனம், ஸ்கூல் சேர்த்ததால் தடைப்பட்டாலும், பின்னர் முழுவதும் அத்யயனம் செய்து பூர்த்தி செய்தார். மேலும், வேத துல்யமான வால்மீகி ராமாயணத்தை மிகுந்த ப்ரீதியோடு அநவரதம் அத்யயனம் செய்து வந்தார் - स्वाध्याय निरतम्

அந்த ராமரையே சிந்தித்து, அந்த ராமாயண தர்மங்களையே தன் வாழ்க்கையில் ஆசார அனுஷ்டானமாக நடத்திக் காண்பித்த ஸ்வாமிகளின் வாழ்வே ஒரு தபஸ் தானே - तपो निरतम्

அந்த ராமாயண பாகவத தர்மங்களை, சத்தியத்தால் தூய்மையடைந்த தன் வாக்கினால், ஞானிகளும் போற்றும்படி உபந்யஸித்த ஸ்வாமிகள் நா பெற்ற பயனை முழுமையாக அடைந்தாரே, அவரே - वाग्विदां वरम्

முனி என்றால் மௌனமாய் இருப்பவர். பகவத் விஷயம் பேசுவது மௌன பங்கம் இல்லை என்று சாஸ்த்ரம். ஸ்வாமிகள் பேச வேண்டிய அதை பேசினார் என்பதோடு, உலக விஷயங்களை அந்த நாவினால் பேசவே இல்லையே! ஒரு தடவை கூட பணம் படைத்தவர்களையோ, material world யோ போற்றினதே கிடையாதே! ஸ்வாமிகள் मुनिपुङ्गवम् என்பதில் ஆக்ஷேபணை ஏது! இவரை ஸத்குருவாக அடைந்த நம் பாக்யமே பாக்யம்!

அவர் காதுல போட்டாலே கேட்டது கிடைத்ததும், கஷ்டங்கள் தீர்ந்ததும் ஆச்சர்யமில்லை. இதில் நிஜமான கருணை என்னவென்றால், ‘இந்த மாதிரி எல்லாம் கிடைச்சாலும், வாழ்க்கைத் தவிப்பை நம்மால் விடமுடியவில்லை. ஆனால், இவர் எந்த ஆசையும்

இல்லாமல், சுத்தி உள்ள ஒரு ப்ரச்னையும் பாதிக்காமல் இருக்காறே, அது எப்படி?' என்று யோசிக்க ஒரு வாய்ப்பு குடுத்தாரே, அது தான் நிஜமான கருணை. அந்த நிலையை ஸ்வாமிகள் எப்படி அடைந்தார் என்ற கேள்விக்கு பதில், 'அவர் பகவானை முறைப்படி சரணாகதி பண்ணி அந்த ஞான நிலையை அடைந்தார்' என்பது தான். அவரைப் பார்த்ததால் தான், நாமும் அப்படி ஆகவேண்டும் என்ற ஆசை ஒரு கொஞ்சமாவது ஏற்பட்டு, அவரையே சரணடைந்து, அவர் சொன்னதைச் செய்ய முற்படுகிறோம்.

ஸ்வாமிகள், புராண புருஷர்களை இக்கால மனிதர்களோடு ஒப்பிட மாட்டார். அது போல இவ்வளவு நேரம் அவரை ராமராகவும், ஸீதையாகவும், ஹனுமாராகவும், தெய்வமாக பேசிவிட்டு அவரைப் போல் ஆகவேண்டும் என்று பேசுவதே சரியா என்ற கேள்வி வருகிறது. கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் தன்னை உண்மையாக நம்பினவர்களுக்கு அந்த hope குடுத்தார். தன் ஈச்வர வாக்கால் 'விஷ்ணு ஸஹஸ்ரநாமம் தினமும் சொல்லி வர, இகத்தில் நல்ல வாழ்க்கையும், உயர்வற உயர்நலமான மோக்ஷமும் கிடைக்கும்' என்று சொல்லி எழுதி கூட குடுத்திருக்கிறாரே!

அது தான் ஸத்குரு செய்யும் அபார கருணை. அவர் பேரைச் சொல்லுவதால், இந்த கோரக் கலியிலும், ஓரளவாவது நிம்மதி, சந்தோஷம், கொஞ்சம் கஷ்டங்களைத் தாங்கும் சக்தி எல்லாம் இருக்கு என்று மட்டும் நமக்கு தெரிகிறது. முழுக்க அவரை நம்பி சரணாகதி பண்ணினா என்ன கிடைக்கும் என்றால், அவராகவே ஆகிவிடலாம்.

ஆனா சரணாகதி பண்றதுனா என்ன என்பதும் அவர் காட்டிக் குடுத்திருக்கிறார். That is in the next chapter - விபீஷண சரணாகதி

## யுத்த காண்டம்

## 20. என்னைச் சரண் அடைந்தவர்களைக் காப்பேன்; இது என் கடமை

ராமர், வானர சேனையோடு கடற்கரையை அடைந்து, கடலை எப்படி கடப்பது என்று நண்பர்களோடு கலந்தாலோசிக்கிறார். அங்கே ஹனுமாரின் பராக்ரமத்தால் கலங்கிய ராவணன், மந்திரிகளை அழைத்து, ராம லக்ஷ்மணர்களும் வானரப் படையும் வந்துவிட்டால் எப்படி சமாளிப்பது என்று யோசனை கேட்கிறான். சில ராக்ஷஸர்கள் ராவணனுடைய பழைய வெற்றிகளை பேசி 'உன்னை வெல்ல யாராலும் முடியாது' என்று புகழ்கிறார்கள். சில ராக்ஷஸர்கள் தற்பெருமை பேசி 'நாங்கள் இருக்கும் போது என்ன பயம்?' என்கிறார்கள். வேறு பல குருட்டு யோசனைகள் சொல்லுகிறார்கள்.

விபீஷணன் 'பிறன் மனைவியை கவர்தல் பெரும் பாவம். உனக்கும் உன்னை நம்பின எல்லாருக்கும் இதனால் கேடுகாலம் வந்திருக்கிறது. தர்மாத்மாவான ராமரை எதிர்க்க இவர்கள் யாராலும் முடியாது. ஸீதையை ராமரிடம் ஒப்படைத்து நிம்மதியாய் இருப்போம்' என்று சொன்னவுடன் இந்த்ரஜித் அவனை கோழை என்று நிந்திக்கிறான். விபீஷணன் 'சிறுமதி படைத்த இவனை யார் உள்ளே விட்டது' என்று கோபிக்க, ராவணன் விபீஷணனை 'கூடவே இருந்து குழி பறிக்கும் பங்காளி குணத்தை காட்டுகிறாய். தம்பியானதால் கொல்லாமல் விடுகிறேன்' என்று அவமானப் படுத்தி பேசுகிறான்.

விபீஷணன் உடனே தன் நான்கு மந்திரிகளுடன் வானில் கிளம்பி, ராமர் இருக்கும் இடம் வந்து, சுக்ரீவன் முதலிய வானரர்களிடம் 'எல்லா உலகிற்கும் புகலிடமான ராமரைச் சரணடைய ராவணன் தம்பியான விபிஷணன் வந்திருக்கிறேன் என்று தெரிவியுங்கள்' என்று கூறுகிறான். வானரர்கள் ராமரிடம் அதைச் சொல்லி, எதிரியுடமிருந்து வரும் அவனை நம்ப வேண்டாம் என்கிறார்கள். ஹனுமார் மட்டும் 'இவன் தர்மாத்மா. நம்பிக்கையோடு வந்திருக்கிறான். ஸந்தேகித்தால் மனம் வருந்துவான். இவனை சேர்த்துக் கொள்ளலாம்' என்கிறார்.

ராமர் 'அடைக்கலம் கேட்டு வந்தவரை ஏற்பது தான் சரி. தள்ளுவது பாபம்' என்று சாஸ்த்ரங்கள் கூறுகிறது. மஹான்களும் அவ்வண்ணம் செய்து காட்டி இருக்கிறார்கள். என் இச்சையின்றி எனக்கு யாரும்

எந்த ஆபத்தும் செய்ய முடியாது. இவன் நல்லவனோ கெட்டவனோ, என்னை வந்து சரணடைந்தவனை நான் எல்லா கோணங்களிலும் காப்பேன். இது என் விரதம். அவனை அழைத்து வாருங்கள்' என்கிறார். விபீஷணன் வந்து ராமரை நமஸ்கரிக்கிறான்.

'எல்லாவற்றையும் விட்டுவிட்டு உங்களையே நம்பி வந்திருக்கிறேன். உங்களுக்காக உயிரையும் தருவேன்' என்று பாதங்களில் பணிந்த விபீஷணனை ராமர் கண்களால் பருகுவது போல அன்போடு பார்த்து, சமாதானம் செய்து, அவனை ஏற்கிறார். லக்ஷ்மணனிடம் ஸமுத்ர ஜலம் கொண்டு வரச்சொல்லி, இக்கரையிலேயே அக்கறையோடு விபீஷணனை லங்கைக்கு ராஜாவாக பட்டாபிஷேகம் செய்து வைக்கிறார். ராமரின் இந்த கருணையை பார்த்து வானரர்கள் வியக்கிறார்கள். ராமர் விபீஷணனிடம் கடலை கடக்க உபாயம் கேட்கிறார். அவன் 'நீங்கள் ஸமுத்ரராஜாவை வேண்டினால் வழி விடுவார்' என்று சொல்கிறான். ராமரும் அதை ஏற்கிறார்.

---

ஸ்வாமிகளைப் பார்த்தால் தான் சரணாகதி என்பது ஒரு நிகழ்ச்சி இல்லை. அது ஒரு process என்பதை புரிஞ்சுக்க முடிஞ்சது. நம்முடைய படிப்பு, ஸாமர்த்தியம், இளமை, பணம், செல்வாக்கு இதில் வெச்சுருக்கும் நம்பிக்கையை விட்டு, தெய்வத்தின் கிட்ட நம்பிக்கை ஏற்பட்டு, நம்மை முழுமையாக ஒப்படைத்து, பகவானை ஸூத்ரதாரியாகக் கண்டுகொள்வது என்ன அவ்வளவு easy யா? It cannot be a one time event.

'ஒரு கஷ்டம்னா வேண்டிக்கலாம். பணம், குடும்பம், உடம்பு எல்லாத்துலயும் மேன்மேலும் கஷ்டம் வந்தவுடன் ரெண்டு கையையும் மேலே தூக்கி பகவானையே சரணடைந்து விட்டேன். (வேலையை விட்டுவிட்டு, மஹாபெரியவா சொல்லியபடி ராமாயண பகவதமே படிச்சுண்டு இருக்க ஆரம்பித்ததைச் சொல்லும் போது அப்படி சொல்வார்) அப்படி சரணடைந்த பின் न मे भक्त: प्रणश्यति என்று கீதையில் குடுத்த வாக்கின் படி பகவான் காப்பாற்றுகிறார் என்பதை உணர ஆரம்பித்தேன்' என்று சொல்வார்.

ஞானத்தின் அடையாளங்களான பயமின்மையும், வைராக்யமும், கருணையும் வெளிப்பட தெரிஞ்சாலும், ஸ்வாமிகள் தன் நிலையை confirm பண்ண மாட்டார். 'நாம் சரணாகதி பண்ணினதை பகவான்

ஏற்றுக் கொண்டார் என்று நாமே எப்படி confirm பண்ணிக்க முடியும்? அவர் தான் பண்ணனம். பகவானோட கருணை ஏற்படும் வரையில் சோம்பலை ஒழித்து, திரும்பத் திரும்ப விடாமல் பஜனம் செய்ய வேண்டும். ஞானம் வந்தா சிவன் சார் எழுதி இருக்கற மாதிரி சுவரை வெட்டவெளி மாதிரி கடந்து போகலாமே. அது இன்னும் வரல்லை. ஸுந்தரகாண்டம் படிச்சா ஞானம் வரும்னு ஸேஷாத்ரி ஸ்வாமிகள் சொல்லி இருக்கார். நம்பி படிச்சுண்டு இருக்கேன்' என்று பாராயணம் பண்ணிக் கொண்டு இருந்தார்.

ஸ்வாமிகள் நிஜமான சரண்யனாய் இருந்ததால் 'நான், என்னோடது' என்ற வார்த்தைகளையே உபயோகப் படுத்த மாட்டார். 'நவாஹம் பூர்த்தி ஆச்சு' என்று சொல்வார். 'இந்த ஆத்து குழந்தைகள்' என்பார். 'अनहंवादी என்று கீதையில் வரும் வார்த்தையை follow பண்ணுவோம். பாவம் (bhavam) வரும் போது வரட்டும்' என்பார்.

ஒரு அட்டையில் नारायण करुणामय शरणं करवाणि तावकौ चरणौ 'கருணையே வடிவான குருவாயூரப்பா! உன் இரு திருவடிகளில் சரணடைகிறேன்' என்று எழுதி வெச்சுண்டு கடைசி நாள் வரை அதைப் பார்த்துக் கொண்டே நாவால் ஜபித்துக் கொண்டே இருந்தார்.

அப்படி தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருந்த போதிலும், ராமர் எப்படி அபயம் குடுப்பது தன் விரதமாய் வெச்சுண்டு இருந்தாரோ, அது போல ஸ்வாமிகள் தன் தபோ பலத்தால் நிக்ரஹானுக்ரஹ மஹானாய் இருந்து, நமக்கு எத்தனை தடவை அபயம் குடுத்திருக்கிறார்! அதனால் अपराध सहस्र भाजनं पतितं भीम भवार्णवोदरे । अगतिं शरणागतं हरे कृपया केवलं आत्मसात्कुरु ॥ என்று சொல்லி அவரையே சரணடைந்தால் நம்மையும் ஏற்றுக் கொள்வார் என்று என் நம்பிக்கை. That can be an auspicious beginning of the process.

யோசிச்சுப் பார்த்தா, ஸ்வாமிகள் நமக்கு குடுத்த வரமெல்லாம் பலிக்கலை, அவர் செய்யதே என்று சொன்னதைச் செய்தால் சுகமா இருக்கு, அவர் சொன்னதைச் செய்தால் நமக்கு கஷ்டம் தான் வந்தது, என்று இருந்தா கூடா, இவரைத்தான் சரணாகதி பண்ணனும். ஏனென்றால் இவர் ஒருத்தர் தான், புராணங்களை ஒரு உயர்கல்வி என்று உள்ளபடி புரிஞ்சுண்டு, அது மூலமாக நாம் நேர்மை, நல்லறிவு, மனவடக்கம் இதெல்லாம் வளர்த்துக்க வழிகாட்டினார்.

ஹனுமார், ராவணன் அந்தப்புரத்தில் ஸீதாதேவியை தேடுகிறார். ராவணன் மனைவிகளைத் தூங்கும் போது பார்க்க நேர்ந்ததே என்று வருந்துகிறார். 'என் மனமும் இந்திரியக்களும் என் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. மேலும் ராம கார்யத்திற்காக அவர் சொல்லி ஸீதையை தேடறத்துக்காக இங்கு வந்தேன். (இல்லைனா வரமாட்டேன் என்பது தொனி)' என்கிறார்.

ஸ்வாமிகள் இதை எடுத்துச் சொல்லி, நமக்கு மனம் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று நினைச்சுண்டு மனத்தைக் கெடுக்கும் club, casino மாதிரி இடங்களுக்குப் போகக்கூடாது. சினிமா, சீட்டுக் கச்சேரி மாதிரி காரியங்கள் பண்ணக் கூடாது என்று சொல்வார். இந்த மாதிரி எடுத்துச் சொல்வது மட்டும் இல்லை, அவர் வாழ்ந்தும் காமிச்சு இருக்கார். அதனால் உருப்பட வேண்டும் என்றால் இவர் காலைப் பிடித்துக் கொள்ளுவது ஒரு நல்ல வழி என்று எனக்கு தோன்றுகிறது.

நான் US ல் இருந்த போது club, casino எல்லாம் போயிருக்கேன். ஆனா ஸ்வாமிகள் அதெல்லாம் தப்பு என்று சொன்னது ஞாபகம் இருந்ததால், அதை விட்டுவிட்டு திரும்பி வர முடிந்தது. இப்பவும் ஹோட்டல் போறேன், சினிமா பார்க்கறேன். ஆனா நாம என்ன பண்ணிண்டு இருக்கோம், எது பண்ண வேண்டிய கார்யம், என்று concious ஆக இருந்தாலே, ஒரு நாள் திருந்த வாய்ப்பு இருக்கு. நான் நல்லவன், பக்திமான், எனக்கு பகவான் அருள் இருக்கு, ஓரளவு ஞானம் கூட இருக்கு, என்றெல்லாம் நினைத்துக் கொள்வது dangerous. Complacency வந்து உத்தம பக்தி ஏற்பட முயற்சியே செய்யாமல், உயிர் அவமே போய்விடும். 'ஞானம் வந்தா மனதில் உள்ள முடிச்சுகள் அவிழ்ந்து உண்மை விளங்கும். அது வரைக்கும் பண்ற பஜனம் சரியானதா என்பதை மட்டும் பார்த்துக் கொண்டு, விழிப்போடு அதைப் பண்ணிண்டே போ' என்பது அவர் உபதேசம்.

சரணாகதி செய்த பின், நம் பாப புண்யத்தின் பொறுப்பை பகவான் ஏற்கிறார் என்று சாஸ்த்ரத்தில் இருந்தாலும், சில மனோபாவங்களை (attitudes) சரி செய்து கொள்ள வேண்டும், என்று ஸ்வாமிகள் காண்பிச்சுக் குடுத்திருக்கிறார். That, in the next few chapters.

## 21. சாந்தமுலேக சௌக்யமு லேது

ராமர் மூன்று நாட்கள் தர்ப்பைப் புல்லின் மேல் படுத்து பட்டினியிருந்து ஸமுத்ரராஜனிடம் வேண்டுகிறார். அவன் வரவில்லை. 'லக்ஷ்மணா! வில்லை எடு. இந்த கடலை வத்த அடிச்சு விடுகிறேன். நாம் நடந்தே இலங்கைக்கு செல்வோம்' என்று கோபத்தைக் காட்டியவுடன் ஸமுத்ரராஜன் வந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டு 'நளனைக் கொண்டு பாலம் கட்டுங்கள். அது முழுகாமல் பார்த்துக்கறேன்' என்று சொல்கிறான். ராமர் நளனையும் வானரர்களையும் கொண்டு தேவர்களும் வியக்கும் வண்ணம், நூறு யோஜனை நீளம், பத்து யோஜனை அகலத்திற்கு கடலின் மேல் பாலம் கட்டி அதன் மூலமாக லங்கை சென்று அடைகிறார்கள்.

ராவணன் அனுப்பிய ஒற்றர்களை விபிஷணன் ராமரிடம் பிடித்து வர, ராமர் அவர்களுக்கு உயிர் பிச்சை அளிக்கிறார். அவர்கள் ராவணனிடம் வந்து ராம லக்ஷ்மணர், ஸுக்ரீவன், ஹனுமான், ஜாம்பவான், நீலன், அங்கதன் இவர்களின் வீரத்தை புகழ்ந்து பேசுகிறார்கள். ராவணன் 'அரசனிடம் அண்டிப் பிழைப்பவர்களே! அடுத்தவனையா புகழ்கிறீர்கள். ஓடிப் போங்கள்' என்று சீறுகிறான்.

ராமரின் தலை, வில் போன்றவற்றை மாயையால் தோற்றுவித்து ஸீதையிடம் காட்டி பயமுறுத்துகிறான். அவள் புலம்பி அழுகிறாள். அதற்குள் யுத்த பேரிகை முழங்கவே, அவனை மந்திரிகள் கூப்பிடுகிறார்கள். அவன் போனவுடன் அந்த தலை மறைந்து விடுகிறது. ஸரமா என்ற ராக்ஷஸி ஸீதையைத் தேற்றுகிறாள்.

மால்யவான் என்ற முதியவர் நல்ல புத்தி சொல்ல வரும் போது, 'நான் வணங்காமுடி ராவணன். என் வரமும் பலமும் இருக்கும் போது, நான் ஏன் ஒரு நாடோடிக்கும், குரங்குகளுக்கும் பயப்பட வேண்டும். எழுந்து போங்கள்' என்று கத்துகிறான். யுத்தத்திற்கு வியூகத்தை அமைக்கிறான். விபிஷணனின் மந்திரிகள் கழுகுகளாகச் சென்று அதை ஒற்று அறிந்து வர, ராமரும் அதற்கேற்ப வானரப் படைகளை நான்கு கோட்டை வாயிலில் நிறுத்தி 'நான், லக்ஷ்மணன், விபீஷணன், அவன் மந்த்ரிகள் ஏழு பேரைத் தவிர, மற்ற நம் படையினர் எல்லோரும் வானரர்களாகவே இருப்போம். அதுவே நமக்கு அடையாளமாக இருக்கட்டும். உருவம் மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை.' என்று சொல்கிறார்.

உ

ராவணன் மூர்க்க பிடிவாதத்தாலும் கோபத்தாலும் விதியின் வழியை அறியாமல் தன் குலத்தையே அழித்து தானும் மடிகிறான். ராமர் கோபம் வந்தாலும் உடனே சாந்தம் அடைகிறார்.

---------------------------------------------

ஸ்வாமிகளைப் பற்றி நினைக்கும் போதே நமக்கு அந்த சாந்த குணம் தான் முதலில் ஞாபகம் வருகிறது. அவருக்கு கோபத்தையும் வருத்தத்தையும் ஏற்படுத்தும் விஷயங்கள் அலை போல வந்துண்டே இருந்தன. இத்தனைக்கும் அவருக்கு ஒரு விதமான ஆசையும் இல்லாத போது. ஆனால் लोकानां क्षणमात्र संस्मरणतः संताप विच्छेदिनी என்றபடி ஒரு க்ஷணத்தில் அந்த ச்லோகங்களை சொல்ல ஆரம்பித்தவுடன் அந்த வருத்தம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். ‘நம்ப மனஸு தட்டான் கடையில் இருக்கிற தராசு மாதிரி இருக்கக் கூடாது. விறகுக் கடையில் இருக்கற தராசு மாதிரி இருக்கணம். சின்ன கஷ்டங்களுக்கு ஆடக்கூடாது’ என்பார்.

மஹாபெரியவா ஸ்வாமிகளைப் பற்றி ‘பாகவத ஸப்தாஹம் மலை போன்ற கார்யம். பாகவதருக்கு தான் ச்ரமம். நமக்கெல்லாம் ஆனந்தம். படனம் மதுரம். ப்ரவசனம் மதுரதரம்’ என்று வாயாரப் புகழ்ந்து, மேள தாளத்தோடு, குடை பிடித்து ஊர்வலமாக அழைத்து வர செய்து, சுக ஸ்வரூபமாக பாவித்து, இவர் அவப்ருத ஸ்னானம் செய்த பின்னரே தான் செய்ய வேண்டும் என்று காத்திருந்த போதும் பெருமைப் பட்டுக் கொண்டதில்லை.

அடுத்த வாரமே, கடனுக்காக அலையும் போது, யாராவது வாசலில் காக்க வைத்தாலும் கோச்சுக்கறதில்லை. ‘ராமரே கபந்தன் கிட்ட தயவு செய்யப்பா என்று கேக்கவில்லையா? இவர் (கடன் குடுப்பவர்) கபந்தனுக்கு கீழேயும் இல்லை. நான் ராமருக்கு மேலேயும் இல்லை’ என்று light ஆ சொல்லி விடுவார். Such an equanimity of mind. அந்த மனப்பக்குவம் அவருக்கு எப்படி கிடைத்தது? எப்படிக் கிடைத்ததென்றால், அவர் புத்தியை பகவானின் பாதத்தில் புகட்டி, உத்தம பக்தியை (அந்த ஞானத்தை) வேண்டிப் பெற்றுக் கொண்டார்.

‘आपदां अपहर्तारं दातारं सर्वसंपदाम् । लोकाभिरामं श्रीरामं भूयो भूयो नमाम्यहम् ॥ என்ற ஸ்லோகத்தை வெளியில் போகும்போது வழித்துணையாக சொல்லச் சொல்லுவா. அது வாழ்க்கைக்கே வழித்துணை’ என்று சொல்வார் ஸ்வாமிகள். சரணாகதி பண்ணினால், விபீஷணனை ராமர்

ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றி சம்பத்துக்களை குடுத்தது போல, நமக்கும் குடுப்பார். ஆனால் ஸம்ஸாரம் என்ற ஆபத்திலிருந்து மீட்டு, ஞானம் என்ற செல்வத்தை ராமர் நமக்குக் குடுக்க வேண்டுமானால், நாம் புத்தி பூர்வமாக அதையே கேட்க வேண்டும்.

நமக்கு பகவானைச் சரணடைந்த பின், overnight ஆசாபாசங்கள் போய் விடப் போவதில்லை. At least 'நான் நினைச்சதெல்லாம் நடத்திக் கொள்வேன்' என்ற திமிரான போக்கை விட்டு, 'நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை, உனக்கே பரம்' என்று நம் முயற்சிகளுக்கு பகவான் தரும் பலனில் excitement / frustration இல்லாமல் இருக்க try பண்ணலாம். அப்படி மனம் பழகி, வைராக்யம் ஏற்பட்டு, ஞானம் அடைவது தான் சரணாகதியின் நோக்கம். அதற்கு ஸ்வாமிகள் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர் பகவானை உண்மையாக சரணடைந்து, பணத்தில் பற்று வைக்காமல், புலன்கள் அடங்கி, ஞானத்தோடு இருந்ததால் அல்லவா அவ்வளவு சாந்தமாய் இருந்தார்!

நாம் வினையின் பலனால் கஷ்டப்படும் போது, பொசபொசவென்று அழுகையும் கோபமும் வரும்போது, ஸ்வாமிகளுடைய சாந்தமான முகத்தை பார்த்துக்கணம். இவருக்கு வந்ததை விடவா, என்று நினைப்பு வருமே! bank balance பார்த்து மனஸ் excite ஆகி துள்ளும் போதும், அந்த புன்சிரிப்பை பார்த்துக்கலாம். ஒண்ணும் bank balance இல்லாலாமலே அவர் அவ்வளவு happyயா இருந்தாரே, அதோட ரகசியம் என்னனு ஒரு second யோசிக்கத் தோணுமே!

சுக துக்கத்திற்கு மேலான சந்துஷ்டியை, நம் ஸத்குரு கண்டு அண்டி மொண்டு உண்ட சுத்த ஞானமென்னும் தேனை, ஸச்சிதானந்த ஸ்வரூபமான பகவானின் பாதங்களை, நாடுவது தான் சரணாகதி. அந்த ஆனந்தத்தை நிஜமாக அநுபவித்தால், சுக துக்கங்களில் excitement / frustration குறையும். excitement குறைந்தால், பாபம் பண்ணுவது குறைந்து, புண்யம் அதிகமாய் பண்ணுத் தோன்றும். அப்படி தனிமையில் பஜனம் பண்ணினா, அதிலிருந்து கிடைக்கும் சந்துஷ்டியை தக்க வைத்துக் கொள்ள, இன்னும் அதிகமாய் புண்யத்தில் ஈடுபடுவோம். அப்படி சரணாகதி process ஒரு virtuous cycleஆக ஆகி நம்மை மேம்படுத்தும். இந்த objective & attitude சரியாக வெச்சுண்டு பண்ணுவது தான் சரணாகதி.

ஸ்வாமிகள் ‘பகவானிடத்தில் பாலைக் கேள். பசுவைக் கேக்காதே. ஸௌக்யங்கள் வேண்டும் என்று கேக்காதே, அதிலிருந்து சந்தோஷம் கிடைக்கும் என்று நிச்சயமில்லை. நிம்மதி வேண்டும் என்று கேள்’ என்பார். காமினீ காஞ்சன மோஹத்தில், நம்மைக் காட்டிலும் அதிகமாக மூழ்கி கிடக்கும் இக்கால போலி சாமியார்களைப் பார்த்துக் கொண்டு, ‘பகவானை சரணாகதி பண்ணியாச்சு, அவர் பாத்துப்பார். என்ன வேணா பண்ணலாம்’ என்று நாமும் நினைத்தால், நரகத்தில் தள்ளும் viscious cycle லில் மாட்டிப்போம். அந்த மாதிரி போலி சாமியார்கள், show காக பண்ற நல்ல கார்யங்கள், stunt ஆ பண்ற உபந்யாஸம், entertainment value ஜாஸ்தியா இருக்கற பஜனை, அதில் ருசி அதிகமாகி விட்டால், அவர்கள் புகழ்ச்சியில் மயங்கி, ‘நாமும் நல்ல கார்யம் பண்றோம். பக்தி பண்றோம். நம் பேராசைகள் ந்யாயமானவை’ என்று எண்ணம் வந்து, பாபம் பண்ணுவதில் குளிர் விட்டுப் போய்விடும்.

தோஷ புத்தியோடு உலகை அநுபவித்துக் கொண்டு, ஸ்வாமிகளைப் போன்ற ஒரு தூய்மையான மஹானை ஆச்ரயித்து, அவருடைய மஹத்துவத்தை அடிக்கடி நினைத்துப் பார்த்து, அந்த மாதிரி நிலை நமக்கும் வராதா என்று ஏங்கினால், அந்த ஏக்கத்தின் மூலமாக நிஜமான மாற்றம் (transformation) ஏற்பட்டால் தான், பகவானை சரணாகதி பண்ணின பலன் கிடைக்கும். உலகில் நப்பாசை இருக்கும் வரை, பொருட்பற்று இருக்கும் வரை, அந்த ஏக்கம் வரது கஷ்டம். பக்தியினால் பேசறது, எழுதறது, அழறது, சிரிக்கிறது, ஆடறது, பாடறது, எல்லாமே ஒரு ஆறுதலுக்கு தான். ‘இதையே முடிந்த முடிவாய் நினைத்து விடாதே’ என்று எனக்கும் ஞாபகப் படுத்துங்கள்.

ஆனா பக்தியைத் தவிர வேற வழியும் கிடையாது. அந்த ராமருடைய (ஸ்வாமிகளுடைய) சரித்ரமும், ஸ்தோத்ரமும், நாமமும் தான் ஒரே hope. நம் பக்தியோட நோக்கம், ஸ்வாமிகள் அடைந்த நிலையை அடைய வேண்டும், என்பதாகத் தீர்மானமாக, sincere ஆ இருந்து விட்டால், பகவானுடைய பாதங்களை அடையத் தேவையான புத்தியை, எது ஸத், எது அஸத் என்ற தெளிவை அவர் குடுப்பார். மேலான ஞானத்தையும் அளிப்பார். கடைசி வரை வழித்துணையாக வருவார். சரணாகதி பண்ணின பின் ஸத்யமாய் இருக்க வேண்டியதின் அவசியம், elaborated in next chapter.

## 22. தன் நெஞ்சறிவது பொய்யற்க

தன் மாளிகையின் மாடத்திலிருந்து படைகளை பார்வையிடும் ராவணனைக் கண்டு, சுக்ரீவன் கோபத்தோடு அவன் மீது பாய்கிறான். அவனோடு மல்யுத்தம் செய்து வெற்றி வீரனாய் திரும்புகிறான். வானர வீரர்களுக்கு யுத்தத்தில் உற்சாகம் கூடுகிறது.

ராமர், ராவணனுக்கு ஒரு கடைசி chance குடுக்க விரும்பி 'ஸீதையை என்னிடம் ஒப்படைத்து உயிர் பிழைத்துப் போ. ஆனால் இனி லங்கை ராஜ்யம் விபீஷணனுக்குத் தான்' என்று சொல்லி அங்கதனை தூதனாய் அனுப்புகிறார். ராவணன் அதைக் கேட்டுக் கோபமடைந்து அங்கதனை பிடிக்கச் சொல்கிறான். அங்கதன் வந்த நாலு பேரையும் தூக்கி எறிந்துவிட்டு, ராவணனின் மாளிகை கோபுரத்தைக் காலால் எத்தி உடைத்து, ராமரிடம் வந்து சேருகிறான். யுத்தம் துவங்குகிறது.

இந்த்ரஜித் நேரே யுத்தம் செய்து அங்கதனிடம் தோற்று விடுகிறான். உடனே கண்களுக்கு புலப்படாமல் மறைந்திருந்து, ராம லக்ஷ்மணர்களை நாகபாசத்தால் கட்டுகிறான். பயங்கர விஷப் பாம்புகளின் கட்டில் அவர்கள் மயங்கி கிடப்பதைக் கண்ட விபீஷணன், சுக்ரீவன் எல்லாருமே பயந்து விடுகிறார்கள். ராவணன் ஸீதையை புஷ்பக விமானத்தில் ஏற்றி காண்பிக்கச் சொல்கிறான். கதறும் ஸீதையை திரிஜடை ஸமாதானம் செய்கிறாள். ஒரு நிமிஷம் மயக்கம் தெளிந்த ராமர் லக்ஷ்மணன் நிலையை பார்த்து பரிதவித்து 'நான் தோற்றுவிட்டேன். எல்லாரும் வந்த வழியே போய்விடுங்கள். விபீஷணா! என்னை மன்னித்து விடு' என்று சொல்கிறார்.

அப்போது கருட பகவான் அங்கு வர, விஷப்பாம்புகள் பயந்து ஓடிவிடுகின்றன. ராம லக்ஷ்மணர்களை கருட பகவான் தடவிக் குடுக்கிறார். அவர்கள் முன்பை விட இரண்டு மடங்கு சக்தியும் தேஜஸூம் பெறுகிறார்கள். 'ராக்ஷஸர்கள் எப்போதும் சூழ்ச்சியில் வல்லவர்கள். உங்களுக்கு உங்கள் நேர்மை தான் பலம். விரைவில் வெற்றி பெறுவீர்கள்' என்று வாழ்த்திவிட்டு செல்கிறார்.

வெற்றிக் களிப்பில் இருந்த ராவணன், ராம லக்ஷ்மணர்கள் நாக பாசத்திலிருந்து விடுபட்டு மத்தகஜங்களைப் போல நிற்பதைப் பார்த்து சோகத்தில் ஆழ்ந்து போகிறான்.

ராமாயணம் முழுவதும் ஸத்யத்தை, மனோவாக்காயத்தினால் ஒன்றாயிருப்பது என்ற நேர்மைக் குணத்தை (आर्जवम्) போற்றுகிறது. தசரதர் ஸத்யத்துக்காக அன்பு மகனைக் காட்டுக்கு அனுப்புகிறார். அந்த ஸத்யத்துக்காக ராமர் 14 வருஷம் வனவாசம் செய்கிறார். 'practical ஆ இருந்துகோ' என்று பேசும் ஜாபாலியை ராமர் கண்டிக்கிறார். ஸீதை ஜனகர் குடுத்த வாக்கின்படி நிழலைப் போல ராமரோடு காட்டிற்குப் போகிறாள். ஜடாயு 'நீங்கள் தள்ளி போயிருக்கும் போது ஸீதையை நான் பார்த்துக்கறேன்' என்று சொன்ன வார்த்தைக்காக் தன் உயிரையே தருகிறார். இப்படி அந்த உத்தமர்கள் ஸத்யத்தை காப்பாற்றுவதை தலையாய கடமையாய் வெச்சுண்டு இருந்தார்கள். அப்படி இருப்பவர்களை, எல்லா சூழ்ச்சிகளிலிருந்தும் பகவான் காப்பாற்றுகிறார், முக்தி அளிக்கிறார் என்பது தான் ராமாயணத்தின் முக்கிய செய்தியாய் தெரிகிறது.

---------------------------------------------

Swamigal was an epitome of truth and straight forwardness. அவர் கார்த்தால 5 மணிக்கு எழுந்தா ராத்திரி 10 மணி வரைக்கும் என்ன பண்ணினார் என்பது எல்லாருக்கும் தெரியும். His whole life was an open book. பேச்சிலியோ, கார்யங்களிலோ ஒளிவு மறைவே கிடையாது. மறைக்கறதுக்கு ஒண்ணுமே இருக்கலை.

நாளைக்கு கார்த்தால 9 மணிக்கு பூர்த்தி என்று சொல்லி விட்டால், வேறு சிரமங்களால் பகலில் படிக்க முடியவில்லை என்றாலும், ராத்திரி எல்லாம் படிச்சு அந்த 9 மணிக்கு பட்டாபிஷேக ஸர்கத்துக்கு வந்து விடுவார். மஹாபாரதம், ஸ்காந்தம், ஸௌந்தர்யலஹரி எல்லாம் ப்ரவசனம் பண்ண சொன்னால், எனக்கு ராமாயணம் பாகவதம் தான் தெரியும். மற்றதெல்லாம் deepஆ தெரியாது என்று சொல்லி விடுவார். ஏதாவது ச்லோகம் அர்த்தம் கேட்டா, தெரிஞ்சா சொல்வார். இல்லைனா translation எடு பார்ப்போம் என்பார்.

'ஸத்யம் இல்லாதவா பண்ற பூஜையை பித்ருக்களோ தெய்வங்களோ ஏற்க மாட்டார்கள்.' 'ஸத்யம் இல்லாதவன் பண்ற பாலாபிஷேகம் பகவான் மேல நெருப்பைக் கொட்டற மாதிரி' 'யதார்த்தமாய் இருந்தால் மூவுலகில் எதுவும் ஸாத்தியம்' 'மண்ணைக் கொண்டு சுத்தி (Shuddi) செய்தால் மட்டும் சுத்தி வராது. பண விஷயத்தில் சத்யமாய் இருந்தால் தான் சுத்தி' என்ற quotations எல்லாம் விடாமல் தைரியமாய் சொல்லுவார். He had the moral authority to quote them.

ஸ்வாமிகள் வெச்சிருந்த கொள்கை எல்லாமே அவருக்கு இருந்த ஸத்யப் நிஷ்டையினால் தான் கடைசி வரை கடைபிடிக்க முடிந்தது. ஒரு வருஷம் ராமாயணம் பிரதி ச்லோகம் அர்த்தம் சொல்லி முடிவில் 200 ரூபாய் தக்ஷிணை குடுத்தால், கொஞ்சம் கூடக் குறைப்பட்டுக் கொள்ளாமல் வாங்கிண்டு இருக்கார். ராமாயண பாகவதத்திற்கு விலை பேசுவதில்லை என்ற ஸத்யத்தை எவ்வளவு சோதனைகள் வந்தபோதும் விடவில்லை. அப்படி ஸத்ய நிஷ்டையாய் இருந்ததால் அவர் சொன்ன வார்த்தைகள், குடுத்த வரங்கள், ஈச்வர வாக்காய், ஸத்யமாய் பலித்தது.

கஷ்டங்கள் எல்லை மீறி போன போது, கூட இருந்த நண்பர்கள் ச்ரமப் படுவதைப் பார்த்து, ராமர் சொன்னது போல 'நீங்கள் அவரவர் வேலையை பார்க்கப் போங்கள். என் கஷ்டம் என்னோடு போகட்டும்' என்று சொல்லி இருக்கார்.

ஆனால் அவர் நம்பின பகவான் அவரைக் கைவிட்டு விடவில்லை. கடல் போலிருந்த கடனை வற்ற அடித்து, அவருக்கும் அவரை நம்பின எல்லாருக்கும் உண்ண உணவும், இருக்க இடமும் மட்டுமில்லை, தளராத மனமும், தெய்வ வடிவமும், மாசற்ற கீர்த்தியும், உயர்வற உயர் நலமான மோக்ஷத்தையும் குடுத்தார்.

சிஷ்யர்களிடம் ஸ்வாமிகள் கருணைக்கு அளவே கிடையாது. எல்லா தப்பையும் மன்னிச்சு ஏத்துப்பார். ஆனா பொய் மட்டும் ஒத்துக்கவே மாட்டார். 'எனக்கு நகம் கடிக்கும் பழக்கம் இருக்கு. இது போகணம்' என்ற போது, 'சின்ன வயசுல class mates கிட்டேருந்து வந்துருக்கும். போயிடும்' என்றார். US போயிட்டு வந்தேன். வெறுக்கலையே! பேராசை, காமம் எல்லாம் பொறுத்துப்பார். ஆனால் ஸத்யம் தவறினால் வருத்தப் படுவார். உரிமை இருந்தா கண்டிப்பார்.

ஒரு தடவை ஒரு வைஷ்ணவ பையன் 'தெரிஞ்சவா இருக்கா நல்ல தர்சனம் பண்ணி வைக்கிறேன்' என்று என்னை திருப்பதி கூட்டிண்டு போய், நாமம் இட்டுவிட்டு ஸேஷாத்ரி என்று சொல்லி தோமல சேவை செய்து வைத்தான். ஸ்வாமிகளிடம் சொன்ன போது 'மத்த மனுஷா கிட்டவே பொய் சொல்லக் கூடாதுங்கற போது பகவான் கிட்ட பொய் சொல்லலாமா? இனிமே அப்படி பண்ணாதே. இந்த வெங்கடாசலபதியை (படம்) நமஸ்காரம் பண்ணி மன்னிப்பு கேட்டுக்கோ' என்று சொன்னார். அப்படியே செய்தேன்.

அதிலிருந்து அவரை சரணாகதி செய்த பின், அவரிடமும் வேஷம் போடக் கூடாது என்று தெரிந்து கொண்டேன். சரணாகதி என்பது 'நான் ஒங்களையே நம்புகிறேன்' என்று நாம் செய்யும் promise. Based on that அவர் 'உன்னை நான் காப்பாற்றுகிறேன். பயப்படாதே' என்று வாக்கு குடுத்திருக்கிறார்.

நாம் வாக்கை மீறினால், for example இவரை நம்பினால் கிடைப்பதை விட நிம்மதியோ, சந்தோஷமோ, பணமோ எதோ ஒண்ணு, வேறொரு ஸாமியாரைப் பார்த்தால் கிடைக்கும் என்று நினைத்தாலோ, or otherwise இவர் சொல்லிக் குடுத்த ஸ்லோகத்தை விட வேற ஒரு மந்த்ரம் நன்றாக பலிக்கும் என்றோ நாம் போனால், அப்போ கூட அவர் கருணயினால் குடுத்த வாக்கின் படி நம்மைக் காப்பாற்றுவார். ஆனால் ஸத்யம் தவறின நமக்கு பயம் வந்துவிடும். It will slow down the process in which we want to surrender our ego and trust him.

My feeling is - எல்லா distractions போகக் கிடைக்கிற கொஞ்சம் நேரத்தில், நம்ம time என்கிற precious பணத்தில், ஸத்ஸங்கம் என்ற தங்கத்தை வாங்கப் பார்க்கிறோம். ஸ்வாமிகள் மூலமா வால்மீகி கூட பண்ற ஸத்ஸங்கம், guarenteed 24 karat தங்கம். நாளைக்கு எதாவது ஆபத்துனா அடகு வெக்கும் போது ஏமாற்றம் ஏற்படாது.

So சரணாகதி மூலமாய் நமக்கு அவரிடம் நம்பிக்கை வளர ஸத்யம் முக்கியம். அவரையே நம்பி அவருக்கு trueஆ loyalஆ இருந்து என்ன கிடைக்கிறதோ, அது போதும் என்ற எண்ணத்தை வெச்சுண்டா, உலகத்திலும் honestஆ இருந்து எது கிடைக்கிறதோ அது போதும் என்று தோன்றிவிடும் வாய்ப்பு இருக்கு. அப்படி ஸத்யத்தை நாம் பிடிச்சு வெச்சுண்டா, அந்த ஸத்யமே வடிவான ஸ்வாமிகள், இன்னிக்கு தெய்வமாக ஆகிவிட்டாலும், அன்னிக்கு போல என்னிக்கும் நம்மை சூழ்ச்சிகளிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் காப்பார் என்பது என் நம்பிக்கை.

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிற தெய்வம் வாக்கியலால் வார்கழல் வந்து
உற்று இறுமாந்து இருந்தேன் எம்பெருமானே அடியேற்கு
பொற்றிவிசு நாய்க்கிடுமாறு அன்றே நின் பொன்னருளே

## 23. சோம்பல் குணம் பகவானிடம் போக முடியாமல் தடுத்து விடும்

ராவணன் ப்ரஹஸ்தன் என்ற சேனாதிபதியை பெரும் படையோடு போருக்கு அனுப்புகிறான். கடுமையான போரின் முடிவில் நீலன் என்கிற வானர ஸேனாதிபதி அவனை வதம் செய்கிறான். வியப்படைந்த ராவணன் ‘இது ஸாதாரண எதிரியில்லை. நானே போகிறேன்’ என்று யுத்தத்திற்கு வருகிறான். ராமரே அவன் வரவையும் தேஜஸையும் புகழ்கிறார். ராவணன் நீலன், லக்ஷ்மணன், ஹனுமார் எல்லாரையும் மீறிக் கொண்டு ராமரோடு யுத்தம் செய்ய வருகிறான். ஆனால் ராமரிடம் படுதோல்வி அடைகிறான். அவனுடைய ரதம், கொடி, சாரதி, வில், கவசம், கிரீடம் எல்லாவற்றையும் வீழ்த்திய ராமர், கருணையினால் நிராயுதபாணியாய் இருக்கிறான் என்பதால் கொல்லாமல் விடுகிறார்.

கோட்டைக்கு திரும்பிய ராவணன் ‘ஒரு மனிதனிடம் தோற்றேனே’ என்று அவமானத்தால் புழுங்குகிறான். பயம் மேலிட கும்பகர்ணனை எழுப்பச் சொல்கிறான். கும்பகர்ணன் காதில் தண்ணீரைக் கொட்டி, அவன் மேல் யானைகளை ஓடச் செய்து, தாரை தம்பட்டைகளை முழக்கி, உலக்கைகளால் அடித்து ஒரு வழியாக அவனை எழுப்பி மலை மலையாக மாமிசமும் குடம் குடமாக கள்ளும் குடுத்து, குளிப்பாட்டி ராவணனிடம் அழைத்து வருகிறார்கள்.

ராவணன் தனக்கு ஏற்பட்ட தோல்வியை சொல்லி அழுகிறான். கும்பகர்ணன் ‘இப்ப கூட விபீஷணன் சொன்னதைக் கேட்டால் உனக்கு நல்லது’ என்று சொன்னவுடன் ராவணன் முடிஞ்சு போனதைப் பேசி என்ன ப்ரயோஜனம்? எனக்கு உன் உபதேசம் ஒன்றும் வேண்டியதில்லை. எனக்கு உதவி செய்வியா மாட்டாயா?’ என்று அதட்டுகிறான். கும்பகர்ணன் ‘நான் இருக்கும் போது உனக்கு என்ன கவலை. நான் போய் ராம லக்ஷ்மணர்களை வதம் பண்ணி எல்லா வானரர்களையும் தின்று விட்டு வருகிறேன்’ என்று கிளம்புகிறான். ராவணன் மகிழ்ந்து அவனுக்கு ஆபரணங்கள் அணிவித்து, ஆசீர்வாதம் பண்ணி அனுப்புகிறான்.

கும்பகர்ணன் கடுமையான யுத்தம் செய்து வானரர்களை கதி கலங்கச் செய்கிறான். ஆனால் முடிவில் ராமருடைய அஸ்த்ரங்களுக்கு இரையாகிறான். இதைக் கேட்ட ராவணன் சோகமடைந்து

‘தர்மாத்மாவான விபீஷணன் பேச்சைக் கேட்காமல் அவனை விரட்டினதின் பலனை இன்று அனுபவிக்கிறேன்’ என்று அழுகிறான்.

கும்பகர்ணன் கள், மாமிசம், தூக்கம், ரிஷிகளை ஹிம்ஸித்தல், பரஸ்த்ரீ ஹரணம் என்று தாமஸ வடிவமாய் இருந்ததால், ராமருடைய மஹிமை ஒரு second புரிந்தாலும், விபீஷணனைப் போல ராமரிடம் போக முடியவில்லை. ராவணன் பேச்சை மீற முடியாமல் சாகிறான்.

---------------------------------------------

ஸ்வாமிகள் ‘ராவணன் (ராஜஸம்), கும்பகர்ணன்(தாமஸம்), விபிஷணன்(ஸத்வம்) எல்லாரும் இப்ப நமக்குள்ளவே இருக்கா. ராமரும் இருக்கார். நாம் ராமர் மஹிமையை கொஞ்சம் தெரிஞ்சுண்டு இருக்கோம். ஆனா உலக ஆசைகளை விடமுடியாததால், வேலை, பணம், குடும்பம் என்று மாத்தி மாத்தி ராஜஸத்துலியே முக்கால் வாசி பொழுது போய்விடுகிறது. மிஞ்சி கிடைக்கும் கொஞ்ச நேரத்தில், தாமஸமாய் T.V. magazines, தூக்கம் என்று போக்கி விட்டால் ராமரை மறந்தே போய் விடுவோம்.’

त्वं अक्षरोसि भगवन् व्यक्ताव्यक्त स्वरूपधृत् ।
यदा त्वं रावणं हत्वा यज्ञविघ्नकरं खलम् । लोकान् रक्षितवान् रामा तदा मन्मानराश्रयम् ॥
रजस्तमस्च निर्हृत्य त्वत्पूजालस्य कारकम् । सत्वं उद्रेकय विभो त्वत्पूजादर सिद्धये ॥

‘சோம்பலை ஒழித்து ஒரு target வெச்சுண்டு பகவத் பஜனத்தை விடாமல் செய்ய வேண்டும். கார்த்தால எழுந்து ராமாயணம் படி. பத்து நிமிஷத்துலேர்ந்து அரை மணி, ஒரு மணி என்று ஜாஸ்தி பண்ணிண்டே போகணம். அதுவும் பகவான் பார்த்துப்பார் என்று சொல்லுவது சரியில்லை. benefit fundல போட்ட பணம் போயிடுத்துனா எப்படி அழறாளோ அந்த மாதிரி ராமாயணம் படிக்காம ஒரு நிமிஷம் போயிடுத்துனா அழணம்’ என்று சொல்வார்.

அவர் அப்படி இருந்தார். அசதியாய் இருந்தால் படுத்துண்டு ஒரு ஆவர்த்தி விஷ்ணு ஸஹஸ்ர நாமம் படிக்க சொல்லி கேட்டுட்டு புத்துணர்ச்சியோடு அவர் எழுந்து கொள்வதைப் பார்த்தால், நமக்கே அந்த ஸ்லோகத்தின் மேல் ஒரு நம்பிக்கை வந்துடும். படுத்துண்டு இருப்பார். என்னைப் பார்த்தவுடன் எழுந்து மூகபஞ்ச சதீ படிப்பார். ‘அம்பாளை நினைச்சதால் சக்தி வந்துவிட்டது. இனி ராமாயணம் portion முடிச்சுடலாம்’ என்று அதை படிக்க ஆரம்பிப்பார்.

தாமஸ குணத்தை அதிகரிக்கும் புகையிலை, மது, வெங்காயம், பூண்டு முதலியவற்றை மருந்துக்கு கூட (not even in medicines) சேர்க்க மாட்டார். காபி மருந்து போல கொஞ்சம் சாப்பிடுவார். அதையே 'நான் காபி சாப்பிடற ஸந்நியாஸி தானே' என்று ரொம்ப நிஷித்தமாய் சொல்லிப்பார். சாப்பாடு, தினமும் அதே பதார்த்தங்கள், ரொம்ப அளவாய் சாப்பிடுவார். சப்பு கொட்டிண்டு சாப்பிட மாட்டார். இதெல்லாம் அவர் தாமஸத்தை தவிர்த்ததைப் பற்றி பேசினதால் சொல்கிறேன். அவர் சுத்த ஸத்வமாய் இருந்த தவ விரதங்கள் தான் எவ்வளவு! வெறும் அவல் மட்டும் சாப்பிட்டுக் கொண்டு, பாகவதம் படிச்சுண்டு 48 நாட்கள் குருவாயூரில் பஜனம் இருந்திருக்கிறார். இப்படி எவ்வளவோ!

Tired ஆ இருக்கும் போது walking போகக் கூட தெம்பில்லை என்று தோன்றும். கஷ்டப்பட்டு ஒரு park க்கு போய் walk பண்ணிட்டு வந்தா ஒரு தெம்பு வரும். அது போல, அவரைச் சரணடைந்த பின்னும் அப்படியே இருக்கிறோமே, என்ற தளர்ச்சி ஏற்படும் போது, 'அவர் சொன்னதைச் செய்வோம்' என்று அந்த புஸ்தகத்தை எடுத்து, சும்மா mechanical ஆ படிச்சாலே, வார்த்தைகளால் explain பண்ண முடியாத ஒரு நிம்மதி கிடைக்கிறது. அது கைவிட்டு போய்விடக் கூடாது என்ற பயத்தில் இன்னும் கொஞ்சம் படிப்போம்.

माभीर्मन्दमनो विचिन्त्य बहुधा यामीश्चिरं यातनाः
नामी नः प्रभवन्ति पापरिपवः स्वामी ननु श्रीधरः ।
आलस्यं व्यपनीय भक्तिसुलभं ध्यायस्व नारायणं
लोकस्य व्यसनापनोदनकरो दासस्य किं न क्षमः ॥

## 24. பகவானை சரணாகதி பண்ணினால் என்ன கிடைக்கும்?

கும்பகர்ணன் வதமடைந்த பின் ராவணன் தன் தம்பிகள், பிள்ளைகள் பல பேரை போருக்கு அனுப்புகிறான். அதிகாயனை லக்ஷ்மணன் வதம் செய்து விடுகிறான். மற்ற பேரை வானரர்கள் முடித்து விடுகிறார்கள். ராவணன் 'வந்திருப்பது மனிதர்களும் குரங்குகளுமா, இல்லை பகவானான நாராயணனும் தேவர்களுமே தானா! என்று எண்ணுகிறான்.

இந்திரஜித் மறைந்திருந்து ராமலக்ஷ்மணர்கள் வானரர்கள் எல்லாரையும் ப்ரம்மாஸ்திரத்தால் வீழ்த்தி விடுகிறான். விபீஷணனும் ஹனுமாரும் மட்டும், முன்பு ப்ரம்மா குடுத்த வரத்தினால் சிறிது நேரத்தில் அதிலிருந்து விடுபடுகிறார்கள். ஜாம்பவான் சொற்படி ஹனுமான், ஹிமயமலையில் ஒஷதிபர்வதத்தில் உள்ள ஸ்ஞ்சீவனி என்ற மூலிகையைத் தேடி பறந்து செல்கிறார்.

மூலிகைகள் அவரைப் பார்த்தவுடன் ஒளிந்து கொள்கின்றன. 'என்ன ராமரிடம் கூட கருணையில்லையா? என்ன செய்கிறேன் பார்' என்று ஹனுமார் அந்த மலையையே உலுக்கி கையில் தூக்கிக் கொண்டு வந்துவிடுகிறார். அந்த மூலிகைகளின் காற்றுப் பட்டவுடன் இறந்து கிடந்த ராமலக்ஷ்மணர்கள் வானரர்கள் எல்லாரும் உயிரோடு எழுந்து விடுகிறார்கள். எல்லாரும் ஹனுமாரைப் பூஜிக்கிறார்கள்.

---

தெய்வத்தையே நம்பி, சரணாகதி பண்ணி, வணக்கமாய் இருந்து, சோம்பலை ஒழித்து, இடையறாது பஜனம் பண்ணினால் என்ன கிடைக்கும்? அந்த தெய்வமாகவே ஆகிவிடலாம். சிதம்பரம் ஐயர் என்ற பக்தரின் பிள்ளை ஒரு விபத்தில் அடிபட்டு உயிர் பிழைக்க மாட்டான் என்று சொன்ன போது, ஸ்வாமிகள் ஸுந்தரகாண்ட ச்லோகத்தைச் சொல்லி பிழைக்க வைத்தார். ஹனுமார் மலையைத் தூக்கியது போல, இப்படி miracles சொல்றதுனா வரிசையா சொல்லிண்டே போகலாம். இன்னிக்கும் நடத்திண்டு இருக்கார். இந்த வருஷம் ஆராதனை நடக்குமா என்று கவலைப் படும் அளவில் ஒரு வயசான பாட்டி பழூர் அக்ரஹாரத்தில் படுக்கையில் இருந்தா. எந்த விக்னமும் இல்லாமல் ஆராதனை நடந்து முடிந்தது.

ஸ்வாமிகள் ஒரு incident சொல்லுவார். 'முல்லக்குடி ஸுந்தரேச சாஸ்த்ரிகள் னு ஒரு பெரியவர் மஹாபாரதம் ப்ரவசனம் பண்ணுவார்.

அவர் உச்சிஷ்ட கணபதி உபாசனை செய்பவர். அதனால் ஒரு வேளை நன்றாக சாப்பிடுவார். சாயங்காலம் ப்ரவசனத்தின் போது தட்டில் விழும் பணம் மறுநாள் சாப்பாட்டிற்கு போதுமானதாய் இருக்கும். தினமும் ப்ரவசனம் ஆரம்பத்தில் த்யான ச்லோகங்கள் சொல்லும் போது மூகபஞ்சசதீயிலிருந்து ஒரு ச்லோகம் ராகத்தோடு பாடுவார். ஒரு நாள் நான் கதை கேட்கப் போயிருந்தேன். ப்ரவசனம் ஆரம்பிக்கும் போது மழை வரும் போல இருட்டிண்டு வந்தது. அவர் ‘பக்தர்களின் ஏழ்மையை போக்கும் சுரதருவே’ என்று வரும் ஒரு ச்லோகத்தை உருக்கமாக பாடினார். வந்த மேகங்கள் எங்கோ போய்விட்டன. ப்ரவசனம் முடிஞ்சவுடன் ‘உங்கள் ப்ரார்த்தனை அந்த காமாக்ஷி அம்பாள் காதில் விழுந்து மழையை நிறுத்தி வெச்சுட்டாளே’ என்று சொன்னேன். அழுதுட்டார்.’

இந்த incident ஸ்வாமிகள் சொல்லக் கேட்ட போது ‘அந்த ப்ரார்த்தனையை நேரவே கேட்டு, மழையை நிறுத்தி வெச்ச காமாக்ஷி அம்பாள் நீங்க தானே’ என்று நான் நினைத்துக் கொண்டேன். அப்படி இந்த்ரன் யமனெல்லாம் இவர் சொன்ன பேச்சை கேட்டு நடக்கும் ஸித்த புருஷர் நம் ஸ்வாமிகள் என்பது என் துணிபு.

ஆனால், இந்த ஸித்திகளுக்கு எல்லாம் மேலான ஞானஸித்தியை வேண்டி, அதை அடைந்து பிரகாசித்தார். நம் முன் நடமாகும் தெய்வமாக விளங்கிய மஹாபெரியவா ‘உன் ஜன்மா ஸார்த்தகமாகும். (பயனுள்ளதாக ஆகும்)’ என்று ஸ்வாமிகளுக்கு guarentee குடுத்தார். ‘உலகில் விரல் விட்டு எண்ணும் அளவுக்கு தான் விவேகிகளே இருக்கா’ என்று சொன்ன சிவன் ஸார் ‘திருவல்லிக்கேணி ஸ்வாமிகள் ஒரு மஹான். அவரை அழைச்சுண்டு போக வைகுண்டத்திலிருந்து விமானம் வரும்’ என்று சொன்னார்.

இதெல்லாம் தெரிஞ்சும் நான் ஸ்வாமிகள் கிட்டயே கேட்டிருக்கேன், ‘இப்படி படிச்சுண்டு இருந்ததில் உங்களுக்கு என்ன கிடைச்சுது?’ என்று. அவர் ‘நான் இன்னிக்கு இப்படி உக்காந்து இருக்கேனே. அதுவே பகவதனுக்ரஹம் தான்’ என்றார். ஸ்வாமிகள் வாழ்க்கையே ஒரு ராம ராவண யுத்தம். It was a war between spiritualism and materialism. கல்யாணராமனாய் பிறந்த அவர், வீரராகவனாய் போர் புரிந்து, வெற்றியடைந்து விஜயராகவனாய் வீற்றிருப்பதைத் தான் அப்படி சொன்னார் என்று இப்ப தோன்றுகிறது.

விபீஷணனுக்கு ராமர் சரணாகதி அளித்த போது 'என்னை நம்பி வந்த எவருக்கும் நான் அடைக்கலம் அளித்து, அவர்களை எல்லாக் கோணத்திலும் காப்பாற்றுவேன். இது என் விரதம்' என்று சொன்ன வார்த்தையை ராமர் தனக்கே சொன்னதாக நம்பி, ஸ்வாமிகள், ராமரைத் தவிர வேறு ஒரு பற்றுக் கோடும் இல்லாமல் வாழ்ந்தார். அதனால், அவரும் ராமத் தன்மை அடைந்து, தன்னை நம்பி வணங்கிய எவருக்கும் ராமர் பேரால் புகலிடம் தந்து, ஆபத்திலிருந்து காப்பாற்ற முடிந்தது. வருஷக்கணக்காக இதைப் பார்த்துக் கொண்டு இருந்ததால், ஒரு நாள் நான் 'உங்களை ராமராகவே, வாஸுதேவனான பரம்பொருளாகவே, நினைக்கிறேன்' என்று சொன்னேன். ஸ்வாமிகள் as usual 'எனக்கு இன்னும் அப்படி தெரியலை. அந்த ஞானநிலை அடையத் தான் ப்ரார்த்தனை பண்ணிண்டு இருக்கேன்.' என்றார்.

அவர் பூஜைக்கு எதிராத்திலருந்து ஒரு மாமி பசும்பால் கொண்டு வந்து குடுப்பா. எப்பவும் பேசாதவா அன்னிக்கு 'உங்களை நான் வெங்கடேசப் பெருமாளாகவே பார்க்கிறேன் பெரியவா' என்று சொல்லிட்டுப் நமஸ்காரம் பண்ணிட்டுப் போயிட்டா. ஸ்வாமிகள் 'இவப்பா ரொம்ப பெரியவர். மஹாபெரியவா ஒத்துண்ட மஹான்' என்றார். நான் எழுந்து நமஸ்காரம் பண்ணி அவர் கிட்ட 'தயவு செய்ய வேண்டும்' என்று சொன்னேன். அவர் புன்சிரிப்போடு 'நான் அந்த மாதிரி இன்னும் ஆகலைன்னாலும், நீ அப்படி நினைச்சு பக்தி பண்ணினா, சீக்கிரம் அநுக்ரஹம் கிடைக்கும்' என்று சொன்னார்.

ஸ்வாமிகளையே தெய்வமாய் நம்பி, சரணாகதி பண்ணி, அவரிடம் frustrate ஆகாமல், வணக்கமாய் இருந்து, சோம்பலை ஒழித்து, அவர் சொன்னபடி எதோ சிலது படித்தாலே, அவர் அரும் பாடு பட்டு பெற்ற பெரும்பேற்றை, ஞானச் செல்வத்தை கருணையினால், சிரமப் படாமலே தந்து விடுவார் என்று எனக்கு நப்பாசை!

> நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து நான் நடுவே
>     வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
> ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கு என்
>     ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே

## 25. கலிப் ப்ரவாஹத்தை எதிர்த்துப் போக, பகவானின் நாமங்களே துணை

ராவணன் இந்திரஜித்தை 'ஏன் இன்னும் இந்த எதிரிகளை வெல்ல முடியவில்லை? எதாவது செய்' என்று ஏவுகிறான். இந்த்ரஜித் ஒரு மாயா ஸீதையை உருவாக்கி ஹனுமார் கண் பார்க்க அதை வெட்டி விடுகிறான். கலக்கமுற்ற ஹனுமார் ராமரிடம் வந்து சொல்ல, ராமர் மயங்கி விழுகிறார். லக்ஷ்மணன் அவரை சமாதானப் படுத்துகிறான். ஆனால் 'உங்கள் சத்யமும் தர்மமும் என்னாச்சு? இப்படி ஒரு கஷ்டம் வந்துடுத்தே?' என்று ஒரு வார்த்தை சொல்கிறான்.

விபீஷணன் வந்து 'இது இந்திரஜித்தின் மாயை. இப்படி திசை திருப்பி விட்டு இந்திரஜித் நிகும்பிலை என்ற இடத்தில் ஒரு யாகம் செய்கிறான். அதை முடித்து விட்டால் அவனை யாருமே வெல்ல முடியாது. அதனால் லக்ஷ்மணனை அனுப்புங்கள். அவனை ஜயித்து வருகிறோம்' என்று ராமரிடம் சொல்கிறான். சற்று தெளிந்த ராமரும் அவ்வாறே அநுமதி அளிக்கிறார். வானரப் படையோடு சென்று லக்ஷ்மணன் அந்த யாகத்தை தடுத்து விடுகிறான்.

வெளியே வந்த இந்திரஜித் லக்ஷ்மணனோடு கடுமையான யுத்தம் செய்கிறான். மூன்று நாட்கள் தொடர்ந்து யுத்தம் செய்து, எந்த அஸ்த்ரமும் பலிக்காத போது லக்ஷ்மணன் 'தசரத குமாரனான ராமர் தர்மாத்மா, ஸத்யஸந்தர் என்பது உண்டானால் அவர் பௌருஷத்தின் பேரால் விடும் இந்த அம்பு இந்திரஜித்தைக் கொல்லட்டும்' என்று ஒரு அம்பை விட இந்திரஜித் தலை கீழே விழுகிறது.

வெற்றி வீரனாய் திரும்பிய லக்ஷ்மணனை ராமர் அணைத்து, ஆச்வாஸப் படுத்தி ஸுஷேணரிடம் அவனுக்கும், எல்லா வானரர்களுக்கும் காயங்களுக்கு மருந்து போடச் சொல்கிறார்.

---

ஸ்வாமிகள் அந்த ராமாயண புஸ்தகத்தை படிச்சுண்டு ராமாயண காலத்திலியே இருந்துண்டு இருந்தார். வெளி உலகத்தையே பார்க்கவில்லை. practical ஆ இருக்கவில்லை. வேலையை விட்டதற்கு, கருத்தடை பண்ணிக் கொள்ளவில்லை என்பதற்கெல்லாம் அவரை புத்தி கெட்டவர் என்று திட்டினவர்கள் கூட உண்டு. 'ஒரொருத்தர் communism, அந்த ism இந்த ism என்று அதுக்காக போராடறேன் என்று குடும்பம், உடம்பு எதையும் கவனிக்காமல் இருந்திருக்காளே!

அது மாதிரி நான் ஒருத்தன். இந்த நாரத பக்தி ஸூத்ரத்துல சொன்னதை நம்பி வந்தது வரட்டும் என்று இருக்கேன்' என்பார்.

ஆனால், நின்று, யோசித்துப் பார்த்தால் தான், அப்படி கலியின் பிரவாஹத்தை எதிர்ப்பது, எவ்வளவு தீரமான செயல் என்பது புரியும். லக்ஷ்மணன் ராமருடைய சத்ய தர்மத்தால் கஷ்டம் வந்ததே என்று நினைத்தாலும், முடிவில் அந்த தர்மத்தின் ஸத்யத்தின் பேரால் தான் இந்திரஜித்தை ஜயிக்க முடிந்தது. அது போல, ஸ்வாமிகள், ஸத்யம் தர்மம் என்று சொல்லிக் கஷ்டம் தான் பட்டார் என்று வெளியில் தோன்றினாலும், அவர் ஊக்க சக்தியாய் இருந்ததால் தான் இன்னிக்கும் எத்தனை பேர் ராமாயண பாகவதம் படிக்கிறார்கள்! ந்யாய வழியில் இருக்கிறார்கள்!

ராவணனுடைய பத்து தலை என்பது அதீத மூளைக்கும், இந்திரஜித்தின் மாயை என்பது இந்தக் கலியின் ப்ரவாஹத்திற்கும் (நவீன விஞ்ஞானம், பணத்தையும் பயத்தையும் காட்டி ஆள் சேர்க்கும் அன்னிய மதங்கள், நம் மதத்திலேயே இக்ஷிணி, துர்தேவதை உபாசனையை நம்பும் போலி சாமியார்கள்) இவற்றின் உருவகம் என்று எனக்கு தோன்றுகிறது.

ஸ்வாமிகள் வழியில், அவர் சொன்ன अपराजित पिङ्गाक्ष नमस्ते रामपूजित என்பது போன்ற நாமங்களை நம்பி, எளிமையாய் பக்தி செய்து வந்தால், வேண்டிய வரங்கள் பெற்று, சின்ன கஷ்டங்களை தாங்கும் சக்தி கிடைத்து, போலி சாமியார்களிடம் போய் நிற்காமல் இருப்போம். அப்படி இருந்தால், சாகறத்துக்குள் ஒரு நாள் ஸ்வாமிகளின் தத்வத்தை உள்ளபடி புரிந்து கொண்டு, இன்று கலியின் ப்ரவாஹத்தில் நாம் தத்தளித்துக் கொண்டு இருந்தாலும், அதில் அடிச்சுண்டு போகாமல் கரை ஏற்றுவார் என்று என் நம்பிக்கை.

नान्या स्पृहा रघुपते हृदयेस्मदीये
सत्यं वदामि च भवान् अखिलान्तरात्मा ।
भक्तिं प्रयच्छ रघुपुङ्गव निर्भरां मे
कामादि दोषरहितं कुरु मानसं च ॥

**26. புலன்களை அடக்க முடியாது. தெய்வ பக்தியை தெய்வ பாசமாக உயர்த்திக் கொண்டவருக்கு புலன்கள் அடங்கி விடும்.**

புத்ர சோகத்தால் பீடிக்கப் பட்ட ராவணன் ‘நிஜமாகவே ஸீதையை கொல்லுவேன்’ என்று கிளம்புகிறான். ஒரு மந்திரி ‘வேதம் படிச்சவன் நீ. ஸ்த்ரீஹத்தி பண்ணாதே. இப்பவும் ராமரோடு யுத்தம் செய்து வென்றால் ஸீதையை அடையலாம்’ என்று சொன்னவுடன் திரும்புகிறான். அவன் அனுப்பிய லக்ஷம் வீரர்கள் கொண்ட மூலபல சைன்யத்தை ராமர், ருத்ர பகவானைப் போல தனி ஒருவராய் நின்று, அஸ்த்ர மஹிமையால் அழிக்கிறார்.

ராவணன் யுத்தத்திற்கு வருகிறான். விபீஷணனை கொல்லப் பார்க்கும் அவன் முயற்சியை லக்ஷ்மணன் தடுத்து விடுகிறான். உடனே ராவணன் ஒரு வேலால் லக்ஷ்மணனை வீழ்த்தி விடுகிறான். ராமர் கோபம் கொண்டு ‘இன்று ராமரின் ராமத் தன்மையை உலகம் காணப் போகிறது. இன்று பொழுது சாய்வதற்குள் உலகில் ராமனோ, ராவணனோ ஒருத்தர் தான் மிஞ்சி இருப்பார்கள்’ என்று சபதம் செய்கிறார். ஹனுமார் மீண்டும் ஒருமுறை ஸஞ்சீவினி மலையைக் கொண்டு வந்து லக்ஷ்மணனை உயிர்ப்பிக்கிறார்.

இந்திரன் ராமருக்கு தன் தேரையும் சாரதியான மாதலியையும் அனுப்புகிறான். ராமர் வணங்கி அதை ஏற்கிறார். தேவர்களும், ரிஷிகளும், வானரர்களும், ராக்ஷஸர்களும் பார்க்க பயங்கரமான ராம ராவண யுத்தம் நிகழ்கிறது. ராவணன் கலகலத்து போகவே அவனுடைய சாரதி அவனை அப்பால் கொண்டு போகிறான். ராவணன் அதை கண்டித்து மீண்டும் யுத்த களத்திற்கு வருகிறான்.

அதற்குள் அகஸ்த்ய முனிவர் அங்கு வந்து ராமருக்கு ஆதித்ய ஹ்ருதயம் என்ற ச்லோகத்தை உபதேசிக்கிறார். அதை மூன்று முறை ஜபித்து, சூரிய பகவானின் அநுக்ரஹத்தால் புத்துணர்ச்சி பெற்ற ராமர், ராவணனை கடுமையாக தாக்குகிறார். அவன் தலையை அம்பால் வீழ்த்துகிறார். ஆனால் அந்த தலை மீண்டும் முளைக்கிறது. இப்படி நூறு முறை ராமர் வீழ்த்திய அவன் தலை, மீண்டும் மீண்டும் முளைக்கிறது. ராமர் ஒரு கணம் மனம் தளர்கிறார். மாதலி ஞாபகப் படுத்தியவுடன் ராமர், ராவணன் மீது ப்ரம்மாஸ்த்ரத்தை விடுகிறார். ராவணன் மடிந்து விழுகிறான். தேவர்கள் ராமர் மீது பூமழை பொழிகிறார்கள். மூவுலகமும் நிம்மதி அடைந்து மகிழ்கிறது.

ராவணன் மனைவிமார் வந்து அவன் உடல் மீது விழுந்து அழுது புலம்புகிறார்கள். மந்தோதரி ‘விபீஷணன் பேச்சைக் கேட்காததால் இப்படி கிடக்கிறாயே. பாபம் செய்த நீ வீழ்ந்து கிடக்கிறாய். புண்யாத்மாவான விபீஷணன் நல்வாழ்வு பெற்றான். புலன்களை அடக்கி வரங்களைப் பெற்றாய். அந்த புலன்களே உன்னை பழி வாங்கி விட்டதே’ என்று புலம்புகிறாள்.

ராமர் விபீஷணனைக் கொண்டு ராவணனுக்கு முறைப்படி ஸம்ஸ்காரம் செய்விக்கிறார். பின் லக்ஷ்மணனைக் கொண்டு, விபீஷணனை இலங்கைக்கு அரசனாக பட்டம் சூட்டி வைக்கிறார்.

---------------------------------------------

ஸ்வாமிகளுக்கு பிறந்ததிலிருந்து பக்தி வைராக்யம் இருந்தாலும், முறைப்படி திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கையில் இருந்தபடி, பாகவத சாஸ்த்ரத்தில் சொன்ன விதத்தில் பஜனம் செய்து, தெய்வ பக்தியை, தெய்வபாசமாக உயர்த்திக் கொண்டார். புலன்கள் முழுமையாக அடங்கி விட்டதை, பல வருடங்கள் உறுதி செய்து கொண்ட பின், கனவிலும் கூட எந்த சலனமும் இல்லாத நிலை அடைந்த பின், ஆசா பாசங்கள், பொருட்பற்று எல்லாம் முற்றிலும் அகன்ற பின், ஸந்நியாஸக் கோலத்தை ஏற்றார்.

ஸ்வாமிகளுடைய ஸந்யாஸத்தை நினைக்கும் போது அவருடைய அம்பாள் பக்தியையும் நினைக்க வேண்டும். மூன்று வயதில் அம்மாவை இழந்து விட்ட ஸ்வாமிகள், எட்டு வயதில் மூகபஞ்சசதீ ஸ்தோத்ரத்தில் ‘காமாக்ஷியின் கடாக்ஷம் ராமரைப் போல விளங்குகிறது’ என்ற வரியைக் கண்டு அப்பாவிடம் ‘நம்ம ராமரைப் பற்றி வருகிறது’ சொல்லி சந்தோஷப்படும் போது, கூட இருந்த ஒரு பெரியவர் ஸ்வாமிகளிடம் ‘இந்த புஸ்தகத்தை பற்றுக் கோடாக வைத்துக்கொள்’ என்று உபதேசித்துள்ளார். ஸ்வாமிகள், அம்மா இல்லாத ஏக்கத்தை மூகபஞ்சதீ மூலம் அந்த காமாக்ஷி அம்பாளையே துதித்து ஆற்றிக் கொள்வார். வெளியில் தெரியும்படி, நாராயணீயம் என்ற க்ரந்தத்தை அவருடைய மூச்சுக் காற்று என்று நினைக்கும்படி, அத்தனை ஆவர்த்தி பண்ணியிருக்கிறார். அதே அளவிற்கு பக்தியோடு, மூகபஞ்சசதீ ஸ்தோத்ரத்தை கணக்கில்லாமல் பாராயணம் செய்திருக்கிறார். அந்த ஸ்தோத்ர பாராயணத்தின் பலனாகத் தான் தனக்கு ஸந்யாஸம் கிடைத்தது என்று பல முறை கூறியுள்ளார். ஸந்யாஸம் ஏற்றுக் கொள்ள தாயாரின் அநுமதி பெற வேண்டும் என்ற சாஸ்த்ரத்தை இப்படி கடைபிடித்தார் என்று தோன்றுகிறது.

ஒரு முறை மூகபஞ்ச சதீ படிக்கும் போது அவர் அடுத்த ஸ்லோகம் படித்தார். ‘நான் இந்த முந்தின ஸ்லோகம் படிக்கவில்லையே’ என்று சொன்னேன். சரி என்று படித்தார். ‘ஓ, இதை படித்து விட்டீர்கள்’ என்று சொன்னேன். ‘பாதகமில்லை. இது மீண்டும் படித்தது எனக்கு பாதாம் ஹல்வா சாப்பிடுவது போல இருந்தது’ என்றார். அந்த ஸ்லோகத்தின் பொருள் ‘அம்பாளுடைய கடாக்ஷம் கிடைத்தவர்களுக்கு மனதிற்கு யோக்யமான போக்யங்கள் எல்லாம் கிடைக்கும்’. அவர் diabetes இல்லைனாலும் ஸ்வீட் சாப்பிட்டு இருக்க மாட்டார். ஏன்னா அவருக்கு கரும்பு துவர்த்தது, செந்தேன் புளித்தது.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்ற பதிகத்தை சொல்லி யோக்யமான போக்யம் பகவானுடைய பாதத்தில் பக்தி தான் என்று எடுத்துரைத்தார். ‘நான் சொல்லறது பெரிசில்லை. ஒரு ராஜாவா இருந்த குலசேகர ஆழ்வார் அப்படி சொல்கிறார்’ என்று முகுந்த மாலையிலிருந்து காண்பித்தார்.

எனவே நாம் புலனடக்கத்தைப் பற்றி விசாரிக்காமல், அதற்கு குண்டலினி யோகம், மந்த்ர தந்த்ரம், யம நியமம் என்று பலதை தெரிந்து கொண்டு குழம்புவதை விட, விஷயங்களை தோஷ புத்தியோடு அநுபவித்துக் கொண்டு, ஸ்வாமிகள் காட்டிய வழியில் இடைவிடாத பாராயணத்தின் மூலம் பக்தியை வளர்த்துக் கொள்ளலாம். ப்ரம்மசர்யம், ஸந்நியாஸம் எடுத்துண்டு, புலனடக்கத்தை மோக்ஷத்திற்கு நம்பும் சிலர், எதாவது மடம், மன்றம் என்று ஒரு institution, trust என்று ஆரம்பித்து அது மூலமாக பணம் புகழில் பேராசை பிடித்து, நோக்கத்தை மறந்து, மேலான நன்மையை இழந்து விடுகிறார்கள். அதற்கு நடுவில் தனித்து இயங்கி, பணத்தில் பற்று வைக்காமல், நிஜமான வைராக்யத்தோடு விளங்கிய ஸ்வாமிகள் மஹிமையை நினைத்துப் பார்க்க வேண்டும். மனத்தை ஸ்வாமிகளிடம் திருப்பி விட்டால், புலன்கள் நம்மை தவறான பாதையில் இழுத்துச் செல்லாமல் அவரே காப்பாற்றுவார். மேலும் ஐவரும் கைவிட்டு மெய்விடும் போது, ஆனந்தமாய் அந்த பகவானுடைய பாதங்களில் அடைக்கலம் புகுந்து விடலாம்.

## 27. ஞானம் பிறக்கும், உண்மை விளங்கும், வால்மீகி ராமாயணத்தை திரும்ப திரும்ப படித்துக் கொண்டே இரு

ஹனுமார் ஸீதாதேவியிடம் ராமரின் வெற்றியைச் சொல்லி 'இனி கவலை வேண்டாம். நீங்கள் பக்தனான விபீஷணன் க்ருஹத்தில் தான் இருக்கிறீர்கள்' என்று சொல்கிறார். ஸீதை ஹனுமாரை வாயார வாழ்த்துகிறாள். பின்னர் ஹனுமார் 'உங்களை ஹிம்ஸித்த இந்த ராக்ஷஸிகளுக்கு தகுந்த தண்டனை குடுக்கிறேன்' என்று சொன்ன போது, 'வேண்டாம், பிழை பொறுத்தல் பெரியோர் கடமை. மன்னித்து விடு' என்று சொல்கிறாள்.

பின்னர் விபீஷணன் ஸீதாதேவியை ராமரிடம் அழைத்து வர, ராமர் அக்னிப்ரவேசத்தால் தூய்மை அடைந்த பிராட்டியை ஏற்கிறார். ப்ரம்மாதி தேவர்கள் ராமரை முழுமுதற் கடவுளாக துதிக்கிறார்கள். பரமேச்வரன் தசரதரை அழைத்து வர, ராமர் அவரை வணங்குகிறார். தசரதர் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

பிறகு புஷ்பக விமானத்தில் சுக்ரீவன் முதலிய வானரர்களோடும், விபீஷணன், அவன் மந்திரிகள், லக்ஷ்மணனோடும், ஸீதையோடும் ராமர் அயோத்தி கிளம்புகிறார். ஸீதையை பிரிந்த பின் நடந்த கதையை ராமர் ஸீதைக்கு சொல்கிறார். அன்று பரத்வாஜ முனிவரின் ஆச்ரமத்தை அடைகிறார்கள். ப்ரத்வாஜர் ஞானதிருஷ்டியால் நடந்த அனைத்தையும் தான் கண்டவாறு கூறி, அன்றிரவு அங்கு தங்கி தன் விருந்தை ஏற்று, மறுநாள் செல்ல உத்தரவிடுகிறார். ராமரும் அதற்கு ஒத்துக் கொண்டு ஹனுமாரை பரதனிடம் அனுப்புகிறார்.

ஹனுமார் பரதனை சந்தித்து ராமர் வருகிறார் என்ற இனிய செய்தியை கூறியவுடன் பரதன் ஆனந்தத்தில் மூர்ச்சிக்கிறான். பிறகு ஹனுமாரை பூஜித்து பலகையில் அமர்த்தி நடந்த விவரங்கள் அனைத்தையும் கேட்டறிகிறான். ஜனங்கள் அயோத்தியை மாலைகளாலும் தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கிறார்கள்.

மறுநாள் ராமர் முதலானோர் விமானத்தில் வந்து சேர, பரதன் அவர்களை வணங்கி வரவேற்கிறான். ஜனங்கள் எல்லாரும் ராமரை கைகூப்பி வணங்குகிறார்கள். ராமரும் ஸீதையும் அம்மாக்களையும், குருவையும் வணங்கி அவர்களை மகிழ்விக்கிறார்கள். பரத சத்ருக்னர்கள் லக்ஷ்மணனை வணங்குகிறார்கள்.

பின்னர் நடந்த விஷயங்களை ராமர் மந்திரிகளுக்கு சொல்லிண்டே வர ரதத்தில் அயோத்தி சென்றடைந்து அன்றிரவைக் கழிக்கிறார்கள். சுக்ரீவன் வானரர்களை அனுப்பி நான்கு ஸமுத்ரத்திலிருந்தும், கங்கை முதலிய ஐநூறு நதிகளிலிருந்தும் பட்டாபிஷேகத்திற்கு புண்ய தீர்த்தம் கொண்டு வரச் செய்கிறான்.

மறுநாள் ராமரையும் ஸீதையயும் அலங்கரித்து, ரத்ன ஸிம்ஹாஸனத்தில் அமரச் செய்து, வானர ராஜனான ஸு^க்ரீவனும் ராக்ஷஸ ராஜனான விபீஷணனும் கவரி வீச, சத்ருக்னன் குடை பிடிக்க, வஸிஷ்டர் முதலான ரிஷிகள் மந்திரபூதமான ஜலத்தினால் ஸ்ரீராமரை பதினான்கு உலகிற்கும் சக்ரவர்த்தியாக பட்டாபிஷேகம் செய்து வைக்கிறார்கள். !! ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஹனுமத் ஸமேத ஸ்ரீராமசந்த்ர மஹராஜ் கி ஜய் !!

ராம ராஜ்யத்தில் எல்லோரும் ராமா ராமா என்று அவருடைய குணங்களையும் கதைகளையும் பேசிக் கொண்டும், ஒருவரை ஒருவர் ஹிம்ஸிக்காமலும் இருந்ததால், உலகம் ராம மயமாக, ஆனந்த மயமாக ஆகிவிட்டது. இந்த ராம கதையை படிப்பவர்கள் வேண்டிய வரங்களை ராமபிரானின் அநுக்ரஹத்தால் பெறுவார்கள்.

रामो रामो राम इति प्रजानां अभवन् कथाः ।
रामभूतं जगदभूत् रामे राज्यं प्रशासति ॥

---

இந்த ஒரு பத்து ஸர்கத்தில் ஐந்து முறை ராம கதை வருகிறது. எப்படி வால்மீகி முனிவர் ராம கதையை எத்தனை முறை சொன்னாலும் திருப்தி அடையாமல் திரும்பச் சொல்லுகிறாரோ, அது போல ஸ்வாமிகள் ராமகதையை திரும்பத் திரும்பச் சொல்லுவார். ஒவ்வொரு முறையும் புதிதாகப் படிப்பது போல ஆனந்தப் படுவார்.

நாமும் ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தையும், ஸ்வாமிகள் அதை வாழ்ந்து காட்டியதையும், திரும்பத் திரும்ப பேசிக் கொண்டும், அவர் காட்டிய வழியில் நடந்தும், அவரிடம் பக்தி செய்து, அவருடைய அருளைப் பெறுவோம்.

श्रीरामचन्द्राश्रित सद्गुरूणां पादारविन्दं भजतां नराणाम् ।
आरोग्यं ऐश्वर्यं अनन्तकीर्तिः अन्ते च विष्णोः पदमस्ति सत्यम् ॥

## பலச்ருதி - ராமாயணம் குறை போக்கும்

ராமாவதாரம் நிறைய பேர்களுடைய குறை போக்கியது. அதனால் ராம கதை, ராம நாமம், ராம தர்சனம், ராம பக்தி குறை போக்கும் என்பார் ஸ்வாமிகள்.

अमोघं दर्शनं राम न च मोघस्तव स्तवः ।
अमोघास्ते भविष्यन्ति भक्तिमन्तस्च ये नराः ॥

என்று ப்ரஹ்மாதி தேவர்கள் ராவண வதத்துக்கப்பறம் ராமரை கொண்டாடுகிறார்கள். அமோகம் (अमोघं) not அமோஹம், என்றால் வீண்போகாது (won't go a waste).

ஸ்வாமிகள் இதை விஸ்தாரமாய் சொல்வார்.

- தேவர்களுக்கு ராவணனனிடம் இருந்த பயம், விஷ்ணு பகவான் அவர்களுக்கு அபயம் குடுத்த உடனே நீங்கியது.
- தசரதருக்கு கையில் எடுத்து கொஞ்ச ஒரு பிள்ளை இல்லையே என்ற குறை ராமாவதாரத்தால் நீங்கியது.
- விச்வாமித்ரருக்கு யாகம் முடிக்க முடியவில்லையே என்ற குறை ராமர் யக்ஞ ரக்ஷணம் செய்ததால் நீங்கியது.
- அஹல்யா சாப விமோசனம் மூலம் சதானந்தருக்கு தன் அம்மா அப்பா பிரிந்து இருக்கிறார்களே என்ற குறை நீங்கியது.
- ஸீதைக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைப்பானா என்ற கவலை ஜனக மன்னருக்கு ராமர் சிவ தனுசை வளைத்தவுடன் நீங்கியது.
- விராதனுக்கும் கபந்தனுக்கும் ராமர் சாப விமோசனம் அளித்தார்
- கர தூஷணாதி 14000 ராக்ஷஸர்கள் வதத்தால் தண்டகா வனத்து ரிஷிகளுடைய பயம் நீங்கியது.
- சரபங்கர், ஸுதீக்ஷ்ணர், சபரி போன்றவர்களுடைய தபஸ் ராம தர்சனத்தல் முழுமை ஆனது
- ரிஷ்யமூக மலையில் ஒளிந்து கொண்டிருந்த ஸுக்ரீவனுக்கு "இப்படியே இந்த மலையிலேயே வாழ்க்கை முழுக்க போயிடுமோ" என்ற கவலை ராமர் வாலி வதம் செய்ததால் நீங்கியது.
- வானரர்களுக்கு சீதை இருக்கும் இடத்தை சொன்னவுடன் சம்பாதிக்கு இறக்கை முளைத்து அந்த குறை தீர்ந்தது

- ஹனுமாருடைய ராம பக்தியால் வானரர்கள் மட்டும் இல்லை, ராமருக்கும் ஸீதைக்குமே நிம்மதி ஏற்பட்டது
- மைனாக மலை ராமகார்யமாய் போகும் ஹனுமாருக்கு ஸஹாயம் பண்ணினதால், இந்த்ரன் அபயம் குடுத்தான். கடலுக்குள்ளயே ஒளிஞ்சுண்டு இருக்கோமே என்ற அதன் குறை நீங்கியது.
- விபீஷணன் ராமரை சரணாகதி பண்ணினதால், லங்கைக்கு ராஜாவாகி, ராவணனால் எற்பட்ட அவமானம் நீங்கியது.
- இந்த்ரஜித், கும்பகர்ணன் வதத்தால் தேவர்கள் பயம் நீங்கியது. ராவண வதத்தால் 14 உலகமும் நிம்மதி அடைந்தது
- ராமர் திரும்ப வந்து ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டதால் பரதனுக்கும் அயோத்தி ஜனங்களுக்கும் ராமரை பிரிந்து 14 வருஷம் இருந்த குறை நீங்கியது.

நாமும் ராம கதையை, ஸ்ரீ கோவிந்த தாமோதர ஸ்வாமிகள் அதை வாழ்ந்து காட்டிய மஹத்துவத்தைப் பேசிக் கொண்டு ராம ராஜ்யத்தில் இருப்பதால், நமக்கும் ஒரு குறையும் இல்லை.

## முடிவுரை

ஸ்வாமிகள் கிட்ட ஒருத்தர் ‘நீங்க எத்தனையோ ஜன்மங்களாக ராமாயணம் பாகவதம் படிச்சிருக்கணம். அதனால் தான் இப்படி விஸேஷ அர்த்தங்கள் சொல்ல முடிகிறது’ என்று சொன்னார். ஸ்வாமிகள் ‘நீங்க சொல்றது வாஸ்தவமா இருக்கலாம். ஆனா அப்படி ராமாயணம் படிச்சுட்டு, மீண்டும் ஒரு ஜன்மா எடுத்து வந்து இவ்வளவு கஷ்டப் படறேன் என்றால், அந்த வாட்டி ராமாயணத்தை சரியா உபாசனை பண்ணாம பஹிர்முகமாக, பணம் புகழுக்கு ராமாயணத்தை வித்துண்டு இருந்திருப்பேன். இந்த ஜன்மத்திலயாவது ஒழுங்கா இருந்து, ராமர் திருவடிகளில் போய்ச் சேரவேண்டும்’ என்று சொன்னார். அது நம்ம எல்லாருக்கும் பொருந்துமே!

ஸ்வாமிகள் ஒரு வண்டு மாதிரி ராமாயண வனத்திலிருந்து தேன் எடுத்து நமக்குக் குடுத்திருக்கார். நான் கிளி மாதிரி அவர் சொன்ன விஷயங்களைத் திருப்பிச் சொல்லறேன். அதற்கே, எனக்கு க்யாதி லாப பூஜை வர வாய்ப்பு இருக்கு. அது பின்னாடி நான் போனால், ஸ்வாமிகள் மேலே சொன்னதை, எனக்கு நினைவுபடுத்துங்கள். அதிலிருந்து மீண்டு ஸ்வாமிகளின் திருவடிகளில் சென்று சேருவோம்.